Registered at the G. P. O. asa Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 20

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET COLOMBO—12.



'சின்வா'




பாதரகைஷகளில் பிர பல்யமிகுந்த பெயர்

இலங்கை பூராவிலும் கிடைக்கும் இதையேவற்புறுத்தி பாவியுங்கள்

சின்வா பாதரகைஷகளில் சிறந்தது

சின்வா

72, 1-ம் குறுக்குத் தெரு, கொழும்பு.



புத்தகம் 14 திருவள்ளுவர் ஆண்டு 1990 வைகாசித் திங்கள் 31-ம் நாள் 14–6–1959 ஞாயிற்றுக்கிழமை துல்ஹஜ் பிறை 6 இதழ் 2


# அடுத்த பொதுத் தேர்தல் தமிழ் மக்களுக்கு ஒரு திருப்பமாக அமையும்

## வயது வந்தவர்கள் அனைவரும் வாக்காளராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்

### வாலிபர்களுக்கும் தொண்டர்களுக்கும் வன்னியசிங்கம் வேண்டுகோள்

"அடுத்து வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் பல வழிகளிலும் தமிழ் பேசும் மக்களுக்கு அதி முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திருப்பமாக அமையப் போகிறது. அத் தேர்தலை அவர்கள் மிகவும் கவனமாகவும், நிதானமாகவும், நேர்மையாகவும், முழுமையாகவும் பயன் படுத்த இப்போதிருந்தே சகல முன்னேற்பாடுகளையும் செய்ய வேண்டும். அசமந்தமாகவோ, அலட்சியமாகவோ இருந்துவிட லாகாது. மிகப் பிரதானமாக பதினெட்டு வயது வந்த ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழ் மகளும் தத்தம் பெயர்களை வாக்காளர் இடாப்பில் பதிவு செய்து கொள்வது இனத்துக்கும், மொழிக்கும், தம்மைப் பெற்றெடுத்த ஈழத் தமிழ் நாட்டுக்கும் செய்யும் நீங்காக் கடமை என்று கொள்ள வேண்டும்"

தமிழரசுத் தலைவரும் கோப்பாய் பிரதிநிதியுமான திரு கு. வன்னியசிங்கம் இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களுக்கு சுதந்திரன் மூலம் வெளியிட்டுள்ள ஒரு விசேஷ அறிக்கையில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பிரஸ்தாப அறிக்கையில் அவர் தொடர்ந்து தெரிவிப்பதாவது:

"பாராளுமன்றத் தேர்தல்களிலும், மாநகர சபை, நகர சபை, பட்டின சபை, கிராமச் சங்கம் ஆகிய ஸ்தல சுயாட்சி மன்றங்களுக்காய தேர்தல்களிலும் உபயோகிக்கப்படும் வாக்காளர் இடாப்புகள் சட்டப்படி வருடா வருடம் மீள ஆய்ந்து திருத்தப் படுகின்றன.

முக்கியத்துவம்

"ஆயினும் இவ்வாண்டு நடைபெறுகின்ற திருத்தப் பதிவு இரண்டு விதத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது:

1. சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட தேர்தல் திருத்தச் சட்டம் காரணமாக இவ் வருடம் 18 வயதுக்கு மேற்பட்டவர்களின் பெயர்களும் தேர்தல் இடாப்பில் சேர்க்கப் படவிருக்கின்றன. (இதற்கு முன்னர் 21 வயதுக்கு மேற்பட்டவர்களே சேர்க்கப் பட்டார்கள்)

2. சென்ற ஆண்டில் நடைபெற்ற வகுப்புக் கலவரங்கள் காரணமாக தமிழ் மக்கள் ஏராளமானோர் இடம் பெயர்ந்து வசிக்கிறார்கள். அவர்கள் ஆங்காங்கே தமது பெயர்களைத் திரும்பவும் பதிவு செய்தல் அவசியமாகின்றது.

"அடுத்து வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலும், ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களும் மீள ஆய்ந்து திருத்தியமைக்கப்பட்ட இடாப்புகளின் படியே நடக்குமாதலால் வாக்குரிமையுள்ளோர் அனைவரும் தங்கள் பெயர்களை உரிய இடாப்பில் பதிவித்துக் கொள்வது இன்றியமையாததாகும். எனவே:

பதிவு அவசியம்

1. 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் தங்கள் பெயர்களைப் பதிவு செய்விப்பதில் அக்கறை கொள்ளவேண்டும்.

2. இடம் பெயர்ந்து புதிய இடங்களில் வசிப்பவர்கள் புதிய இடத்தில் தம் பெயர்களைப் பதிவிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். முக்கியமாக கலவரத்தின்போது கொழும்பையும் ஏனைய சிங்களப் பிரதேசங்களையும் விட்டு யாழ்ப்பாணம் மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்குப் போய்விட்டவர்களும், சுற்று வட்டாரக் கிராமங்களிலிருந்து கொழும்பு நகரத்துக்குள்

(8-ம் பக்கம் பார்க்க)

# ஆயுள் வேத சித்த வைத்தியர்களின் சீற்றம்

## அடுத்த தேர்தலில் ஆட்சியைக் கவிழ்க்கிறோம் என்கிறார்கள்

### வைத்திய நற்சாட்சிப் பத்திரம் வழங்குவதில் ஏற்பட்டுள்ள தகராறு

(சுதந்திரன் நிருபர்)

நாட்டின் சுதேச வைத்தியத் துறைகளை மதிப்பதிலும் வளர்ப்பதிலும் பண்டாரநாயகா அரசாங்கம் ஒரு திட்டவட்டமான கொள்கையை அனுஷ்டிக்காதது பற்றி ஆயுள்வேத, சித்த வைத்தியர்கள் சீற்றம் அடைந்துள்ளார்கள் என்று தெரிகிறது. வைத்திய நற்சாட்சிப் பத்திரம் வழங்குவது சம்பந்தமாகத் தாங்கள் சௌக்கிய சேவை டைரக்டரால் அவமதிக்கப்

(9-ம் பக்கம் பார்க்க)

# தாதிப் பெண்களுக்கான தேர்வுப் பரீட்சை

## எஸ். எஸ். ஸி. தேறிய தமிழ்ப் பெண்களுக்கு அரிய சந்தர்ப்பம்

## யாழ்ப்பாணத்தில் பயிற்சி: பயிற்சியின் போது ரூ115 சம்பளம்

மருத்துவத் துறையில் தாதிப் பெண்களாகக் கடமையாற்ற விரும்பும் தமிழ்ப் பெண்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. தேர்வுப் பரீட்சையில் சித்தியெய்துபவர்கள் மாதம் ரூ. 115 உடன் ஒன்றரை வருடப் பயிற்சி பெறுவர். பயிற்சியின் பின்னர் அதிக சம்பளம் கிடைக்கும். பயிற்சி யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

தாதிப் பெண்களைத் திரட்டுவதற்கான ஒரு திட்டத்தை அரசாங்கம் வெளியிட்டுள்ளது. தமிழில் சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பு (எஸ். எஸ். ஸி) சித்தியெய்திய பெண்கள் தேர்வுப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். வயது 17க்கு மேல் 25க்கு உட்பட்டவராக இருக்கவேண்டும். விவாகமானவர் விண்ணப்பிக்க முடியாது.

கடைசித் தேதி

விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்பும் கடைசித் தேதி 26-6-1959 ஆகும். விலாசம் சௌக்கிய சேவை அதிபதி தபால் பெட்டி இலக்கம் 500, கொழும்பு. விண்ணப்பம் உரிய பத்திரத்தில் பதிவுத் தபால் மூலம் அனுப்பப் பட வேண்டும்.

பரீட்சை 29-8-1959-ல் நடைபெறும். பாடங்கள் மூன்று: (1) வியாசம் (2) இலங்கைச் சரித்திரம் (3) இலங்கைப் பூமிசாத்திரம்.

பயிற்சி யாழ்ப்பாணத்தில்

பரீட்சையில் தேறியவர்கள் உடனடியாக மாதா மாதம் 115 ரூபாவுடன் ஒன்

(9-ம் பக்கம் பார்க்க)


# இந்த சக்தி வாய்ந்த நிவாரணி மார்பு நோய்களை விரட்டுகிறது!

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(Richelet's Pectoral)



ஒரு பிரசித்திபெற்ற தயாரிப்பு. குறிப்பாக சுவாச சய நோய்களுக்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது. ஆகவே, தொய்வுக்கு இது ஒரு வரப் பிரசாதம்!

● மூச்சுவிடுதல் தடைப்படுவதால் வேதனை ஏற்படுவதுடன் நின்று விடாது. சில சந்தர்ப்பங்களில் அபாயத்தையும் ஏற்படுத்தக் கூடும்! எனவே இதை ஒழித்துக் கட்டுவதில் அலட்சியமாயிருத்தல் கூடாது.

● ரிச்லெட்ஸ் பெக்டோரல் துரிதமாகப் பரவி வேலை செய்யக் கூடிய ரஸச் சேர்க்கையும் சக்தியும் கொண்டது. ஆகவே ஒன்றிரண்டு வேளை மருந்து சாப்பிட்டதுமே சுவாசப்பை, மூச்சுக் குழல் இவைகளில் ஏற்படும் அடைப்பை நீக்கி, கபத்தை உடைத்து, மூச்சுத் திணறலைத் தகர்த்து, சுவாசப் போக்குவரத்தைச் சமநிலைப்படுத்துகிறது. பிசின்-நுரை-போன்ற சளியை இளகச் செய்து காரி உமிழ்வதை இலகுவாக்குகிறது.

● இடைவிடாத இருமல், இளைப்பு, நெஞ்சு வலி, தொண்டை ரணம், மூச்சடைப்பு, தொண்டையிலேற்படும் கர்ர் புர்ர் என்ற சத்தம், தடிமல் காய்ச்சல், குளிர், பீனசம், கக்குவான், போன்ற சகல நோய்களையும் தணிப்பதுடன், படிப்படியாக நிரந்தரமான—நிச்சயமான—குணத்தையும் அளிக்கிறது




ரிச்லெட்ஸ் பெக்டோரல்

தொய்வினால் துன்புற்ற பலர் ரிச்லெட்ஸ் பெக்டோரலின் புண்ணியத்தால் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் பூரண குணம் பெற்று வானளாவப் புகழ்கின்றனர்!

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்.,

170 ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செத்த நாய்க்கு உயிரூட்டினார்கள்!

## இன்றைய உலகில் 'காணும் கடவுள்' மின்சாரம்

### அதன்தோற்றமும் வளர்ச்சியும்

உலகில் மின்சாரம் செய்யும் விந்தை சொல்லி முடியாது. பலப்பல காரியங்களுக்கு மின்சாரம் தேவைப்படுகிறது. அத்தகைய அரிய மின்சாரம் தோன்றிய வரலாற்றைக் காண்போம்.

**காற்றும் மின்சாரமும்**

இலைகள் அசைவதைபார்க்கிறோம். நீரின்மேல் அலைகள் தவழுவதைக் காண்கிறோம். அவற்றை அசையச் செய்யும் ஆற்றலைக்காண முடிவதில்லை. காற்று வீசுகிறது, தெரிந்து கொள்ளுகிறோம், காற்றை சுவாசிக்கிறோம். ஐரோப்பிய நாடுகளில் மாவு அரைக்கவும், நீர் இறைக்கவும், சமீப காலம்வரையில் காற்று விசை எந்திரங்களை உபயோகித்து வந்தார்கள். காற்றைப்போல, மின்சாரமும் இயற்கை தரும் ஆற்றல் தான். காற்றைப் போல மின்சாரமும் கண்ணுக்குப் புலனுகாத ஆற்றல்தான். ஒரு பொத்தானைத் தட்டுகிறோம், விளக்கு எரிகிறது கம்பியில் மின்சாரம் பாய்வதால் விளக்கு எரிகிறதென்பது நமக்குத் தெரியும். ஆனால் அந்த மின்சாரத்தை கண்ணால் பார்க்க முடியாது!

**மின்சாரம் மூலம் ஒளி**

விண்ணிலும், மண்ணிலும் மின்சாரம் இருக்கிறதுஎன்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். பதினேழும் நூற்றாண்டின் இறுதியில் டாக்டர் ஜில்பாட் என்ற ஆங்கில விஞ்ஞானி மின்சாரத்தைப் பற்றிச் சில தகவல்களைக்கூறினார். அடுத்த நூறு ஆண்டுகளில் பல நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மின்சாரத்தைப் பற்றி பல தகவல்களைத் தெரிந்து கொண்டார்கள். ஆயினும் அது சித்தாந்த நிலையில் தான் இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் முற்பாதியில், மைக்கேல் ஃபாரடே என்ற ஆங்கில விஞ்ஞானி டைனமோ அமைப்பு முறையைக் கண்டுபிடித்து, மின்சாரத்தை விசையாக மாற்ற முடியும் என்று உறுதி செய்தார். மின்சாரத்தின் மூலம் ஒளியைப் பெற முடியும் என்ற கொள்கையை உலகுக்கு எடுத்துக் கூறிய பெருமை ஸர் ஹம்ப்ரீடேவி என்ற ஆங்கில விஞ்ஞானியைச் சேரும். டைனமோ முதலிய சாதனங்களைக் கண்டு பிடித்த பிறகுதான் மின்சாரத்தின் உபயோகம் பரவத் தொடங்கிற்று.

**நீர்மின் விசை**

மின்சாரத்திலிருந்து ஒளியைப் பெறும் முயற்சிதான் முதலில் தோன்றிற்று. 1879-ஆம் ஆண்டில் ஆர். ஈ. பி. கிராம்டன் என்ற ஆங்கிலேயர் கிளாஸ்கோ ரயில் நிலையத்தில் மின் விளக்குகளைப் பொருத்தினர். 1880ம் ஆண்டில் இங்கிலாந்தில் குடியேறிய ஜர்மனியர் ஸர் வில்லியம் ஸீமன்ஸ் பிரிட்டிஷ் மியூஸியத்தில் மின் விளக்குகளைப் பொருத்தினர். ஆனால் வாணிப ரீதியில் மின்விசை நிலயத்தை அமைத்த பெருமை ஸெபாஸ்டியன் பெர்ரான்டியைச் சேரும். 1887-88 ஆண்டுகளில் லண்டனுக்கு அருகிலுள்ள டெப்ட் போர்டில் பெரியதோர் விசை நிலயத்தை அவர் அமைத்தார். அதைப் பின்பற்றி, பிரிட்டனிலும் வேறு பலநாடுகளிலும் விசை நிலயங்கள் கட்டப்பட்டன. நீராவியால் உந்தப்படும் டர்போ என்ஜின்களை உபயோகித்து மின்சாரத்தை உற்பத்தி செய்யலானார்கள். இப்போது அருவிகளையும், வேகமாகப் பாயும் ஆறுகளையும் பயன்படுத்தி நீர்மின் விசை நிலயங்களை, பல நாடுகளிலும் நிறுவியிருக்கிறார்கள்.

**மின்சார முன்னேற்றம்**

பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் 1927-இல், பல விசை நிலயங்களை இணைக்கும் 'கிரிட்' அமைப்பு முறையை அமுலாக்கினார்கள். இதனால் மின்சாரத் துறையில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டதென்றால் மிகையல்ல. 'கிரிட்' அமைப்பு முறையில் இருவித லாபமுண்டு. ஏதாவது ஓர் விசை நிலயத்தில் பழுது ஏற்பட்டு உற்பத்தி தடைப்பட்டால், இணைப்பின் மூலம் வேறிடத்திலிருந்து ஆற்றலைப் பெற முடியும். உபரியாகவுள்ள ஆற்றலை, தேவையுள்ள பகுதிக்குத் திருப்பி, உற்பத்தியாகும் ஆற்றலைத் திறம்படப் பயன்படுத்திக்கொள்ள முடியும். 1927-ஆம் ஆண்டுக்குப் பிறகு, இந்த வசதியால் வியக்கத்தக்க முறையில் மின்சாரத் தொழில் வளரலாயிற்று.

**அணுசக்தி**

நாம் அணுசகாப்தத்தில் வாழ்கிறோம், ஆக்கவும் அழிக்கவும் கூடியது அணுவாற்றல். அணுவாற்றலை ஆக்கத் துறையில் திருப்பி, விசை நிலயம் நிறுவி உலகுக்கு வழி காட்டிய பெருமை பிரிட்டனையே சேரும். நிலக்கரியும் எண்ணெய்யும் கிடைப்பதரிது என்ற நிலை ஏற்பட்டாலும், கவலைப்பட வேண்டியதில்லை. அணுவாற்றல் மூலம் பெருமளவில் மின்சாரத்தைப் பெற முடியும் என்பது உறுதிப்பட்டு விட்டது. மின்சாரத்தை ஒளி, வெப்பம், விசை என விரும்பும் முறையில் மாற்றிப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

பிரிட்டனில் அணு விசை நிலயங்கள் இயங்குகின்றன. அணுவைப் பிளந்து ஆற்றலைப் பெறுவதுபோல, ஜலவாயு அணுக்களை இணைத்து ஆற்றலைப் பெற முடியும் என்று விஞ்ஞானிகள் சித்தாந்தம் செய்து விட்டார்கள். எதிர் கால மக்கள், இந்த முறையினால் பெருமளவில் மின்சாரத்தைப் பெற்று முன்னேற முடியுமென்பதில் சந்தேகமில்லை.

— 'தனி அரசு'

**ஆங்கிலம்**

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினால் இலவச விபரங்களுக்கு எழுதுக.

**அற்லஸ் ஹோல்,**
723, மருதானை ரோடு,
கொழும்பு-10.
த. பெட்டி 649.

**ஆனந்தா லேகியம்**

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கைகளுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-
**ஆனந்தா வைத்தியசாலை,**
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

## ருஷ்ய விஞ்ஞானிகளின் வியக்கத்தக்க சாதனை

### அமெரிக்க விஞ்ஞானிகள் நேரில் நின்று பார்த்து அதிசயித்தனர்

சர்வதேசிய ஆகாய வெளிப் பயண மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற அமெரிக்க விஞ்ஞானிகளுக்கு சோவியத் விஞ்ஞானிகள் மாண்டுபோன நாயைப் பிழைக்க வைக்கும் விஞ்ஞான சாதனையைச் செய்து காட்டினார்கள்.

டாக்டர் நெகோவிஸ்கி இதைச் செய்து காட்டினார்; அமெரிக்காவில் விமானப் படை ஆராய்ச்சிக் கழகத்தின் 'உயிர் விஞ்ஞானப்' பகுதியின் டைரக்டரான பிரிகேடியர் ஜெனரல் பிளிக்கிங்களுக்கும், அவருடன் போனவருக்கும் இந்த சாதனை செய்துகாட்டப்பட்டது. அவர்கள் இந்தத் தகவலை அறிவித்தனர். அத்துடன் எப்படிச் செய்து காட்டப்பட்டது என்றும் கூறினார்கள்.

திடகாத்திரமாக இருந்த நாய் ஒன்று இரத்தம் எடுக்கப்பட்டு அவர்கள் கண்ணெதிரேயே சாகடிக்கப்பட்டதும், இரத்த ஓட்டம் சைபர் டிகிரிக்கும் கீழ்போய்விட்டது. மேலும் சாவின் கடைசி அறிகுறியாக கண் இமைத் துடிப்பும் நின்றது. அதற்குப் பிறகு மூளை இயக்கத்தின் கடைசி அறிகுறி இது தான். எனவே, நாய் செத்துப் போய்விட்டது என்று அந்த விஞ்ஞானிகள் சொன்னார்கள்.

**செத்த நாய் பிழைத்தது**

நாய் சுமார் 5நிமிடநேரத்திற்கிடையே செத்து விறைத்துப் போய்கிடந்தது. பிறகு டாக்டர் நெகோவிஸ்கி சைகை காட்டவும் ஒரு நேர்ஸ் செயற்கை முறையில் நாயின் உடலில் இரத்தம் பாய்ச்ச ஆரம்பித்தார். அதேபோது நாயின தொண்டைக் குழியிலும் செயற்கை முறையில் சுவாசம் பாய்ச்சுவதற்கும் ஏற்பாடு செய்தார்கள். பிறகு அந்த நாயின் உடம்பில் 'பீஜ சக்தி' கொண்ட திரவத்தையும் உணவுமூலம் ஏற்றினார்கள்.

பாதி இரத்தம் நாயின் உடம்பில் பாய்ச்சப்பட்டதும் நாய் உயிர் இயக்கத்தின் அறிகுறியைக் காட்டிற்று. நாய் மூச்சுவிட ஆரம்பித்தது. நாடித்துடிப்பு ஏற்பட்டது. நாயின் உடம்பில் முக்கால் வாசி இரத்தம் பாய்ச்சப்பட்டதும் நாய் எங்களைப் பார்த்து வாலை ஆட்டத் தொடங்கியது என்றார்கள் அவர்கள்.

ஜெனரல் பிளிக்கிங்கர் பேசும்போது இது மிகவும் அதிசயமாக இருந்தது என்று குறிப்பிட்டார்.

இந்தத் துறையில் ருஷ்யர்கள் அமெரிக்கர்களைவிட அதிக தூரம் முன்னேறிவிட்டனர் என்றார் அவர்.

**மனிதனுக்கு உபயோகப்படும்**

திடீரென்று செத்துப் போகின்ற மனிதர்களுக்கு உயிர் கொடுப்பதற்கு இந்த ஆராய்ச்சிக் கழகம் தொடங்கப்பட்டுள்ளது என்றார் டாக்டர் நெகோவிஸ்கி.

## கொழும்பு-அனலைதீவு

### வாலிபர் சங்கம் அங்குரார்ப்பணம்

கொழும்புவாழ் அனலைதிவு வாலிபர்கள் பலர் சேர்ந்து அனலைதிவின் சுகாதாரம், கல்வி, போக்குவரத்து என்பனவற்றின் வளர்ச்சிக்கு உழைப்பதற்காக சென்ற 4-9-59 வியாழக்கிழமை இரவு, அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் ஆசிரியர் சங்க அலுவலகத்தில் கொழும்பு-அனலைதிவு வாலிபர் சங்கம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

திரு. வை. சாம்பசிவம் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் "அனலைதீவு இன்றைய அரசாங்கத்தினதும் அரசியல்வாதிகளதும் கண்ணில் படாமல் போதிய கவனிப்பு இன்றி பின் தங்கியுள்ளது. நல்ல பாடசாலை அங்கு இல்லை. நோயாளர்கள் தகுந்த மருத்துவ உதவிக்காக கடல் கடந்து கஷ்டப்பட்டுப்போக வேண்டியுள்ளது. விரைவாகவும் ஒழுங்காகவுமுள்ள இயந்திரப் படகுச் சேவையில்லாமையால் மணிக் கணக்கில் பட்டினியோடு பிரயாணம் செய்ய வேண்டியுள்ளது. இவற்றை நாம் சங்க மூலம் ஒன்று திரண்டு அரசாங்கத்துக்குச் சொல்லிக் கஷ்ட நிவாரணம் தேடவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

மேலும்அவர் பேசுகையில், கொழும்பிலுள்ள அனலைதீவைச் சேர்ந்த ஒவ்வொருவரும் இந்தச் சங்கத்தில் சேர்ந்து உழைப்பதை தம் கிராம வளர்ச்சிக்குச் செய்யும் சேவையாகக் கொள்ள வேண்டும் என்றார்.

கூட்டமுடிவில் கீழ்க் கண்டோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

போஷகர்:- திரு. வி. ஏ. கந்தையா எம். பி. தலைவர்:- திரு. வை. சாம்பசிவம். காரியதரிசி:- திரு. ஆ. பரஞ்சோதி. தனதிகாரி:- திரு. க. சாம்பசிவம். எட்டுப் பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

**தமிழ் சுருக்கெழுத்தாளர் சங்கம்**

இலங்கையிலுள்ள தமிழ் சுருக்கெழுத்தாளர்கள் பலர் ஒன்று சேர்ந்து தமக்கென ஓர் சங்கத்தை அணிமையில் அங்குரார்ப்பணம் செய்தனர். மேற்படி அங்குரார்ப்பணக்கூட்டம் கடந்த 22-5-59 கொழும்பு ஐக்கிய கலாமன்றக் காரியாலயத்தில் அதன் தலைவர் திரு ஏ. எச். எம். ரபீக் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்திற்கு ஈழத்து தமிழ் சுருக்கெழுத்தாளர் சங்கம் என்ற நாமகரணத்தைச் சூட்டியதோடு, தமிழ் தட்டெழுத்து வரிசையை முதன் முதலாக உருவாக்கக் காரணமாகவிருந்த திரு ஆர். முத்தையா அணிமையில் கோலாலம்பூரில் காலமானதையிட்டு அன்னாருக்கு அனுதாபமும் தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக கீழ்க் கண்டவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: குமாரி அருணசலம் கணேசாள், செயலாளர்: திரு. கே. எம். கந்தையா, துணைச்செயலாளர்: திரு மு. அருணன், பொருளாளர்: திரு பீ. இராமநாதன். அத்துடன் திருவாளர்கள் த. சண்முகம், மு. பத்மநாதன், இ. சுப்பிரமணியம், ஏ. ஆர். எம். நௌபர், மு. இ. மு. யூஸுப் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குயுக்தி வாசகர்
பல்கலைக் கழகம்
தமிழ் மக்கள் வதியும் இடம்
தமிழ் நாடு

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரலான சுதந்திரன் திரு குயுக்தி அவர்கள், தமிழ் அறிஞர்களின் முன்னோடியாய் திகழ்ந்து, நல்ல திறமையான, கருத்தும், ஹாஸ்யமும் செறிந்த பதில்களை அளித்து, தாமும் மகிழ்ந்து எங்களையும் மகிழ்வித்து தமிழுக்கு நற்தொண்டு புரியும் நலனை முன்நிறுத்தி 'குயுக்தி வாசகர் பல்கலைக் கழகம்' "டாக்டர்" என்னும் பட்டத்தை அளித்து "டாக்டர் குயுக்தி" எனக் கௌரவிக்கின்றது.

குயுக்திவாசகர்கள்
சார்பில்
—க. சுப்பிரமணியம்

காளிகோவிலடி,
களபூமி,
காரைநகர் 1-6-59.

# கேட்டுப் பாருங்கள்



## குயுக்தி

என். இராசம்மா, கந்தகெதர.

கே: ஆடவரை விடப் பெண்டிர் பலவீனர்களா?

ப: அப்படிச் சொல்ல முடியாது. பிரவசம் போன்ற ஒரு வேதனையை மகிழ்ச்சியோடு தாங்கும் திடம் எந்த ஆடவனுக்கும் இருக்க முடியுமா?

ஃ

க. அம்பிகைபாகன், மணற்பிட்டி.

கே: யாராலும் திறக்க முடியாத பூட்டு என்ன பூட்டு?

ப: எதிர்மன்னசிங்கத்தின் வாய்ப் பூட்டு!

ஃ

சுசிலா, முதலைக்குடா.

கே: வாழ்க்கை ஒருபோர்க்களம் என்றால் நாம் யாருடன் பொருத வேண்டும்?

ப: வறுமை, நோய், கணவன் அல்லது மனைவி என்ற முப்படைகளுடன் பொருத வேண்டும்.

ஃ

செல்வி பாலாமணி, வண்ணார்பண்ணை.

கே: ஒரு பெண் தன்னைப் பற்றி பெருமைப்படுவது எப்போ?

ப: தன் கணவன் பக்கத்து வீட்டுப் பெண்ணைப்பார்த்து "ஐயோ அவலட்சணமே!" என்று பாசாங்கு செய்யும் போது.

கே: மிஸ்டர் உங்கள் மனதில் உள்ளதை இரகசியமாகக் கூறுங்கள்...

ப: கூறினால் உடன்படுவீர்களா?

ஃ

இ குணசிங்கம், புதுக்குடியிருப்பு.

கே: இலங்கையில் தலைசிறந்த நகைச் சுவை எழுத்தாளர் மூவரைக் குறிப்பிட முடியுமா?

ப: குயுக்தியார், குயுக்தியார், குயுக்தியார்.

ஃ

சி. செல்லத்துரை, அநுராதபுரம்.

கே: திருமதி வடமராட்சி எம். பி. இம்முறை தேர்தலில் என்ன பிச்சை கேட்பார்?

ப: வாக்காளரிடம் இருதயப் பிச்சை கேட்பார்.

ஃ

ஈ. பி. ஆர். களுதாவளை.

கே: பெண்கள் சேலையைக் கண்டு மயங்குவார்கள். ஆண்கள்...?

ப: அந்த சேலையைக் கட்டிய பெண்களைக் கண்டுமயங்குவார்கள்.

ஃ

இரா. நவம், மதுல்சீமை.

கே: நேர் வழி நீண்ட வழியாக இருப்பது எப்போது?

ப: குறுக்கு வழியில் பணம் சம்பாதித்துப் பழகிவிட்ட போது.

எம். எம். ஏ. லத்தீப், ஏறுவூர்.

கே: என் கடையில் வியாபாரம் மந்தம். என்ன செய்யலாம்?

ப: விற்பனையாளராக ஒரு கண்ணைக் கவரும் காரிகையை அமர்த்திப் பாரும்.

ஃ

அ. ஜோஸப், தலைமன்னார்.

கே: மந்திரி சபை மாற்றம் எப்படியிருக்கும்?

ப: ஒன்றும் ஆச்சரியப் படத்தக்கதாயிராது. புதிய ஜாடிகளில் பழைய கள்ளை வார்ப்பதாகவே யிருக்கும்.

ஃ

எம். வேலு, அளவத்துகொட.

கே: புகழ் ஏணியின் கடைசிப்படி எப்படியிருக்கும்?

> மிஸ்டர் குயுக்தியார்
> C/o சுதந்திரன்.
> த. பெ. 1183
> கொழும்பு.—12

ப: தலைகீழாகச் சறுக்கும் படியாக இருக்கும்.

ஃ

ஆர். எஸ். சாந்திமதி, கொழும்பு.

கே: வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு அமிர்தலிங்கம் என்ன செய்துகொண்டிருக்கிறார்?

ப: காண்டீபனுக்கு அடுத்த படியாக இன்னொரு குழந்தைக்குத் தகப்பனாகிவிட்ட பூரிப்பில் மகிழ்ந்து கொண்டிருக்கிறார்.

ஃ

மு. குலசேகரம், யாழ்ப்பாணம்

கே: தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளுள் தத்தம் தொகுதி வேலைகளில் அதிகம் நாட்டம் செலுத்தும் பிரதிநிதி யார்?

ப: தமிழ்த் தினசரிகளில் வரும்செய்திகள் மட்டும் சரியாக இருப்பதனால் ஊர்காவற்துறைப் பிரதிநிதி திரு வி. ஏ.கே. என்றுதான் சொல்ல வேண்டும்.

ஃ

வி. க. தங்கராஜ், நுகேபொல பஜார்.

கே: வாழ்க்கையில் துன்பம் எப்பொழுது வரும். இன்பம் எப்பொழுது வரும்?

ப: துன்பம் எப்பொழுதும் வந்துகொண்டேயிருக்கும். இன்பம் எப்பொழுதாவது வந்தாலும் வரும்.

ஃ

சா. ஏரம்பு, செங்கலடி.

கே: திருமதி குயுக்தியாரை முதன் முதல் எங்கே சந்தித்தீர்கள்?

ப: முதன் முதலில் இலக்கியத்தில் சந்தித்தேன். பின்னர் இதயத்தில்சந்தித்தேன். இப்போது சாப்பாட்டு மேசையில் மட்டுந்தான் சந்திக்க நேரம் கிடைக்கிறது.

ஃ

கே. பாலா, நிவித்திகல.

கே: கலப்பு மணம் பற்றி உங்கள் அபிப்பிராயம் யாது?

ப: கலப்பு மணம் வரவேற்கத்தக்கது. ஆனால் சாதி மட்டும் கலந்தால் போதாது. தம்பதிகளின் மனம் இரண்டறக் கலந்த மணமாய் அமைய வேண்டும்.

ஃ

கே. வேலு, தெரணியகல.

கே: தமிழரசுக் கட்சியிடம் இருப்பது எது? இல்லாதது எது?

ப: இருப்பது நிதானம். இல்லாதது வேகம்.

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்.

கே: திரு ஜீ. ஜீ. பல்கலைக் கழக கல்நாட்டு விழாவில் கலக்காதது ஏன்?

ப: தமது சிலைநாட்டு விழா பற்றி அவர் கவலை கொண்டிருப்பதால்.

கே: வீட்டைவிட்டுப் புறப்படும்போது கல்யாணப் பெண் அழுவதேன்?

ப: வெறும் சம்பிரதாயத்துக்காக! அழாவிட்டால் "பெற்றோரில் பற்றற்ற பெண் இவள்" என்று உற்றார் உறவினர் தூற்றுவார்களே என்பதற்காக.

ஃ

ஏ. ஐயாத்துரை, ஆரயம்பதி.

கே: கொதிக்கும் சிங்கள வீரராக விளங்கும்கொழும்பு மத்திய தொகுதிப் பிரதிநிதி திரு தேமிஸின் முழுப்பெயர் என்ன, குயுக்தியாரே?

ப: திருவாளர் மனுவேல் வேலு சவரியப்பா தேமிஸ் என்பதாகும்.

ஃ

ஆ. சிவநாதன், போயிட்டி.

கே: இலங்கையின் எதிர்காலம் யார் கையில் இருக்கிறது.

ப: திருவாளர் பொருளாதாரத்தின் கையில் இருக்கிறது.

ஃ

எஸ். பத்மாவதி, பூண்டுலோயா;

கே: ஓய் மிஸ்டர் குயுக்தியாரே, நான் உம்மைத் திருமணம் செய்துகொள்ள விரும்புகின்றேன். இதற்கு உமது பதில் என்ன?

ப: கலியாணம் ஆகு முன்பே ஓய் மிஸ்டர் என்று கூப்பிடும் ஒருத்தியைக் கட்டிக் கொள்ளும் அளவுக்கு நான் இன்னும் பண்பட்டு விடவில்லை அம்மா பரதேவதையே!

# நமக்குத் தொழில் கவிதை

நமக்குத் தொழில் கவிதை என்ற வெண்பாப் போட்டியில் கவிதை எழுத விரும்புவோர் யாவரும் கலந்து கொள்ளலாம். கட்டுப்பாடு கிடையாது. ஒருவர் எத்தனை வெண்பாக்கள் வேண்டுமானாலும் எழுதலாம். கவிதை அஞ்சல் அட்டையில் (Post Card) மட்டுந்தான் எழுதப்பட வேண்டும். ஒரு அட்டையில் ஒரு வெண்பாவுக்கு மேல் எழுதக் கூடாது. கீழே தரப்பட்டிருக்கும் அச்சிட்ட முகவரியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும். அச்சிட்ட முகவரி ஒட்டப் பெறாத அட்டைகள் கவனிக்கப்படமாட்டா.

## போட்டி இல : 7

இந்த ஏழாவது வெண்பாப் போட்டிக்கு "குட்டுண்ட டொன்பிலிப்பே கூறு" என்ற ஈற்றடி தரப்பட்டிருக்கிறது. இதை வைத்தே வெண்பா எழுதப்படவேண்டும். இலக்கியச் சுவைக்கும், நகைச் சுவைக்கும், அங்கதச் சுவைக்கும் (Satire) முக்கிய மதிப்பு அளிக்கப்படும். மத்தியஸ்தர்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற வெண்பாக்கள் சுதந்திரனில் வெளியாகும். மிகச் சிறந்த வெண்பாவை எழுதியவருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

— ஆசிரியர் : சுதந்திரன்.

> 'நமக்குத் தொழில் கவிதை'
> C/o ஆசிரியர்,
> சுதந்திரன்,
> த. பெ. 1183,
> கொழும்பு—12.

வெண்பாக்கள்
கிடைக்க வேண்டிய
முடிவு தேதி
20—6—59

## குட்டுண்ட டொன்பிலிப்பே கூறு


# "ஆஸ்த்மா"வைப் பற்றிய உண்மைகள்

ஆஸ்த்மா என்ற தொய்வு ஒரு பயங்கரமான வியாதியாகும். நரம்புத்தளர்ச்சி, காலநிலை, மூக்கடைப்பு மார்பில் ஏற்படும் சளி, வயிற்றுக்கோளாறுகள் ஆகிய பல காரணங்களால் ஆஸ்த்மா, என்ற தொய்வு ஏற்படுகிறது.

பல வருட ஆராய்ச்சிக்குப் பிறகு வியாதியைப் பூர்ணமாகக் குணமாக்கக் கூடிய "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புதமான மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இம் மருந்தின் பெருமையைப்பற்றி நூற்றுக்கணக்கான கடிதங்கள் தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளதை நீங்கள் நன்கு அறிவீர்கள்-நன்றிக் கடிதங்கள் எழுதிய தமிழன்பர்கள் யாவருக்கும் நம் நன்றி—இன்னும் சில கடிதங்கள்.

(1) டாக்டர்,

எனக்கு பல வருடங்களாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி "ஆஸ்த்மடிக்கா" ஸ்பெஷல் பாவித்ததில் பூர்ண குணம்.

என் அன்பு நன்றி.

திரு. S. S. றமீது
C/o திரு. K. அப்துல் வஹாப்
(மட்டக்களப்பு பகுதிக்கு அரசாங்க கண்டிராக்டர்
11, பவுன்டரி ரோட் (BOUNDRY ROAD.) மட்டக்களப்பு)

(2) எனது மனைவிக்கு 15 வருட காலமாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, பூர்ணசுகம் நன் நன்றி.

திரு. இ. சரவணமுத்து
பிரதம அதிகாரி
வி. சி. ஆபீஸ் பக்கியல்ல (களுவாஞ்சிக்குடி)
களுவாஞ்சிக்குடி (EP)

ஒரு பாட்டில் ஆஸ்த்மடிக்காவில் எனக்கிருந்த ஆஸ்த்மா என்ற தொய்வு பூர்ணசுகம்.

வணக்கம்
திரு. அ. ஆனந்தலிங்கம்
ரூப்பியன் தோட்டம், கம்பர்மலை
வெள்வெட்டித்துறை

அன்பர்களே அநேக ஆண்டுகளின் ஆராய்ச்சியின் விளைவாக வந்த "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புத மருந்தைப் பாவியுங்கள்.

3 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூர்ண சுகமடையும் என்பது நம் உத்தரவாதம். ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி, மார்பில் "கர்" என்ற சத்தம், இரவில் ஏற்படும் இருமல் இவைகளுக்கு

"ஆஸ்த்மடிக்கா"
(ஒரு நவீன சஞ்சீவி)

ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல்—ரூ. 15/-
(மிக உபாதை தரக்கூடிய நாள் பட்ட ஆஸ்த்மாவுக்கு)
ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-

வி. பி. பி. சதம் -/85

விபரங்களுக்கு

டாக்டர்.

சுக ஆதார வைத்தியசாலை
MODERN CLINIC
255, காலி ரோட், பம்பலப்பிட்டிய
கண்வன்ட் எதிரில்
கொழும்பு-4.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் ஆசிரியர் சங்கத்தில் கோஷ்டிச் சண்டை!

## பரபரப்பான சூழ் நிலையில் குழம்பிக் குழம்பி நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டம்

## முன்னாள் பொதுச் செயலாளர் மீண்டும் அப் பதவிக்குத் தெரிவு

(சுதந்திரன் நிருபர்)

ஆயிரத்து நானூறு தமிழ் ஆசிரியர்களின் பிரதி நிதித்துவ ஸ்தாபனமான அகில இலங்கை அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் மிகப் பரபரப்பான சூழ்நிலையில் பலத்த கொந்தளிப்புக்கிடையில் கடந்த 6-ந் திகதி சனிக்கிழமை கொழும்பு விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இதற்கு முன்னர் திருகோணமலையில் நடந்த பிரஸ்தாப சங்கத்தின் கூட்டம் குழப்பத்தில் முடிந்து ஆசிரியர்கள் கேலிக்கு இடமாக்கப் பட்டதைப்போல் கொழும்புக் கூட்டமும் ஆகிவிடக்கூடும் என்று ஊகிக்கப் பட்டதால் அது விஷயம் பத்திரிகைகளில் வெளிவருவதைத் தடுக்கு முகமாகப் பத்திரிகைக் காரர்கள் யாரும் கூட்டத்தில் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப் படவில்லை.

### இரு கோஷ்டிகள்

கூட்டத்தின் முக்கிய நிகழ்ச்சி புது வருட உத்தியோகத்தர் தெரிவாக இருந்தது. பொதுச் செயலாளர் தெரிவில் எல்லோரும்பெரும் அக்கறை காட்டினர்கள். இலங்கையில் பல பாகங்களிலுமுள்ள பல்வேறு கிளைகளிலிருந்தும் 99 பேர் கூட்டத்துக்கு வந்திருந்தார்கள். அத்தனை பேரின் கவனமும் குசுகுசுப் பேச்சும் பொதுச்செயலாளர் தெரிவைப் பற்றியதாகவே இருந்தன. பதவியில் இருந்த பொதுச் செயலாளரையும் மற்றவர்களையும் நீக்கிவிட்டுப் புதியவர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்று ஒரு சாராரும், சொந்தக் காரணங்களுக்காகப் பொதுச் செயலாளர் மீது கொண்ட கோபத்தை இப்படிச் சாதிக்க முயலும் கோஷ்டியினருக்கு நல்ல பாடம் படிப்பிக்க வேண்டும் என்று இன்னொரு சாராரும் வர்மம் கொண்டிருந்ததாகப் பேசப் பட்டது. பொதுச் செயலாளர்மீது கோபம் சாதிக்க விளைந்தஇந்தக்கோஷ்டியை வழிநடத்தியவர் திரு ஏ. கே. சுப்பிரமணியம் என்று சொன்னார்கள்.

### தற்காலிக தலைவர்

10 மணிக்கு ஆரம்பமாக இருந்த கூட்டம் 11.15 மணிக்கே தொடங்கியது. திரு கந்தப்பு ஆசிரியர் தற்காலிகத் தலைவராக அமர்ந்து கூட்டத்தை நடத்தினர். சங்கம் சிரழிந்து விட்டதாகக் கூறிய அவர் தமக்குத்தெரிந்த மட்டில் சங்க ஊழல்களையும் பதவியிலுள்ளவர்களின் போட்டா போட்டிகளையும் அம்பலப்படுத்தப் போவதாக அறிவித்துவிட்டு நீண்ட நேரம் கொந்தளிப்புக்கிடையே பேசினர். சனயின் வரவு செலவு அறிக்கையில் தாம் கையொப்பமிடவில்லை என்றும்ஆயினும் எப்படியோ தமது பெயர் அதில் பொறிக்கப்பட்டிருந்தது தமக்கு ஆச்சரியமாக இருந்தது என்றும் கூறினர். இன்னும், வெளியூர் பிரதிநிதிகளைக் கொழும்பில் உபசரிப்பதற்கு கொழும்புக் கிளை நிதி திரட்டிய விஷயத்தில் கூட நிர்வாகிகளுக்கிடையே சண்டை சச்சரவு மூண்டு விட்டது என்பதையும் ஞாபகப்படுத்தினர். அடிக்கடி, தாம் எந்தக் கட்சிக் கண்ணேட்டத்திலும் பேசவில்லை என்றும் எந்தக் குழுவையும் ஆதரித்து ஏதும் கூறவில்லை என்றும் சொன்னர்.

### ஆசிரியர்கள் வெளியேற்றம்

ஆனால் கூடியிருந்த ஆசிரியர்கள் அவரைப் பேசவிடாது தடுத்தனர். சில சட்டங்களில் ஏகப்பட்ட ரகளை ஏற்பட்டதால் தலைவர் ஸ்தம்பித்து நின்றர். சில சந்தர்ப்பங்களில் ஆளுக்காள் எழுந்து ஏக காலத்தில் நீதி சொல்லப் புறப்பட்டதாலும் தத்தமது நிலையை விளக்க முனைந்ததாலும் தலைவரின் பேச்சை மதிக்காத நிலைமை [illegible] மாகி விட்டது. அமைதி குலைந்து நடப்பது ஆசிரியர்கள் கூட்டமா என்று கூட எண்ணும்படியாகிவிட்டது. ஒரு கட்டத்தில் திருகோணமலை மட்டக்களப்பிலிருந்து வந்திருந்த 29 பிரதிநிதிகளும் கூட்டத்தில் ஒழுங்கு நிலவத்தவறிய காரணத்தால் வெளியேறினர். பின்னர் ஒருவாறு அவர்கள் சமாதானம் செய்யப்பட்டு உள்ளே அழைத்துச் செல்லப் பட்டனர்.

நிர்வாக அறிக்கை, வரவு செலவுக் கணக்கு ஆகியன பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது கூட்டம் கொம்பியது. ஒழுங்கற்ற வாதப் பிரதிவாதங்கள் கிளம்பி கூட்டம் அத்தோடு அரைகுறையாக முடிவடையும் கட்டத்துக்கு நிலைமை முற்றியது.

இந்தக் கட்டத்தில் மட்டக்களப்பு பெரிய போரதீவு அரசினர் பாடசாலைத் தலைமை ஆசிரியர் பண்டிதர் த. கிருஷ்ணபிள்ளை எழுந்து பின் வருமாறு கூறினர்:-

### பண்டிதரின் பேச்சு

"இங்கே நடப்பதைக் கவனிக்கும் போது நாலு ஐந்து பேருக்குள்தான் எல்லாம் இருப்பதாகத் தெரிகிறது. நல்லாக இருந்த சங்கம் இப்போது குட்டிச்சுவராகப் போய்விட்டதைக் கண்டு நாடு சிரிக்கிறது. ஆசிரியர்களாகிய நாம் வெளியில் தலைகாட்ட முடியவில்லை.

"எல்லோருக்கும் புத்தி சொல்லுகிறோம் நாம். மாணவர்களுக்கு ஒழுங்கு முறை கற்பிக்கிறோம். ஆனல் ஒரு சங்கத்தை வைத்து நல்லபடி நடத்த நம்மால் முடியவில்லை. ஒழுங்காகக் கூட்டம் நடத்தி முடிக்க வழியில்லை. இந்தக் குறைபாட்டையும் வெளியில் உள்ளவர்கள் அறிந்தால் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள்?

"ஆசிரியர்களாகிய நாம் வேறு பொதுச் சங்கங்களோடு தொடர்பு கொண்டு உழைக்கிறோம். அவை நன்முக நடைபெறுகின்றன. நமக்கென நாம் ஏற்படுத்திக் கொண்டுள்ள சங்கம்தான் இப்படிச் சீரழிகிறது. போட்டி பொறாமைகளை விடுத்து பொது நலனை உத்தேசித்து நாமனைவரும் ஒன்றுபட்டு சங்கத்தை செவ்வனே கொண்டு நடத்த வேண்டும். அனைவரினதும் ஒத்துழைப்பைக் கோருகிறேன்"

### அறிக்கைகளை ஏற்க நிபந்தனை

இவ்வாறு பண்டிதர் கிருஷ்ணபிள்ளை பேசியதன் பின் அறிக்கைகளைத் தற்காலிகமாக ஏற்றுக் கொண்டு உத்தியோகத்தர் தெரிவைத் தொடர்ந்து நடத்தப்

(9-ம் பக்கம் பார்க்க)

## கலவரத்தில் உயிரிழந்த ஆசிரியர் நிதி

—:—:—

கடந்த வருடம் நடைபெற்ற வகுப்புக் கலவரங்களின் போது அரசாங்க தமிழர் ஆசிரியர்கள் இருவர் உயிரிழந்தனர். ஒருவர் மட்டக்களப்பு, தாமரைக்கேணியைச் சேர்ந்த திரு. செல்லத்துரை என்பவர். மற்றவர் யாழ்ப்பாணம் கரவெட்டியைச் சேர்ந்த திரு. கந்தப்பு என்பவர். முன்னவர் பிபிலையை அடுத்து மகா ஓயாவிலும், பின்னவர் பொலநறுவையிலும் காடையர்களால் தாக்கப்பட்டுக் கொடூரமாகக் காலகதியடைந்தனர்.

இவர்கள் இருவரின் குடும்பங்களுக்கும் உதவியளிப்பதற்காக அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் ஒரு நிதியைத் திரட்டினர். இந் நிதிக்கு ரூ. 5041-50சேர்ந்ததாகவும் செலவு ரூ. 115-00 நீக்கி,மிச்சமுள்ள ரூ. 4926-50 ஐயும் பின்வருமாறு பங்கிட்டதாகவும் மேற்படி ஆசிரியர் சங்க செயலாளர் திரு. தியாகராசா அறிவிக்கின்றர்:

திருமதி இராஜேஸ்வரி செல்லத்துரைக்கு ரூ. 2463-50. திருமதி வள்ளிப்பிள்ளை கந்தப்புக்கு ரூ. 1847-00 திரு. கந்தப்புவின் முதல் தாரத்துப் பிள்ளைகளான செல்வன் குமாரசாமி, செல்வி புவனேஸ்வரி ஆகிய இருவருக்கும் ரூ. 616-00.

## 'சிங்களத் திணிப்பை இறுதிவரை எதிர்ப்போம்'

### 'சிறீ அளித்த சிறை' என்ற நூல் வெளியீட்டு விழாவில் தலைவர்கள்

புங்குடுதீவு—

"தனிச் சிங்களக் கொள்கைக்கெதிராக நாம் நடத்தும் எதிர்ப்புப் போராட்டத்தினைச் சிர் குலைக்கப் பல்வேறு சதிவேலைகள் நடைபெற்றுவருமிவ் வேளையில் தமிழ்ப் பேசும் மக்கள் தம் விடுதலைப் போராட்டத்திற்கு ஊக்கமும், உணர்ச்சியும் நல்கும் வகையில் நாவேந்தன் இந்நூலினை வெளியிட்டிருப்பதையிட்டு நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையுமடைகின்றேன். விடுதலைப் போராட்டத்தினைத் துரிதப்படுத்தும் முயற்சியில் இந் நூல் தமிழ் மக்களைத் தூண்டி விடுமென்பதில் ஐயமில்லை".

இவ்வாறு தமிழரசுத் தலைவரும், கோப்பாய்ப் பிரதிநிதியுமான திரு. கு. வன்னியசிங்கம் மாவிட்டபுரம் தமிழ் மன்றத்தின் சார்பில் நடைபெற்ற "சிறீ அளித்த சிறை" நூல் வெளியீட்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

### தமிழரின் விடுதலைப் பாதை

அவர் தொடர்ந்து பேசுகையில் சிங்கள சிறீ பொறித்த வண்டிகளில் பவனி வரும் தமிழ் முதலாளிகளின் தன்மான மற்ற, தமிழின உணர்ச்சியற்ற போக்கினை வன்மையாகக் கண்டித்தார். ஆசிரியர் திரு. எம். சிவநேசன் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் காந்தியடிகள் காட்டிய சத்தியாக்கிரகப் பாதையே தமிழர் தம் விடுதலைப் பாதையென்றும், நாவேந்தன் தீட்டியுள்ள இவ்வரசியல் ஏடு அதனையே நம் முன் நிறுத்துகின்றதென்றும் கூறினர்.

### செனட்டர் பேச்சு

செனட்டர் திரு. ஜி. நல்லையா பேசுகையில் சமஷ்டியரசியல் கொள்கையின் கீழ் தமிழ் மக்களனைவரும் ஒன்றுபட்டு நின்று போராட வேண்டுமென்றும், பதவி வேட்டைக்காரர் களினுல் கடந்த காலங்களில் நேரிட்ட விளைவுகள் இனியும் இடம் பெற இடமளிக்கக் கூடாதென்றும் கூறினர். விடுதலைப் போராட்டத்தை உறுதியுடன் தீவிரமாக நடாத்தினுல் வெகு விரைவில் தமிழர் தம் விடுதலை கிடைத்தே தீருமென்றும் அவர் குறிப்பிட்டார்.

### பாராட்டு

பண்டிதர் க. சச்சிதானந்தன் நூல் வெளியீட்டுரையினை நிகழ்த்துகையில் பெருமன்னர்களில் ஒருவராண நாவேந்தனைப் பண்டாரநாயகா அரசாங்கம் சிறையில் வைத்ததின் மூலம் தமிழகத்திற்கு ஒரு அரிய நூல் கிடைத்துள்ளதென்றும், அவ் சிறப்பினை வாசித்துணரத் தமிழ் மக்கள் தவறக் கூடாதென்றும் கூறினர். டாக்டர் எச். பி. செல்லையா பேசுகையில் நாவேந்தனின் செந்தமிழ்ப் பற்றையும், எழுத்து வன்மையையும் பெரிதும் பாராட்டினர். அ. இ. தமிழாசிரியர் சங்கக் காரியதரிசி திரு. ஆர். கே. தியாகராசா, திரு. புதுமைலோலன், தமிழ் மன்றத் தலைவர் திரு. சி. அரசரத்தினம் ஆகியோரும் பேசினர். சுற்றில் திரு. நாவேந்தனின் நன்றியுரையுடனும் திரு. தி. செல்வராசா குழுவினரின் நகைச்சுவை நாடகத்துடனும் விழா பூர்த்தியடைந்தது.

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுண், பாவாடை, கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம்

கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ்

26, கெய்ஸர் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருச்சி அறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் வானொலிப் போராட்டத்தில் குடும்பத்தோடு குதித்தார்

## மறியல் நடக்கிறது—பொலீஸ் காவல் பலமாக இருக்கிறது

சென்னை ஜுன் 11

திருச்சி அறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் நேற்று 10-ந் திகதி வானொலிப் போராட்டத்தில் குதித்து விட்டார். தமது குடும்பத்தோடு குதித்துவிட்டார். குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் எல்லோருமாகச் சேர்த்து மொத்தம் 41 பேர்போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

### நோக்கம்

தமிழ் நாட்டு வானொலி நிலையங்கள் "ஆகாஷ்வாணி" என்று இந்தியில் அழைக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதும் "வானொலி" என்று தமிழில் அழைக்கும்படி அதிகாரிகளைக் கோருவதுமே இந்தப் போராட்டத்தின் நோக்கமாகும்.

### மறியல்

திரு கி. ஆ. பெ. விசுவநாதம் திருச்சி வானொலி நிலையத்தின் முன் உண்ணாவிரதம் மேற்கொண்டு போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறார். ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள உள்ளே செல்பவர்களை "வானொலி" என்ற பெயர் வரும்வரை நிலையத்தினுள் செல்ல வேண்டாம் என்று அன்பாகக்கேட்டுத் தடுத்து மறியல் செய்து வருகிறார்.

இந்தப் பணியைத் தம் குடும்பத்தினர் நாளொன்றுக்கு இருவர் வீதம் இருபது நாட்களுக்குத் தொடர்ந்து செய்யப்போவதாகவும் அதற்குள் கட்சிவேறுபாடு இன்றி பொதுமக்களும் தலைவர்களும் வந்து கலந்து கொள்ளவேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்.

### நாலாவது ஆள்

இப்படிப் போராட்டம் நடத்துகிறவர்களில் அறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் நான்காவது ஆளாவர். முன்னர் இளவழகன், ரெங்கரத்தினம் என்ற இளைஞர்கள் போராட்டம் நடத்தியதும் அதை அடுத்து பலராமன் என்பவர் தொடங்கி நடத்தி வருவதும் தெரிந்ததே.

### பரபரப்பும் மக்கள் கூட்டமும்

அறிஞர் விசுவநாதம் போராட்டத்தில் குதித்திருப்பது நாட்டில் பெரிய பரபரப்பை உண்டுபண்ணியுள்ளது. திருச்சி வானொலி நிலையத்தின் முன்னர் பலமான பொலீஸ் காவல் போடப்பட்டிருக்கிறது. நிமிஷத்துக்கு நிமிஷம் அங்கு மக்கள் கூட்டமும் அதிகரித்து வருகிறது.



திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்

## சென்னைக் கடிதம்

சுதந்திரன் சென்னை நிருபர்
ஈழத்தரசன்

## பிரயாணிகள் வரி வராது

சென்னை கார்ப்பரேஷனின் வருமானத்தைப் பெருக்க மேயர் திரு அ. பொ. அரசு ாம் பிரயாணிகள் வரி விதிக்க ஆலோசித்து வருவதாக முன்னர் அறிவித்தார். அந்த யோசனை தற்போதைக்கு கைவிடப்படும் என்று தெரியவருகிறது.

### துவக்கியது காங்கிரஸ்

பிரயாணிகள் வரி இந்தியாவுக்குப் புதியதல்ல. இந்தியாவின் பெரிய நகரங்கள் சிலவற்றில் இப்பொழுதே அமுலிலிருந்து வருகிறது. அந்த நகரங்களுக்கு ரயிலில் செல்லும் பிரயாணிகள் ரயில் சிட்டுக்குக் கொடுக்கும் பணத்தோடு தம்மை அறியாமலே இந்த வரியையும் செலுத்திவிடுகிறார்கள்.

சென்னையைப் பொறுத்தவரையில் பிரயாணிகள் வரி விதிப்பு விஷயத்தை தொடக்கிவைத்தது முன்னர் பதவியிலிருந்த காங்கிரஸ் கட்சியாகும். ஆயினும் அக்கட்சி இடையில் அதைக் கைவிட்டு விட்டது.

### வரி கொடுப்பது ரயில் பிரயாணிகள்

சென்னை நகருக்குள் ரயில் மூலம் வருபவர்கள் மட்டும் பிரயாணிகள் வரி செலுத்த நேரிடும். வேறு மார்க்கமாக வருபவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். காரணம் வரி ரயில் சிட்டுக்கு அறவிடப்படும் பணத்தோடு சேர்த்து வசூலிப்பதற்குத்தான் சட்டம் வழி செய்து வைக்கிறது.

### கைவிடப்பட்டது

ரயில்வே சட்டத்தை திருத்தி பிரயாணிகள் வரி அறவிடப்படும் நகரங்கள் பட்டியலில் சென்னையையும் சேர்த்துக்கொண்டால் வரி வசூல் ஆரம்பமாகி விடும். இதற்காக மத்திய ரயில்வே மந்திரியைக் கண்டு பேசப் போவதாக மேயர் திரு அரசு முன்னர் அறிவித்தார். இப்போது அந்த யோசனையை கைவிட்டு விட்டார் என்று தெரிகிறது.

## பட எரிப்பு போராட்டம்

தமிழ்நாடு நீக்கப்பட்ட இந்திய தேசப்படத்தை எரிக்கும் போராட்டத்தை பெரியார் ஈ.வே.ரா. விரைவில் தொடங்கப் போவதாக அறிவித்திருக்கிறார்.

சிலை உடைப்பு, ஹோட்டல் பெயர் அழிப்பு, கொடி எரிப்பு முதலான விஷயங்களில் ஏற்கனவே ஈடுபட்டு, மிக்க அனுபவம் பெற்றவர் பெரியார். அடுத்த நடவடிக்கையாகத் தேசப்பட எதிர்ப்பை ஆரம்பிக்க இருக்கிறார்.

"டில்லியின் ஆதிபத்தியம் ஒழியவேண்டும். தமிழ்நாடு விடுதலை அடையவேண்டும். சாதிக்கொடுமை மறைய வேண்டும்" பெரியாரின் தற்போதைய லட்சியம் இதுதான். இதற்குத்தான் தேசப்பட எரிப்புப் போராட்டம்.

தேசியப் புனிதச் சொத்தை அவமதிப்பதைத் தடை செய்யச் சென்னை அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டிருக்கும் புதுச் சட்டத்தின்படி தேசப்பட எரிப்பு தண்டனைக்குரிய குற்றமாகலாம். இதற்கு யாரும் அஞ்சக் கூடாது என்று பெரியார் அறிக்கை விட்டிருக்கிறார்.

## சங்கப் பலகை

# கண்ணதாசன் கவிதைகள்

வெளியீடு: காவியக் கழகம், 4 இராசகோபால நாயக்கர் சந்து, சிந்தாதிரிப் பேட்டை சென்னை 2. பக்கங்கள் 328. விலை ரூபா 2-50. வெளிநாடுகளில் ரூபா 3.

செந்தமிழின் சுவை சொல்லித் தெரிவதில்லை; அனுபவித்து அறிய வேண்டியது அது. ஆர்வம் உள்ளவர்களுக்கு ஒன்று சொல்லுகிறோம்-அதுவும் சொந்த அனுபவத்தைக் கொண்டு, சந்தேகத்துக்கு இடமில்லாமல் சொல்லுகிறோம் கண்ணதாசன் கவிதைகளைப் படியுங்கள்-அப்போது தானாகத் தெரியவரும் நந்தமிழின் தீஞ்சுவை யென்று.

பாலுந் தேனும், கற்கண்டும் கனிரசமும் காதலிளங் கன்னியின் ஊடலும் சுவையின் பிறப்பிடம், இன்பத்தின் இருப்பிடம் என்ற மயக்கம் நற்றமிழ்க் கவிதைகளை நாடிக் கற்று நயப்பார் மாட்டு இருப்பதில்லை. கற்பனை வளமும், காவிய வனப்பும் அற்புதமான சொல்லாட்சியும் அப்பழுக்கற்ற பொருட் செறிவும் மருவக் கவிஞர் கண்ணதாசன் ஆக்கி வழங்கியுள்ள கவிதைகளைப் படிப்போர் நிலையான தமிழின்பத்தைச் சுவைக்கும் வாய்ப்புப் பெற்றவர்களாகிறார்கள்.

இதற்கு வழி செய்துள்ளவர்கள் காவியக் கழகத்தினர் ஆவர். கவிஞர் பாடிய அழகுக் கவிதைகளைத் தொகுத்து "கண்ணதாசன் கவிதைகள்" என்ற பெயரில் நூலாக்கி அடக்கமான விலையில் தந்திருக்கிறார்கள்.

இந்தத் தொகுப்பிலே, 'பழம் பாடல் புதுக் கவிதை', 'வாழ்க்கையும் வனப்பும்', 'பிரிவும் பரிவும்', 'குறியும் கொள்கையும்', 'இசையும் பாட்டும்', 'பல் சுவை' என்ற தலைப்புகளில் தித்திக்கும் தனிக் கவிதைகளும், 'முதல் பாட்டு' என்ற தலைப்பில் கவிஞர் 1944-ல் பாடிய முதல் கவிதையும் வெளியிடப்பட்டுள்ளன.

இன்னும், 'மாங்கனி', 'ஆட்டனத்தி ஆதிமந்தி' என்ற பெயர்களில் இரு காவியங்களும் இதில் உண்டு. இவற்றைப் படிக்கும் போது நாம் தமிழருவில் நிற்கும் சுவை ஒடத்திலே ஏற்றி கவிஞரால்காவிய உலகுக்கே இட்டுச் செல்லப்பட்டுவிடுகிறோம். அப்பால் நினைக்க வேறொன்றுமில்லை.

இசைப்பாடல் என்ற தலைப்பிலே உள்ளவற்றை நாம் ஏற்கனவே இசையோடு கேட்டு மகிழ்ந்திருக்கிறோம். 'மாலையிட்ட மங்கை', இல்லறஜோதி, 'சிவகங்கைச் சீமை', 'மஹாதேவி', 'ஒரே வழி', ஆகிய திரைப்படங்களுக்காகக் கவிஞர் எழுதிய பாடல்கள் இசை இல்லாவிட்டாலுங் கூட நலங்கெடாத நல்ல சிருஷ்டிகள் என்பது இப்போது தெரிகிறது.

கவிதை எதையும் கழிக்க முடியாது. நூலைத் தொட்டால் மொத்தமுள்ள 325 பக்கங்களையும் புரட்டிப் படித்துத்தான் ஆகவேண்டும். அல்லாவிட்டால் மனம் நம்மைச் சும்மா விடாது.

ஆனால் அதில் ஒரு கெடுதி. முழுப் பக்கங்களையும் புரட்டிப் படித்தபின் புத்தகம் உருப்படியாக இருக்குமா? அதற்கான உறுதிவாய்ந்த பைன்டிங் இல்லை. அழகு அட்டையில் இருக்கும் அளவுக்கு உள்ளே இல்லை விஷய அமைப்பு சுத்தமாக இல்லாமல் குழப்பமாக இருக்கிறது. குறிப்பாக காவியங்கள் இரண்டும் சரியானபடி பகுத்து நூலில் அமைக்கப்படாததால் அவை கூடத் தனிக் கவிதைகளோ என்று எண்ணத் தோன்றுகிறது. காவியக் கழகத்தாரின் முதல் முயற்சி இது வாகையால் மேலே குறிப்பிட்ட குறைகள் அவ்வளவாகப் பொருட்படுத்தக் கூடியன அல்ல. இத்தகைய அருமையான கவிதைகளைத் தொகுத்து நூலாக்கி குறைந்த விலையில் வழங்க முன்வந்த முயற்சியைப் பாராட்ட வேண்டும்.

—கேபாரெஸ்


இன்றே

நேத்திராலோக தைலத்தைப்

பாவிக்க ஆரம்பியுங்கள்.

இது கூந்தலை அழகொளியுடனும், ஆரோக்கியமாகவும், நீண்ட சுருண்ட கேசமாகவும் வளர்கிறது. அதுமட்டுமல்ல இது தலைவலிக்கோர் விசேட ஔடதமாகும். ஆம்! அதுதான்

நேத்திராலோக தைலம்


- இது சிரசில் ஏற்படும் சகல வியாதிகளிலிருந்தும் குணமளிக்கிறது.
- இது இளமையில் மயிர் நரைத்தல்—கண் பார்வைக் குறைவு தலை எரிவு கண்ணில் வலியுண்டாதல்-சிவத்த புள்ளி விழுதல் பீனிசம்—தடிமன் மற்றும் பல் காது சம்பந்தமான இதர ஏனைய வியாதிகள், சிரசில் ஏற்படும் வியாதிகள் ஏனைய வற்றையும் குணப்படுத்துகிறது. இலங்கையடங்கிலுமுள்ள ஸ்டாக்கிஸ்டுகளிடமிருந்து அல்லது நேரில் எம்மிடமிருந்து கிடைக்கும். 6 அவுன்ஸ் கொண்ட போத்தலின் விலை ரூ. 3/- தபாற் செலவு சதம் 50/- இன்றே பரீட்சித்து திருப்தியடையுங்கள். இளையவர், பெரியவர், தம்பியர், தங்கையர், ஆடவர் பெண்டிர் அனைவரும் இதையே விரும்பி உபயோகிக்கிறார்கள். காரணம் இது அவர்களைத் திருப்திப்படுத்துவதனாலன்றோ!

டபிள்யூ. கே. ஜினதாஸ,

ஆயுர்வேத வைத்தியர்,

161, நோரிஸ் ரேட், புறக்கோட்டை, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விவாகச் சட்டம்

திரு. எஸ். சபாபதிப்பிள்ளை
M. A., LL. B. (Lond) F. R. A. S., Bar-at-Law
இலங்கை சட்டக்கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்
வருமானவரி பரிசிலனைக்குழு சட்ட ஆலோசகர்

சுதந்திரனில் சமீபத்தில் ஒரு செய்தி தெரிவிக்கப்பட்டிருந்தது அதாவது ஒரு பிரபல நடிகை தன் இல்லற வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது தமக்கு கல்யாணம் எப்பொழுதுமே இனிப்பாக இருக்கின்றது என்று கூறியதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. காதலில் ஈடுபட்டுக் கலியாணத்தை எதிர்பார்க்கும் காதலர்களுக்கும் இல்லற வாழ்வில் இன்பத்திலே ஈடுபட்டிருக்கும் தம்பதிகளுக்கும் இதே உணர்ச்சி தான்.

## சட்டத்துக்கு பேதமில்லை

ஆனல் பிரிமச்சரியத்தையே அனுஷ்டிக்கத்துணிந்தவர்களுக்கும் இல்லறத்திலே இன்னல் அடைந்தவர்களுக்கும் கல்யாணம் கசப்பாகவே இருக்கும். இவ்விரு சாராரின் உணர்ச்சிகளும் எவ்வாருயிருந்தபோதிலும் ஒரு சமுதாயத்தின் சட்டம் விவாகமென்னும் விஷயத்தை ஒரே முகமாய் பேதமின்றியே பார்ப்பதாயிருக்கும்.

## விவாகத்துக்கு இலக்கணம்

விவாகம் என்னும் பதத்திற்குப் பலவிதமான இலக்கணங்கள் கூறியிருக்கிருர்கள். எங்கள் விவாகச் சட்டங்கள் பொதுவில் ரோமன் டச் சட்டத்திலும் சிறப்பாகத் தேசவழமைச் சட்டத்திலும் தங்கியிருப்பதால் இக்கட்டுரையில் பெரும்பாலும் இச்சட்டங்களைத் தழுவியே விஷயம் ஆராயப்படும்.

டச் சட்ட சாஸ்திர வல்லுநரான வண்டர் லின்டன் என்பவர் விவாகத்துக்குக் கீழ்க்கண்ட இலக்கணம் கூறியிருக்கிருர்.

"ஒரு பெண்ணுக்கும் ஆணுக்குமிடையே பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதற்கும் தாங்களிருவரும் வாழ்விலும் தாழ்விலும் தங்கள் சீவிய காலம்வரை ஒருயிரும் ஈருடலும் போலே ஒருமித்துக்கூடி வாழ்வதற்குமாக உண்டாக்கப்படும் பிணைப்பே விவாகம் ஆகும்."

பொதுவிலே புருஷன் மனைவியென்னும் சட்டரீதியான தொடர்பைச் சிருஷ்டிக்கும் சடங்கை அல்லது முறையை விவாவகம் எனக் கூறுவர். மேற்கூறிய இலக்கணத்தில் பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதே விவாகத்தின் முக்கிய நோக்கம் என்று கூறப்பட்ட போதிலும் சில சமயங்களில் விவாகத்தில் இந்நோக்கம் இடம் பெருமலுமிருக்கலாம். உதாரணமாக மரணப் படுக்கையில் நடத்தப்படும் விவாகங்களில் இந்நோக்கம் இரு தம்பதிகளுக்கிடையே இருப்பதில்லை.

## மரணப் படுக்கை விவாகம்

இம்மரணப் படுக்கை விவாகங்கள் (Death Bed Marriages) இருவருக்குமிடையேயுள்ள தொடர்பை சட்டரீதியாக்கி விவாகத்துக்கு முன்னர் பிறந்த பிள்ளைகளைச் சட்டரீதியான சந்தானங்களாக்குவதற்குப் பயன்படுத்தப்படும். இதைவிட இந் நாகரிக நாட்களில் ஒரு பெண்ணுக்குத் தனது இளைப்பாறும் வேதன உரிமையில் (Pension Right) தன் மரணத்திற்குப் பிறகு பங்கு கொடுப்பதற்கும் ஒரு ஆண் மரணப் படுக்கை விவாகத்தைப் பயன்படுத்தலாம்.

## பிள்ளை பெறுவதுதான் நோக்கமா?

பிள்ளைகளைப் பெறுவதே விவாகத்தின் முக்கிய நோக்கம் என்பதற்கு ஆதாரமில்லையென்பது தற்காலச் சீர்கேடான பொருளாதார முறையால் விளைந்த விகற்பங்களால் விளங்கக் கிடக்கிறது. தற்காலத்தில் சில தம்பதிகள் தங்கள் பொருளாதார நிலையைக்குறித்தும் இக்கால அரசாங்கத்தின் பிறப்புக்கட்டுப்பாட்டு (Birth Control) பிரச்சாரத்தை முன்னிட்டும் விவாகத்துக்கு ஒழுங்கு செய்யும் காலத்தில் கூட தாங்கள் பிள்ளைகளைப் பெறுவதில்லை எனவும் அல்லது பிள்ளைப்பேற்றைத் தற்காலிகமாக நிறுத்திக்கொள்வதெனவும் தீர்மானம் செய்வதுமுண்டு.

இத்தகைய பிள்ளைப் பேறுக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் ஏற்படுவது நாகரிக காலத்தின் விளைவாகத்தான் என்று சொல்வதற்கு இடமில்லை. ஏனெனில் எத்தனையோ நாகரிகமற்ற காட்டுமிராண்டிகளென்று சொல்லப்படுபவர்களின் சமுதாயத்தில் கூட இக்கொள்கையையனுசரித்து, சினைப்பையைக் கத்தரித்தல் போன்ற சத்திர வைத்தியங்களினல் பிள்ளைப் பேற்றைத் தடுக்கிருர்கள்.

## ரோமில் பிள்ளைப் பேற்றுக்கு முக்கியத்துவம்

எனினும் பிள்ளைப்பேறே விவாகத்தின் ஒரு அம்சம் என்பதற்குப் போதிய ஆதாரம் பல சமுதாயத்தாரின் சட்டங்களிலிருந்தும் அறியக்கிடக்கிறது அதுவுமன்றிப் பிள்ளைப் பேற்றையதிகரிப்பதற்குத் தூண்டுகோலாகச் சட்டங்களும் பழங்காலங்களில் இயற்றப்பட்டிருப்பதைக் கவனிக்கலாம். உதாரணமாக ரோமாபுரியின் ரோமன் சட்டத்தில் நாலுக்கு மேற்பட்ட பிள்ளைகளைப் பெற்ற அடிமைப் பெண்ணுக்கு சுதந்திரப்பெண் (Freed Women) உரிமை வழங்கப்படுமென்றும், மலடுகள் தங்களுக்குத் தங்கள் உரிமைக்காரரிடமிருந்து மரண சாசனத்தால் வந்த ஆதனங்கள் முழுவதையும் பெறமுடியாதென்றும் வகுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

## மனுநீதியில்

இதைவிட மனுநீதிச்சட்டமாகிய இந்து மதச் சட்டத்திலும்கூட "புத்திரன்" என்னும் சொல் "நரகத்திலிருந்து பெற்றோரை இழுப்பவன்" என்னும் அர்த்தமுடையது என்பதை ஆதாரமாகக் கொண்டு புத்திரப்பேறே விவாகத்தின் [illegible] இதை யொட்டியே இந்துச் சட்டத்தில், விவாகத்தில் புத்திர உற்பத்தியில்லாதவன் மனைவியிருக்க புத்திர உற்பத்திக்காக மறுவிவாகம் செய்யலாம் என்னும் சட்டம் இடம்பெற்றது. (சமீப காலத்தில் இந்துச் சட்டத்தில் இருந்த இக்கொள்கையில், இந்தியாவில் செய்யப்பட்ட மாற்றம் கவனிக்கத் தக்கது.)

## விவாகத்தின் இயல்புகள்

இனிச்சட்டரீதியானவிவாகத்தின் முக்கிய இயல்புகளைப்பற்றியாராய்வோம். இவைகளை (1) விவாகப் பக்குவம் (Comptency of Marriage) (2) விவாகத்துக்கு முறையில்லாச் சுற்றத் தொடர்பு (Prohibited Relationship to Marriage) (3) தம்பதிகளின் சம்மதம் (4) பெற்ருேர்களின் சம்மதம் (5) விவாகக் கிரியைகள் (Ceremonies of Marriage) என்ற தலைப்புகளில் ஆராய்வோம்.

## விவாகப் பக்குவம்

முதலில் விவாகப் பக்குவம் என்பது யாது என்பதைச் சற்று விரிவாக விளங்கிச் சொள்ள வேண்டும். விவாகம் ஒரு ஒப்பந்தத்தால் ஏற்படுதலால் இருவருக்கும் மனேபக்குவமும், உடல் சம்பந்தப்பட்ட படியால் உடல் பக்குவமும் இருக்க வேண்டும். இவ்விரண்டு பக்குவங்களையும் முன்னிட்டு விவாகம் செய்து கொள்ள முற்படும் பேர்வழிகள் ஒரு குறிக்கப்பட்ட வயதைத் தாண்டியிருக்க வேண்டுமெனும் சட்டமுண்டு. இக் குறித்த வயது விஷயத்தில் ஒவ்வொரு சமுதாயமும் வித்தியாசமான கொள்கைகளைக் கையாளும்.

## பாலிய விவாகம்

தற்காலத்தில் இலங்கையைப் பொறுத்த அளவில் விவாகத்தில் ஈடுபடும் ஆணுக்குப் பதினறு வயதும் பெண்ணுக்கு பன்னிரண்டு வயதும் நிரம்பாவிடின் அவர் விவாகம் சட்டரீதியற்றது எனக் குறிக்கப்பட்டிருக்கிறது பெண்ணின் பெற்ருேர் ஐரோப்பியர் அல்லது பறங்கியராயிருந்தால் பதினன்கு வயதிற்கு மேற்பட்டிருக்க வேண்டும். (இங்கு, ஆங்கிலேயச் சட்டத்தில் பதினறு வயதுக்கு மேற்படாத பெண் விவாகப்பக்குவமற்றவள் என்பது குறிப்பிடத் தக்கது.) 1907-ம் ஆண்டுக்கு முன் தேச வழமைப்படி பாலிய விவாகம் சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## மறுதார மணம்

ஒருவர் விவாகமாகி அவரின் தம்பதி உயிருடனிருக்க அன்னுரை விவாகரத்துச் செய்யாத சந்தர்ப்பத்தில் மறு விவாகம் செய்ய அவர் தகுதியற்றவராவார். இப்படிப்பட்டவரின் மறு விவாகம் சட்டரீதியற்றது. அவர் பேல் பலதாரக் குற்றத்துக்கு (Bigamy) வழக்குத் தொடரப்படும்.

இச் சட்டத்துக்கு விதிவிலக்காயுள்ளவர்கள் இஸ்லாம் சட்டத்துக்குட்பட்டவர்கள். அதாவது இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த ஆண்கள் ஒரே காலத்தில் நான்கு பெண்களை விவாகம் செய்து கொண்டு வாழ்க்கை நடத்தலாம். (ஆனல் ஒரு ஆண் ஏற்கனவே விவாகமாகிய பெண்ணைத் தாம் மணக்க முடியாது.

## ஏழு வருட எல்லை

சமீப காலம் வரை தாய் நாடாகிய இந்தியாவின் இந்துச் சட்டப்படி ஒரு இந்து ஆண் நான்கு பெண்களை விவாகம் செய்யலாம். அப்படியிருந்த காலத்திலும் அவர் இங்கு வந்து தங்கியிருக்கும் சமயத்தில் மறுதாரம் விவாகம் செய்தால் அவர் பலதாரக் குற்றத்துக்கு ஆட்படுவார். இங்கு கவனிக்கக் கூடிய ஒரு நுட்பமான விஷயமுண்டு. ஒருவருக்கு தம் மனைவி உயிருடன் இருப்பதாகத் தகவல் ஏழு வருடங்களாகக் கிடையாவிடின் அவர் மறுதார விவாகம் செய்து மற்ற மனைவிக்கு இதை விளக்கியிருந்தால் அவர் பலதாரத் தண்டனைக்குற்றத்துக்கு ஆளாக மாட்டார். ஆயினும் விவாகம் முந்திய மனைவி உயிருடன் இருக்குமளவில் சட்டரீதியற்றதும் சூன்யமானதுமாகும்.

## முறையில்லாத சுற்றத் தொடர்பு

இனி இரண்டாவது இயல்பாகிய விவாகத்துக்கு முறையில்லாத சுற்றத் தொடர்பைப் பற்றியாராய்வோம். கிட்டிய இரத்தத் தொடர்பு உள்ளவர்கள் ஒருவரையொருவர் விவாகம் செய்யக் கூடாதென்னும் கொள்கை எல்லாச் சமுதாயத்திலும் உள்ளது. (இக்கொள்கைக்கு வைத்திய சாஸ்திரமும் அனுபவமுமே ஆதாரமாயுள்ளன இக் கொள்கைக்கு விதிவிலக்காயுள்ளவை பழங்கால எகிப்து அரச பரம்பரையும் பீரு (Peru) அரச பரம்பரையுமே. அப்பரம்பரைகளில் பழங்காலத்தில் பரம்பரைச் சுத்தத்திற்காக ஒருவர் தன் சகோதரியை விவாகம் செய்யலாம் என்னும் கொள்கை இடம் பெற்றிருந்தது.)

## ஆணுக்கு தடை

இலங்கைச் சட்டத்தில் விவாகத்துக்கு முறையில்லாத சுற்றத் தொடர்ப்பு யாதுஎனஇனிஆராய்வோம். (1) ஒருவர் தன் பிற்சந்ததி அல்லது முற்சந்ததியிலுள்ளவரை விவாகம் செய்யக் கூடாது. (2) ஒருவர் தமது கூடப் பிறந்த சகோதரியையாயினும் அல்லது தாய் தந்தையரின் மறு விவாகத்தில் பிறந்த சகோதரியையாயினும் அல்லது இப்பேர்ப்பட்ட சகோதரியின் அல்லது சகோதரனின் சந்ததியில் வந்த பெண்ணையாயினும் மணக்கக் கூடாது. இதைவிடத் தன் மனைவிக்கு மறுதாரத்தால் பிறந்த மகளையாவது அல்லது தன்னுடைய மகனுடைய அல்லது பேரனுடைய விதவையையாவது விவாகம் செய்யக் கூடாது.

## பெண்ணுக்கு தடை

இதேமாதிரி ஒரு பெண் தனது கூடப்பிறந்த சகோதரனையாயினும் அல்லது தாய் தந்தையரின் மறு விவாகத்தில் பிறந்த சகோதரனையாயினும் அல்லது இப்பேர்ப்பட்ட சகோதர சகோதரிகளின் சந்ததியில் வந்த ஆணையாயினும் விவாகம் செய்யக் கூடாது. இதைவிடத் தன் புருஷனுக்கு மறுதாரத்தால் பிறந்த மகனையாவது அல்லது தன்னுடைய இறந்த மகளின் அல்லது இறந்த பேரப்பிள்ளையின் புருஷனையாவது விவாகம் செய்யக் கூடாது.

(11-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைலாசம் கண்டேன்



22

### மால்ப்பா

ஆகஸ்ட் முதல் தேதி — புக்தியிலிருந்து ஏழு மைல்களுக்கப்பால் 'மால்ப்பா' அமைந்திருக்கின்றது. மால்ப்பா நதியினால் வளம் பெறும் கிராமம் மால்ப்பா என்று அழைக்கப்படுகின்றது. இங்கு நிரந்தரமாக மனிதர்கள் வதிவதில்லை. பிரயாணிகள் தங்குவதற்கென்று ருமாதேவி அம்மையாராற் கட்டுவிக்கப்பட்ட தருமசாலை இரு அறைகளுடன் இருக்கின்றது. அதன் சுவர்களும் கூரைகளும் கற்பலகைகளாலானவை. தரை மேடும் பள்ளமுமாதலின் இலை குழைகளைப் பரப்பி ஒப்பமாக்கிய பின்னரே படுக்க முடியும். அக் குடிசையின் அணிமையில் தபாற்காரன் வீடும், வழிகளைத் திருத்துவோர் குடிசையும் இருக்கிறன.

வானைத் தொட்டு நிற்கும் மலைகள் சூழ்ந்துள்ள மால்ப்பா, நாற்புறமும் கற்கோட்டைசூழ்ந்ததோர் நகர் போன்றிருக்கிறது. மால்ப்பா நதியும், காளி கங்கையும், மாறுபட்டு முழங்கி ஓடும் ஓசை கர்ண கடூரமானது. அந்த நதிகளின் நீர் வளத்தால்,நில வளமும் நிறைந்து மரம் செடி கொடிகள் செழிப்புடன் காணப்படுகின்றன.

### காளி கங்கை

புக்தியிலிருந்து மால்ப்பா செல்லும் பாதை ஆபத்துக்கள் நிறைந்தது. செங்குத்தாகஉயர்ந்து 5,000 அடி வரை உயர்ந்த மலைகள் இருபுறமும் இருக்கின்றன. மலைச்சாரரில் ஒரு பக்கத்திற் பாதை செல்கிறது. பாதையின் மறு பக்கத்திற் கிடு கிடு பாதாளத்தில் காளி கங்கை ஓடுகிறது. வழி நெடுகிலும் இயற்கை அழகு நிறைந்துள்ள தெனினும் உயர ஏறியும், கீழே இறங்கியும் ஊன்று கோல் உதவியுடன் நின்றும் இருந்தும் போக வேண்டிய பாதையில் இயற்கையழகை முற்றுக ரசிக்க முடிவதில்லை. புல் பூண்டு முளைக்கும் காலத்தில் இந்திய எல்லைக்குள் திபெத்தியர் தமது ஆடுகளைக் கொண்டு வருகின்றனர். பனிக் காலம் முடிந்து பாதை திறக்கப்பட்டதும் தமது மந்தைகளோடு மேலே செல்கின்றனர். மலைப்பாதையிலே ஆட்டுக் கூட்டம்வரின் மலையோரத்தில் ஒதுங்காவிடில் மோதுண்டு காளி கங்கைக்குப் பலியாக வேண்டும்.

### ஜிப்தி

புக்தியிலிருந்து மால்ப்பா வழியாக சுமார் 18 மைல்கள் நடந்து ஜிப்திக்கு வந்து சேர்ந்தோம். வழி முழுவதுதும் மாறி மாறி வந்த ஏற்ற இறக்கங்கள் எல்லாம் ஆற்றோரங்களிலேயே அமைந்திருக்கின்றன. சில இடங்களிற் கையாற் பாதையைப் பிடித்துக்கொண்டு கோலை ஊன்றி ஏறுதல் வேண்டும். வேறு சில செங்குத்தான ஏற்றங்களில் குனிந்து தவழ்ந்து செல்லுதல் வேண்டும். தாழ்ந்த இறக்கங்களில் குந்தி இருந்து இறங்க வேண்டும். இரு பாதைகளுக்கும் இடையில் பொருந்தியுள்ள மரக் கட்டைகளுக்கு மேலே நடந்து செல்லும் போது அதன் கீழேயுள்ள ஆற்றேட்டம் தலையைக் கிறு கிறுக்கச் செய்யும். சில இடங்களில் மலையுச்சியிலிருந்து கட கடவென்று பெரும் கற்கள் உருண்டு வரும். வேறு சில இடங்களிற் பாதை வழுக்கி விழுத்தும். இவற்றை எல்லாம் தாண்டி இரு பெரும் பாறைகட்கிடையில் நுழைந்து செல்லும் பிந்துக் கோட்டை வழியைக் கடந்து ஒரு மைல் சென்றதும் ஜிப்தி என்ற ஊரைக் காணலாம்.

### பழம் கிடைத்தது

ஜிப்தி என்ற பதத்திற்குச் சிக்கனம் என்பது கருத்து. சுமார் 8,000 அடி உயரத்திலுள்ள ஜிப்தியின் இடம் சிறிதாகச் சிக்கனமாகவே இருக்கின்றது. பாதையும் குறுகியதாய் அமைந்திருக்கிறது. வழியில் ஒரே ஒரு தேனீர் கடைதானுண்டு. நாம் சென்ற போது கடைச் சொந்தக்காரர் திரு சதுர்சிங் அன்பாகப் பேசித் தேனீரும் ஆப்பிளும் வாழைப்பழமும் தந்து உபசரித்தார். ஜிப்தியில் 'டோலியா' என்னும் ஒருவகை பூ அதிகாமாக உண்டு. வழியில் இடையிடையே ஆப்பிள் நிறையக் கிடைத்தது.

### சர்தான் பாதை

ஆகஸ்ட் 2-ல் ஜிப்தியிலிருந்து சர்காலி சர்தான் என்ற இடத்தின் வழியாகச் சுமார் ஒரு மைல் நடந்து சென்று ஷங்குலா நதிக் கரையை அடைந்தோம். அதனைக் கடந்து காட்டுக்குள் நுழைந்தோம். அடிக்கடி மழை பெய்துகொண்டே இருப்பதனுல் பாதை முழுவதும் சதசதப்பும், சேறும், சறுக்கலுமாகவே இருக்கின்றது. மூன்று மைல்களுக்கு ஒரே ஏற்றம். பின் கீழ் இறக்கம், மீண்டும் நடுத்தரமான ஏற்றம். இவ்விதம் ஏற்றமும் இறக்கமுமாக மாறி மாறிச் சர்தான் பாதை அமைந்திருக்கின்றது. சர்தானிற் கம்பளித் துணி நெசவு செய்யும் பகுதித் தலைவர் திரு மல்ஹோத்திரா அவர்கள் அன்புடன் உபசரித்தார். அன்றிரவை அவருடைய இல்லத்திலேயே கழித்தோம். அவ்விடத்திலிருந்து [illegible] இரண்டு மைல் தூரத்தில் இருப்பதாக அறிந்தும், நேரத்தின் அருமையால் அங்கே போக முடியவில்லை. சுமார் 11 மணிக்குப் புறப்பட்டு 'பங்கு' வந்து சேர்ந்தோம்.

### பங்கு

ஆகஸ்ட் 3-ல் பங்குவில் தங்கினேம். இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 7,000 அடி உயரத்தில் இருக்கின்றது. வழியிற் பல மரக் கிளைகளிற் பல நிறத் துணிகள் தொங்குகின்றன. அவையெல்லாம் புடவை காய்க்கும் மரங்களல்ல. இறைவனைப் போற்றுகின்ற பிரார்த்தனைக் கொடிகள். இப் பிரார்த்தனைக் கொடிகள் பல ஆங்காங்கே இருக்கின்றன. பங்கு பூட்டிகளுடைய நாடு. இவர்களின் பிரதேசம், தவள கங்கைக்கு வடக்கிலிருந்து ஆரம்பிக்கின்றது. அனைவரும் வணிகத் தொழிலிலேயே ஈடுபட்டுள்ளனரெனினும் தாம் ராஜபுத்திர மரபினர் என்று கூறிக் கொள்ளுகின்றனர். பூட்டியர் திபெத்திய மக்களோடு வியாபாரத்துறையில் மட்டுமின்றி, விவாகம் செய்வதிலும் உறவாடி வருகின்றனர். பலர் பூநூல் அணிகின்றனர். இவர்கள் ஏறக்குறைய சீனருடைய முகச்சாயலை உடையவர்கள். இந்தியும், திபெத்திய பாஷையும் கலந்ததோர் பாஷையைப் பேசுகின்றனர்.

பங்குவில் சுவாமி பகவதானந்தஜியின் பந்துக்கள் வீட்டில் பகல் தங்கினேம். பக்தி நிறைந்த பஜனையை ரசித்தோம். பல சுவையான போஜனமும் பெற்று சுமார் இரண்டு மணிக்கு அவர்களின் அன்பு நிறைந்த உபசாரத்துடன் பிரியா விடை பெற்றோம்.

### யேலா

யேலாவிற் "கேலா" மிக அதிகம். ஹிந்தியில் கேலா என்றால் வாழைப்பழம். இக் கிராமத்தில் மக்களின் தொகை மிகக் குறைவானதால் ஆங்காங்கே சிற் சில வீடுகள் தூரத் தூர அமைந்திருக்கின்றன. இங்குள்ள கடைக்காரர் அன்புள்ளம் படைத்தவர்கள். வழிச் செல்வோர் தங்கிச் செல்வதற்கு வீடுகள் கொடுத்துதவுகின்றனர். வாழைப்பழமும், நெய்யும் அதிகமாகக்கிடைக்கின்றன. மழை அடிக்கடி தூறிக்கொண்டேயிருக்கின்றதெனினும் நாம் தங்கிய இடத்தின் அருகாமையில் தண்ணீர் எடுப்பது அருமையாகவே இருந்தது.

### கரடுமுரடான வழி

காளி கங்கை வழியே செல்லும் பாதையில் சிறந்த நீர் வீழ்ச்சிகளோடு அழகான இயற்கைக் காட்சிகள் களிப்பையூட்டுகின்றன. தார்சூலா செல்லும் பாதை யேலாவிலிருந்து குறுகியதாய்ச் செல்கிறது. முதல் மூன்று மைல்களின் வழி வளைந்து, வளைந்து கீழ்நோக்கிச் செல்வதால் மிக அவதானமாக இறங்க வேண்டும். அப்பால் மேடும் பள்ளமும் மணற் சரிவும் உடைய கரடுமுரடான வழியைக் கடந்து செங்குத்தாக உயர்ந்துள்ள மலைச்சரிவிலே மிகக் குறுகிய பாதையிலே செல்ல வேண்டும்.

### கற்கண்டம்

மலைச் சரிவிலிருந்து, கற்கள் நிறைந்த இப் பாதையில் குதிரைகள் மூட்டைகளைச் சுமந்து செல்வது மிக மிகக் கஷ்டம். துணிவுடைய ஒருசிலர் குதிரைகளை நடத்தி வருவதுமுண்டு; கேலாவின் அணிமையில் நதிக்கரையில் வழி சறுக்கிப் பாறைமேல் விழுந்தேன். எனினும் சிறு அடியோடு தப்பினேன். பின்பும் உற்சாகமாகத்தான் நடந்துசென்றேன். ஆனல் தார்ச்சூலாவை அடையுமுன் ஓரிடத்தில் எங்கிருந்தோ கடகடவென்று சத்தம் கேட்க, ஓசை வந்த

(13-ம் பக்கம் பார்க்க)

---

கடல் உழுபவன் தமிழன்; கடன் என்னும் பெருங் கயிற்றுல் அவனைக் கட்டிப் போட்டு, அவன் உழைப்பைக் காசாக்குபவன் அயலவன்! இது திருமலை.........

## நீருழவன்

''மஹாகவி''

ஓட்டைக் குடிசை ஒழுக விழித் திரவில்
நாட்டைக் கடந்தான்; நடுக் கடலில்
போட்ட
வலையை வலித்திழுத்தான்; வந்ததோ பாசி!
குலையாத நெஞ்சைக் கொடுத்தே
அலையோடு
முட்டி அதன் மேல் முகட்டில் மிதந்து விழும்
மொட்டைப் படகை முடுக்கினுன்;
வெட்டை வெளி
நீரை உழுதான்— நெடு நாட் பழக்கம் அது—
பாரை, சுறு என்று பார்த்திருக்கும்
ஊரை
மகிழ்விக்க வல்ல மனிதன்; வயிற்றை
அகழும் பசியால் அயரான்;
பகல் முற்ற
முன்னர் தன் வற்ரு முயற்சிக் கிவை ஈடே
என்னும் படி நிறைந்த எவ்வளவோ
மின்னுகின்ற
மீனின் சுமையோடு மீள்கின்றுன்! பேருழைப்
பீனும் மகிழ்ச்சிக் கெதிரேது?
மானிடன்
தொட்டால் துலங் காத் தொழில் உண்டோ? விட்டவள்
பட்டே புனைந்து 'பளிச்' சென்று
மொட்டுவாய்
ஏன் சிரிக்க மாட்டாள் இனிமேல்? எழிற்சிறுமி
தேன் தமிழைக் கற்று வரச் செல்லாளோ,
ஏனையவர்
பிள்ளைகள் போலப் பெரும் பள் ளியை நோக்கி,
வெள்ளை உடுத்து மிடுக்குடனே?
உள்ளபடி
இந்தப் படகொன் றிருந்தால் முழு உலகும்
சொந்தமே! ......வந்து கரை தொட்டான்;
வந்ததுவும்
வேண்டும் சில என்று வேண்டினுன் அங் கொருவன்
மீண்டும், பின் மீண்டும்; மிரள்கின்றுன்
தோண்டி அவை
முற்றும் கொணர்ந்த முதலாள்! மிக அஞ்சிச்
சுற்று முற்றும் பார்த்துச் 'சுறுக்'காக
ஒற்றை மீன்
தன்னை எடுத்தான்; தருங்கால்...... அட, ஒ!—அங்
கென்ன நிகழ்ந்த தெதைக் கண்டான்,
இன்றைக் கிங்
கேதுந் தர இயலா தென்றே, மறைத்திட?......அப்
போதோர் புது ஆள் நுழைகின்றுன்!
ஏதேது,
வந்த அவன் முழுதும் வாரி அள்ளிக் கொள்கின்றுன்!
எந்த நியதிக் கிது ஏற்கும்?
சந்தையிலே
விற்றுப் பயனடைவோன் வேற்றுள்! விளைவேதும்
அற்றுப் போய் மாய்வோன் அரும் வலைஞன்!
முற்றியுள்ள
பொல்லாக் கடனுல் பொருந்தா வகையில் தன்
செல்வத் தொடும் உழைப்பைச் செல்லவிட்டு
மெல்ல
நடக்கின்றுன் வீட்டுக்கு, நாளும் உளத்தை
ஒடுக்கின்ற ஏமாற்றத் தோடு!

---

குறைந்த செல்வில்
வெண்மையான சலவைக்கு
மில்க் வைட்
நீல சோப்
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்:
மில்க் வைற் சோப் தொழிற்சாலை,
527, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.

ஆசிரிய கலாசாலைப்
பிரவேசப் பரீட்சை 1959
இப்போட்டிப் பரீட்சையில் நீங்கள் கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியைப்பெற உங்களுக்கு வழி காட்டும் எமது புத்தகங்களை இன்றே வாங்கிப் படியுங்கள்
பாடத்திட்டம் தழுவிய புத்தகங்கள்;
★ பாஷை ★ பூமிசாஸ்திரம் ★ எண்கணிதம்
★ சரித்திரம் ★ பொதுவிவேகம்.
ஒவ்வொரு பாடப் புத்தகமும் ரூபா 12-50.
தபாற் செலவு பிரதிக்கு 35 சதம்.
கடந்தகால வினு, விடைகள் ஒவ்வொரு பாடத்துக்கும்
ரூபா. 3-00 தபாற் செலவு 35 சதம்.
விபரங்களும் விலைப் பட்டியலும் இலவசம்
விபரங்களுக்கு எழுதுக:
அற்லஸ் ஹோல்,
723, மருதானை, கொழும்பு.
தபாற் பெட்டி 649 போன்: 9759.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTHIRAN

1959 ஜூன் மாதம் 14-ந் தேதி

194 ஏ, நட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


## பெருமையும் சிறுமையும்

அற்றம் மறைக்கும் பெருமை, சிறுமைதான்
குற்றமே கூறி விடும்

—திருக்குறள்

இதன் பொருள்: பெருமைப் பண்பு உடையவர் பிறர் அடைந்த அவமானத்தை மறைத்து நடப்பர். சிறுமைத் தனம் உடையவரோ பிறர் குணத்தை மறைத்து குற்றத்தையே கூறிக் காட்டுவர்.

கடந்தவாரம் நடைபெற்ற வவனியாப் பட்டினசபைத் தேர்தலையடுத்து அடங்காத் தமிழ்த் தலைவரும் வவனியா பிரதி நிதியுமான திரு. ஸி. சுந்தரலிங்கம் வெளியிட்ட கருத்தினையும், தமிழரசுக் கட்சியின் தலைவரும், திருமலைப் பிரதிநிதியுமான திரு என். ஆர். இராஜவரோதயம் வெளியிட்ட கருத்தினையும் ஒப்பு நோக்கிப் பார்க்கும் போது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருவள்ளுவர் தீட்டிய மேற்படி மணிக்குறள் நம் ஞாபகத்துக்குவருகிறது. இரண்டுவிதமான மனிதர்களுடைய குணாதிசயங்களை எவ்வளவு சிறப்பாகவும் பொருத்தமாகவும் எடுத்தோதி விட்டார் வள்ளுவர் என்று நாம் வாயிலே விரல் வைத்து வியக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

வவனியாவில் சுந்தரலிங்கம் அடைந்த படு தோல்வி தனிப்பட்ட முறையில் அவரோ, அவர் கட்சியோ, அவர் சார்ந்த கொள்கையோ அடைந்த பெறு பேறு என்று சொல்வதை விட, அவரிடம் எப்போதும் கொக்கரித்துப் பேய் நடம் புரியும் "நான்! நான்! நான் எனும் அகந்தை" அடைந்தபடுதோல்வி என்று கொள்வதே சாலப் பொருத்தமுடையதாகும். இந்த அளவு மூக்குடைபட்ட பின்னரும் அவருடைய அகந்தையும் ஆணவமும் அடங்காது மீண்டும் கெம்புவதைப் பார்த்தால் அவரை வீரர் என்றுசொல்வதா அன்றி வீணர் என்று கொள்வதா என்பது நமக்குப் புரியவில்லை!

1956-ம் ஆண்டுக்கு முன்பு நடைபெற்ற வவனியா உப தேர்தலிலும் சரி, 1956-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் சரி, தமிழரசுக் கட்சியினர் திரு. சுந்தரலிங்கத்துக்குப் பெரும் ஆதரவு அளித்தனர். திருவாளர்கள் வன்னியசிங்கமும், அமிர்தலிங்கமும் வவனியாத் தொகுதியில் மேடை மேடையாக ஏறி திரு. சுந்தரலிங்கத்துக்காக தேர்தல் பிரசாரம் செய்ததைத் தமிழ்ப் பேசும் மக்கள் மறந்திருக்க முடியாது. இன்று திரு. சுந்தரலிங்கத்தைத் தோற்கடித்திருக்கும் வவனியாப் பட்டினசபைத் தலைவர்—உப தலைவரான திருவாளர்கள் ச. சுப்பிரமணியம், த. சுப்பிரமணியம் ஆகியோரும் பொதுத் தேர்தலில் அவருக்காக ஓடாய் உழைத்தவர்கள் தாம்.

தமிழரசுக்கட்சியினர் நினைத்திருந்தால் 1956-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் வவனியாவில் ஒரு அபேட்சகரை நிறுத்தித் திரு. சுந்தரலிங்கத்தைத் திண்டாடச் செய்திருக்கலாம். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. 'அவரும் வரட்டும் பாராளுமன்றத்துக்கு' என்று பெருந்தன்மையாக நடந்துகொண்டார்கள். இதற்கு கைமாருகத் திரு. சுந்தரலிங்கம் செய்தது என்ன? எப்போதும் தமிழரசுக் கட்சியைத் தாக்கி வந்திருக்கிறார். திரு. செல்வநாயகம் போன்ற தலைவரோடு சேர்த்து Cut-Throat என்ற ஆங்கில இழிபதத்தையும் பிரயோகித்து வந்திருக்கிறார். அப்படியிருந்தும் இவருடைய விதூஷகத் தனத்தைத் தமிழரசுக் கட்சியினர் மேலும் பெருந்தன்மையோடு அலட்சியப்படுத்தி வந்திருக்கின்றனர். இருந்தும் பொறாமையும் அகந்தையும் அவரைப் பொறுமையோடிருக்க விடவில்லை. பட்டின சபைத் தேர்தலில் முட்டி மோதி மொக்கையீனப்படும் அளவிற்கு அவர் நிதானமிழந்தவரானார்.

1956 பொதுத் தேர்தலின்போது அடங்காத் தமிழர் கட்சி என்று இல்லாத ஒரு ஸ்தாபனத்தின் தலைவராகத் தம்மை ஆக்கிக்கொண்ட திரு. சுந்தரலிங்கம், சில மாதங்களுக்கு முன்பு ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி என்று ஒரு புதிய ஸ்தாபனத்தை அமைப்பதாக யாழ்ப்பாண முற்ற வெளியில் ஒரு கூட்டம் போட்டார். அவர் இயக்கம் பற்றிப் பிடிக்கவில்லை; ஈரவெடியாகச் சீறிப் புகைந்துவிட்டது.

உடனே வவனியாப் பட்டின சபைத் தேர்தலில் குதித்து ஒரு அரசியல் வாணவேடிக்கை காட்ட முற்பட்டார். அதன்மூலம், தமிழர்கள் தனியாட்சியைக் கோருகிறார்களா? சமஷ்டி ஆட்சியைக் கோருகிறார்களா? அல்லது தற்சமயம் இருக்கும் ஒற்றையாட்சியே நீடிப்பதை விரும்புகிறார்களா என்பதைப் பரீட்சித்துப் பார்த்து அவர்கள் தீர்ப்புப்படி நடக்கப்போவதாக அறிக்கைக்கு மேல் அறிக்கை வெளியிட்டார்.

தமிழர்கள் சமஷ்டி ஆட்சியையே கோருகிறார்கள் என்பதை ஐயந்திரிபுக்கு இடமின்றி ஆணித்தரமாக நிலை நாட்டிவிட்டார்கள். இதன் பின்னர் ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி அமைக்கும் தலைவர் கண்ணியமுடையவராயிருந்தால் என்ன செய்திருக்கவேண்டும்? தமிழர்களிடையே ஒற்றுமையை நிலைநாட்டுவதற்காக—மக்கள் தீர்ப்பை மகேஸ்வரன் தீர்ப்பு என்று ஏற்றுக்கொண்டதற்கு அறிகுறியாக—தமிழரசுக்கட்சியின் அங்கத்துவ விண்ணப்பப்பத்திரம் ஒன்றை வாங்கி நிபந்தனையின்றிக் கையொப்பமிட்டுத் தமிழரசுச் செயலாளரிடம் நீட்டியிருக்க வேண்டாமா?

ஒற்றுமைபற்றி வாய்பிளக்க கதறும் திரு. சுந்தரலிங்கம் அப்படிச் செய்யவில்லை. தமது கருத்தை, [illegible] மையை, ஆதரிக்காத வவனியா மக்களை அக்[illegible] பழிவாங்கப்பார்க்கிறார். "இனி என்னிடம் புத்திகேட்டு வராதீர்கள், நான் உங்களுக்குப் பாதுகாப்புத் தரமாட்டேன்" என்று வீம்பு பேசுகிறார். இது பண்பாகுமா? பெருமை தரும் பேச்சாகுமா? அன்றிச் சின்னத்தனமாகுமா என்பதைத் தமிழ்ப் பொதுமக்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அதுமட்டுமல்ல, தோல்வியின் பின்னரும் அவரிடமிருந்து தோன்றும் 'பண்பு' வாய்ந்த வாக்கியம் என்னவென்று பாருங்கள்: "இலங்கை வாழ் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தாங்களே என்று சொல்லிவரும் சிங்களத் தமிழரசுக் கட்சி இதுவரை தமிழ் மக்களுக்கு எந்த நன்மையாவது செய்ததாகத் தெரியவில்லை. தமிழ் இனத்தைப் பாழ்படுத்தியதே தவிர, வேறு எதையும் சாதிக்கவில்லை" என்கிறார். 'சிறுமைதான் குற்றமே கூறிவிடும்' என்ற குறள் வாக்கு இங்கு சுடரிடுகிறது.

அதே சமயத்தில் திரு. சுந்தரலிங்கம் அடைந்த அவமானத்தைக் கூட மறைத்து, பெற்ற பெருந் தோல்வியை அறவே பொருட்படுத்தாமல், அவரையும் ஒரு வீரராக மதித்து "அரசியலைத், துறவாதீர்கள், தமிழ் அரசுக் கட்சியில் சேர்ந்து தமிழ் இனத்தின் விடுதலைக்காகப் போராடவாருங்கள் என்று உங்களை நான் வருக, வருக என அழைக்கிறேன். தமிழ்த் தாய் இன்று இலங்கையில் இன்னல்கள் பல அடைந்து துன்பத்தின் வாயிலில் நின்று பரிதவிக்கிறாள். இவ்வேளையில் நாம் அனைவரும் ஒன்றுபடுவோம். ஒரே கொடியின் கீழ், ஒரே இலட்சியத்தின் பொருட்டுத் திரளுவோம். தமிழ்த் தாயினதும் தமிழ் இனத்தினதும் உரிமைகளுக்காக ஒரே முனையில் போராட்டத்தை நடத்துவோம்" என்று பண்பு கொண்ட இதயத்தோடு அன்புக் கரம் நீட்டி அழைக்கிறார் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் திருமலைப் பிரதிநிதியுமான திரு. இராஜவரோதயம். 'அற்றம் மறைக்[illegible] கூறு இங்கு ஒளி வீசுகிறது.

[illegible] து? சிறுமை எங்கு உளது? என்பதை இலங்கை வாழ் தமிழ் பேசும் பெருங்குடி மக்கள் இப்போது கண்டு கொண்டார்கள் அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாவின் மந்திரிசபை

## இத்தனை பெரியது இங்கு எதற்கு?

## அகண்ட தமிழ் நாட்டிலேயே ஆக 8 அமைச்சர்கள்தாம் உண்டு

பிரதமர் பண்டாரநாயகாவினுடைய மந்திரி சபை தொடர்ந்து குட்டி ஈன்றுகொண்டே வருகிறது. பதினான்கோடு ஆரம்பித்தது இடையில் பதினைந்தாகி இப்போது பதினாறு ஆகிவிட்டது. அமைச்சர்கள் என்று இருப்பவர்கள் 16பேர். ஆனால் உண்மையாகக் கணக்குப் போட்டுப் பார்த்தால் அவர்கள் தொகை 27 என்பது புலனாகும்.

### சொல்லும் செயலும்

"இலங்கையிலே ஒருவர் செய்யவேண்டிய வேலையைப் பத்துப்பேர் செய்கிறார்கள். ஒரு ரூபா பெறுமதியான வேலைக்கு பத்து ரூபா சம்பளம் பெறுகிறார்கள் "பொறு ஷோக்" அடிப்பதுதான் அவர்கள் இலட்சியமாக இருக்கிறது." என்றவாறு பிரதமர் பண்டாரநாயகாவே குறைப்பட்டிருக்கிறார் முன்னொரு தடவை.

அவர் இப்போது செய்திருப்பது என்ன? இத்தனை அமைச்சர்களை எதற்காக நியமித்திருக்கிறார்? இவ்வளவு பேரும் உண்மையில் அவசியந்தானா? பார்க்கலாம்.

### தமிழ் நாடும் இலங்கையும்

நமக்கு அருகிலுள்ளது தமிழ் நாடு. 50,000 மைல் சதுர மைல் அதன் விஸ்தீரணம். மொத்தம் 3 கோடி மக்கள் வாழ்கிறார்கள்.

நம்முடைய நாட்டு விஸ்தீரணமோ தமிழ் நாட்டினுடையதைக்காட்டிலும் அரைப்பங்கு குறைந்தது. அங்கு உள்ளவர்களில் மூன்றிலொரு பகுதியினரே இங்கு வாழ்கிறோம். ஆனால் நாம் 16, இல்லை, 27 அமைச்சர்களை வைத்திருக்கிறோம். தமிழ் நாட்டிலோ எட்டே எட்டுப்பேர்தான். பாராளுமன்றக் காரியதரிசிகளேயில்லாமல் தட்டத்தனிய அந்த எட்டுப் பேரும் உழைக்கிறார்கள். இங்கு உள்ளவர்களோ நெருக்கடிகளை உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்கள். இதுதான் வித்தியாசம் "எலிகள் அதிகமாகிவிட்டால் புற்றெடுக்க மாட்டா" என்பது பழமொழியல்லவா!

### அமைச்சர்களின் எண்ணிக்கை

27 பேருக்கு இங்கு அப்படி என்ன அரசாங்க வேலை இருக்கிறது? உள்ள வேலை வெட்டிச் சம்பளம் வாங்குவது ஒன்றைத் தவிர வேறு எதையும் சொல்லமுடியாது. மந்திரிகள் 27 பேர் என்று நாம் சொல்வது அவர்கள் பெறும் சம்பள அடிப்படையிலேயே.

அமைச்சர் பதவியிலுள்ளவருக்கு மாதமொன்றுக்குச் சம்பளம் ரூபா 1500-00. இதன்படி 16 பேருக்கும் கிடைப்பதுரூபா 24000-00. பாராளுமன்றக் காரியதரிசிப்பதவியிலுள்ளவர்களுக்கு ஆளுக்கு ரூபா 1000-00 வீதம் மொத்தம் 16000-00 கிடைக்கிறது. அதாவது மூன்று பாராளுமன்றக் காரியதரிசிகள் பெறும் சம்பளத்தை இரண்டு அமைச்சர்கள் பெறுகிறார்கள். இந்த அடிப்படையில் பார்த்தால் 16 பாராளுமன்றக் காரியதரிசிகளையும் 11 அமைச்சர்கள் என்று கண்டுகொள்ள முடிகிறதல்லவா!

### வெட்டிச்செலவு

அசல் அமைச்சர்கள் 16 பேரும் இந்தப் 11 பேரும் மாதாமாதம் 40,000 ரூபாவை விழுங்குவதோடு விஷயம் நின்று விடாது. இவர்களுக்கென்று இவாகா, எடுபிடி ஆள் எல்லாம் வேண்டுமே! அவற்றுக்கும் —டத்தண்டச் செலவு செய்து ஆக வேண்டும்.

தமிழ் நாடே எட்டே எட்டுப் பேரோடு கட்டுமட்டாகச் சரிக்கட்டி வரும்போது குட்டி நாட்டில் இப்படி எல்லாம் அதிக ஆள் வைத்து வெட்டிச் செலவுகள் செய்து வருகிறோம். கட்டுப்படியாகுமா? நாடுதான் உருப்படவழி யுண்டா?

### வெட்கக்கேடு

யு. என். பி. மந்திரி சபையில் இப்போதுள்ளதைவிடக் குறைவான அமைச்சர்களே இருந்தார்கள். அதை அப்போது கண்டித்த பண்டாரநாயகா தன்னுடைய அமைச்சரவையை குட்டி ஈன வைத்திருப்பது என்ன நீதி? கேட்டால் பதில் வராது. சொல்லிப் புரியவைத்தாலும் சொரணை ஏற்படாது. வெட்கக்கேடு!

### புதியவர்களும் பழையவர்களும்

16 அசல் அமைச்சர்களிலும் நான்கு பேர் புதியவர்கள். மற்றவர்கள் 12 பேரும் பழையவர்கள். எம். ஈ. பி. மந்திரி சபைக் குட்டையில் ஏற்கனவே கிடந்து ஊறியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## அடுத்த பொதுத் தேர்தல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்று குடியேறிவிட்டவர்களும் ஆங்காங்கே தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளத் தவறக் கூடாது.

3. அத்தோடு தொடர்ந்து, இப்போதும் சிங்களப் பகுதிகளில் இருந்து வரும் தமிழ் மக்கள் ஆங்காங்கே தமது பெயர்களைப் பதிவித்துக்கொள்ளவும் பின் நிற்கக் கூடாது. 'நமக்கேன் தொந்தரவு' என்ற மனோபாவத்துடன் அலட்சியமாக விட்டுவிடக் கூடாது. சிங்களப் பிரதேசங்களில் உள்ள தமிழர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்வதனால் தமிழ் மக்களின் கூட்டுப் பலம் அதிகரிக்கிறது.

### இறுதித் தேதி

'பெயர் பதிவுக்கான விண்ணப்பப் பத்திரங்களைப் பூர்த்திசெய்து 29-6-1959க்கு முன்பதாக கொழும்புப் பகுதியிலுள்ள வாக்காளர்கள் றெஜிஸ்டார் ஜெனரலிடத்திலும், ஏனைய பகுதிகளிலுள்ள வாக்காளர்கள் தத்தம் பகுதிக் காரியாதிகாரியிடத்திலும் சேர்ப்பிக்கவேண்டும்.


### பத்திரங்கள் கிடைக்குமிடம்

"விண்ணப்பப் பத்திரங்கள் (1) கிராமவிதானை (2) மாநகரசபை, நகரசபை, பட்டினசபை, கிராமச்சங்க காரியாலயங்கள் (3) காரியாதிகாரியின் அலுவலகம் (4) கச்சேரி ஆகிய இடங்களில் கிடைக்கும்.

### கோரிக்கை

"இப்பத்திரங்களைப் பெற்று பதிவு செய்யப்படவேண்டிய அனைவரின் பெயர்களையும் உரிய விவரங்களுடன் நிரப்பி குறிப்பிட்ட தவணையாகிய 29-6-1959க்கு முன் விண்ணப்பப் பத்திரங்கள் கிடைக்க வேண்டிய அலுவலங்களில் சேர்ப்பிக்கும் பணியை ஊக்கமாகச் செய்யவேண்டுமென இலங்கை அனைத்திலுமுள்ள தமிழரசுத் தொண்டர்களையும், உறுப்பினர்களையும், தமிழரசு அனுதாபிகளாயுள்ள மற்றுமுள்ளோரையும், கொழும்பு போன்ற நகரங்களில் உள்ள உற்சாகமிக்க தமிழ் இளைஞர்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன்." இவ்வாறு திரு. வன்னியசிங்கம் தமது விசேஷ அறிக்கையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

# வவனியாவில் வெற்றி பெற்றவர்கள்



இடமிருந்து வலம்—
1. திரு. ச. சுப்பிரமணியம் (முதலாம் வட்டாரம்) தமிழரசுக் கட்சி வவனியாக் கிளைச் செயலாளர் பட்டின சபைத் தலைவர்.
2. திரு. த. சுப்பிரமணியம் (5-ம் வட்டாரம்) தமிழரசுக் கட்சி வவனியாக் கிளைத் தலைவர் பட்டின சபை உபதலைவர்.
3. திரு. சா. மு. யூசுப் (2-ம் வட்டாரம்) தமிழரசுக் கட்சி வவனியாக் கிளையின் மாஜித் தனுதிகாரி.
4. திரு. என். பி. ஜோசேப் (3-ம் வட்டாரம்) இளைப்பாறிய வன பரிபாலன இலாகா உத்தியோகஸ்தர்.
5. திரு சா. கோவிந்தபிள்ளை (4-ம் வட்டாரம்) வவனியா கந்தசுவாமி கோவில் மானேஜர்.
6. திரு. இ. கிருஷ்ணபிள்ளை (6-ம் வட்டாரம்) பட்டின சபை அங்கத்தவர்.

# பட்டினசபைத் தேர்தலில் சுந்தரலிங்கம் படுதோல்வி

வவனியாப் பட்டின சபைத் தேர்தலில் மூன்று வட்டாரங்களில் போட்டியிட்ட வவனியாப் பிரதிநிதி திரு சுந்தரலிங்கம் படு தோல்வியடைந்தார். அவரை எதிர்த்துப் போட்டியிட்டவர்கள் மூன்று வட்டாரங்களிலும் குறிப்பிடத்தக்க அளவு அதிகப்படியான வாக்குகள் பெற்று வெற்றியடைந்தார்கள்.

ஈழத் தமிழர் முன்னணி என்ற பெயரில் புதுக் கட்சி ஒன்று அமைத்து அதன் தலைவராக இருந்துவரும் திரு சுந்தரலிங்கம் தமது புதுக் கட்சியின் கொள்கையை முன்னிறுத்தியே பட்டின சபைத் தேர்தலுக்கு முதலாம், இரண்டாம், ஐந்தாம் வட்டாரங்களில் நின்றார்.

தாமும் தமது கட்சியும் கோரும் சுதந்திர ஈழம் பெற மக்கள் விரும்புகிறார்களா, அல்லது தமிழரசுக் கட்சி கேட்கும் சமஷ்டி அரசமைப்பை விரும்புகிறார்களா, அல்லது இப்போதுள்ள ஒற்றை ஆட்சியில் தொடர்ந்து இருக்க விரும்புகிறார்களா என்பதை அறியவே தாம் தேர்தலில் போட்டியிட்டதாக அறிவித்தார். மக்கள் தீர்ப்பு தமக்கு சாதகமாக இல்லாது போகுமானால் தாம் அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொள்ளப் போவதாகவும் தெளிவாகக் கூறினார்.

### கொள்கை தோற்றது

பரீட்சை கடந்த ஆறுந் திகதி முடிந்தது. தேர்தல் முடிவு வெளியிடப்பட்டது. தமது கொள்கைக்கு மக்கள் ஆதரவு தர மறுக்கிறார்கள் என்பது தெரியவந்தது. தாம் போட்டியிட்ட மூன்று வட்டாரங்களிலும் தோல்வி கண்டது மக்கள் தம்முடைய கொள்கையை ஆதரிக்கவும் தம்மால் வழி நடத்தப்படவும் விரும்பவில்லை என்பதையே அறிவுறுத்துவதாக அவரே அறிவித்தார். தமிழரசுக் கட்சி சார்புடையவர்கள் பெரும் வெற்றி கண்டதன் மூலம் அதன் சமஷ்டிக் கொள்கையையே மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ற, உண்மை தமக்குப் புலனாகிறது என்றும் வெட்ட வெளிச்சமாகக் கூறினார்.

### மக்களுக்கு சுடுசொல்

தாம் முன்னர் சொன்னபடி தமது பாராளுமன்றப் பதவியை மூன்றுமாதகாலம் தொடர்ந்து அங்கு போகாமலிருப்பதன்மூலம் துறக்கப் போவதாகவும் மக்கள் தம்மிடம் இனி எந்தவித உதவிக்கும் வரக்கூடாது என்றும் தமிழரசுக் கட்சியினரிடம் அவர்கள் போவது தான் முறை என்றும் கூறினார்.

### தமிழரசுக் கட்சிக்கு ஏச்சு

தமிழரசுக் கட்சியைப் பற்றி அவர் பின்வருமாறு கருத்து வெளியிட்டார்:-



"இலங்கைவாழ் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தாங்களே என்று சொல்லிவரும் சிங்களத் தமிழரசுக் கட்சி இதுவரை தமிழ மக்களுக்கு எந்த நன்மையாவது செய்ததாகத் தெரியவில்லை. தமிழ் இனத்தைப் பாழ்படுத்தியதே தவிர வேறு எதையும் சாதிக்கவில்லை" என்று அவர் சொன்னார்.

கொள்கை அடிப்படையில் திரு சுந்தரலிங்கத்தைப் பட்டின சபைத் தேர்தலில் தோற்கடித்துவிட்டபோதிலும் வவனியா மக்கள் அவர் தொடர்ந்து பாராளுமன்றப் பிரதிநிதியாகஇருப்பதையும்தமக்குத் தம் மனமறிந்துதொண்டு செய்ய விழைவதையுமே விரும்புகிறார்கள் என்பது அங்குள்ளார் கருத்து வெளியிட்டுவருவதிலிருந்து தெரிகிறது.

### இராஜவரோதயம் அழைப்பு

திருகோணமலைப் பிரதிநிதியும் தமிழரசுக் கட்சித் தலைவருமான திரு என். ஆர். இராஜவரோதயமும் திரு சுந்தரலிங்கத்தை அரசியலைத் துறக்கவேண்டாம் என்று கேட்டிருக்கிறார். "தமிழரசுக் கட்சியில் சேர்ந்து தமிழ் இனத்தின் விடுதலைக்குப் போராட வாருங்கள்" என்று பகிரங்கமாக அழைத்திருக்கிறார்.

# தமிழர் ஆசிரியர் சங்கத்தில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலானோர் சம்மதித்தனர். புதிதாகத் தெரிவு செய்யப்படும் கமிட்டி மேற்படி அறிக்கைகளைப் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்ற ஏற்பாட்டின் பேரிலேயே அவை தற்காலிகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

உத்தியோகத்தர் தெரிவைத் திரு. கந்தப்புவின் தலைமையில் நடத்தக் கூடாது என்று அபிப்பிராயம் வெளியிடப்பட்டது. இதன் பிரகாரம் திரு. சந்திரசேகரி புதிதாகத் தற்காலிகத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு அவர் தலைமையில் உத்தியோகஸ்தர் தெரிவுகள் நடைபெற்றன. இரகசிய வாக்கெடுப்பு முறை அனுஷ்டிக்கப்பட்டது

### பொதுச் செயலாளர்

முதலாவதாக நடந்த பொதுச் செயலாளர் தெரிவுக்கு முன்னாள் பொதுச் செயலாளர் திரு சு. தியாகராஜா, கண்டியைச் சேர்ந்த திரு மகாலிங்கம், திரு சிவகுருநாதன் ஆகியோர் போட்டியிட்டனர். திரு மகாலிங்கத்தின் பெயர் வந்ததும் அவர் திரு. ஏ. கே. சுப்பிரமணியத்தின் கையாள் என்ற கலசலப்பு கூட்டத்தில் கேட்டது. திரு சிவகுருநாதனைக் காட்டிலும் 51 வாக்குகளும் திரு மகாலிங்கத்தைக் காட்

(13-ம் பக்கம் பார்க்க)

# தாதிப் பெண்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றரை வருடப் பயிற்சியைப் பெறுவர். அதன் பின் அதிக சம்பளம் வழங்கத் திட்டமுண்டு பயிற்சி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

விண்ணப்பம் செய்வோர் விண்ணப்பப் பத்திரத்துடன் பிறப்புப் பத்திரம், வித்தியாதராதரப்பத்திரம், இரு நன்னடத்தைப் பத்திரம் ஆகியவற்றின் நகல்கள் சேர்த்து அனுப்ப வேண்டும்.

### மேலும் விவரங்கள்

மேலும் விவரங்கள் 5-6-1959-ல் வெளி வந்த அரசாங்க கஜட் பத்திரிகையில் 1339, 1340-ம் பக்கங்களில் காணலாம்.

விண்ணப்பப் பத்திரங்கள் யாழ்ப்பாணம் 2-ம் குறுக்குத் தெரு 25-ம் இலக்க இல்லத்திலுள்ள இலவசக் காரியாலயத்திலும் கிடைக்கும்.

# ஆயுள் வேத சித்த....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுவிட்டதாக அவர்கள் புகார் செய்கிறார்கள்.

எம். ஈ. பி. அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சுதேச வைத்தியத் துறைகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தக்க அந்தஸ்தும் அளிப்பதாக வாக்குறுதியளித்திருந்தது. எனவே கடந்த பொதுத் தேர்தலில் சித்த, ஆயுள்வேத வைத்தியர்களும், சிங்கள வெதருலாகளும் எம். ஈ. பி. யை அமோகமாக ஆதரித்தனர். சிங்கள வைத்தியர்களும், சிங்கள ஆசிரியர்களும் அளித்த பேராதரவினால்தான் எம். ஈ. பி. பெருமளவில் வெற்றி கொண்டது என்று கூட அப்போது பேசிக்கொள்ளப்பட்டது.

### அங்கீகாரம்

எம். ஈ. பி. ஆட்சிக்கு வந்ததும் ஆயுள்வேத வைத்தியர்களின் அந்தஸ்து நிச்சயமாக உயர்த்தப்பட்டது. அதுகாலவரை சித்த—ஆயுள்வேத—சுதேச வைத்தியர்களின் வைத்திய நற்சாட்சிப் பத்திரங்களை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதில்லை. 'ஆங்கில' டாக்டர்களின் "மெடிக்கல் சேர்ட்டிபிக்கட்"டையே ஏற்றுக்கொண்டது. எம். ஈ. பி. ஆட்சிக்கு வந்ததும் சுதேச வைத்தியர்களின் நற்சாட்சிப் பத்திரங்களையும் ஏற்றுக் கொள்ளலாம் என்று சட்டம் பிறப்பித்தது.

### பாதகமான சட்டம்

கடந்த வாரம் ஏற்பட்ட சளிக் காய்ச்சலின்போது நூற்றுக்கணக்கான அரசாங்க ஊழியர்கள் சுதேச வைத்தியர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை இணைத்து 'லீவு' கோரியிருந்தார்கள்.

ஆனால் இதற்கிடையில் சௌக்கிய சேவை டைரக்டர் பிறப்பித்த ஒரு உத்தரவில் சுதேச வைத்தியர்கள் அளிக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் மீது 'ஆங்கில' டாக்டர்கள் அங்கீகார ஒப்புதல் வழங்கக் கூடாது என்றும், சுதேச வைத்தியர்கள் இரண்டு நாட்களுக்குமேல் வைத்திய நற்சாட்சிப் பத்திரம் வழங்கக்கூடாதுஎன்றும் தெரிவித்துள்ளாராம்.

இந்த உத்தரவு ஆயுள் வேத சித்த வைத்தியர்களுக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணியிருக்கிறது. 'அடுத்த தேர்தல் வரட்டும் இந்த அரசாங்கத்தை ஒரு கை பார்க்கிறோம்' என்று அவர்கள் கர்விக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.




சி. சி. சி.

## தெங்குப் பசளைக் கலவைகள்



அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கின்றன

நீங்கள் எமது பசளைக் கலவைகளில் நம்பிக்கை வைக்கலாம் ஏனெனில் அவை நல்ல, பெருவாரி விளைச்சலைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவியளிக்கின்றன.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவுசெய்து எழுதுக-

கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.)

தபாற் பெட்டி 33, கொழும்பு. CCC625


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எழுத்தாளர் அமுதன்

சிறுகதை — எழுதியவர்: எஸ். எல். சவுந்தரநாயகம்

இந்தைக்கு விருந்தூட்டும் அந்தி மயங்கும் மாலைப் பொழுது. கதிரவன் காசினியைப் பொன்னுலகாக மாற்றி ஜால வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தான்.

உலகின் அச்சாணிப் பரம்பரையினரான ஏனையதொழிலாளர்களுடன் நானும் வீடு திரும்பினேன்.

எனது உடற் களைப்பையும் உள்ளச் சோர்வையும், தன்னுடைய இன்பப் புன்னகையினலும் அன்பு மொழியினலும் மாற்றும் எனது வாழ்க்கைத் துணைவியார், தேநீர் பரிமாறினர். கை, கால், முகம் கழுவித் தேநீர் குடித்துச் சிறிது நேரம் சிரமபரிகாரம் செய்து கொண்டேன்.

பின்னர்......மறுநாள் நூல் நிலையத்திலொப்படைக்க வேண்டிய ஒரு சிறுகதைத் தொகுப்பு நூலில் இரண்டு கதைகள் படிக்க வேண்டிப் பாக்கியிருந்தமையால் வெளி வராந்தாவிலுள்ள வொரு சாய்மான நாற்காலியிலமர்ந்தவனுக இலக்கிய மது வருந்த வாரம்பித்தேன்.

அவ்வேளை: வெளியூரில் உத்தியோகம் பார்க்கும் எனது நண்பன் 'ராசு' வீட்டுக்கு வந்தான். வெளியூரிலிருந்து வருடத்திற் கிரண்டு மூன்று தடவைகள் மாத்திரம் விடுமுறைக் காலங்களில் சொந்த வூருக்கு வந்து போகும் நண்பனை 'நாளைக்குச் சந்திப்போம்' என்றுதட்டிக் கழிக்க முடியுமா?

எனவே, புத்தகத்தை வைத்துவிட்டு ராசுவை வரவேற்று இருத்தி, இருவரும் சுவாரஸ்யமாக உரையாடிக் கொண்டிருந்தோம்.

ராசுவுக்குச் 'சுவை நீர்' கொடுப்பதற்கு முன்பே, எங்கள் பட்டணத்திலிருந்து சுமார் நூறு மைல் தூரத்திலுள்ளவொரு கிராமத்தில் வசிக்கும் எனது நண்பர்—எழுத்தாளர் 'அமுதன்' என் பவரும் திடீர் விருந்தினனுக வந்து சேர்ந்தார். எனவே, மூவரும் சிற்றுண்டி யருந்தி மகிழ்ந்த வண்ணம் உரையாடினோம்......

எங்களுரையாடலுக்கு ஒரு 'இடைவேளை' போட்டு விட்டு எழுத்தாள நண்பர் அமுதனை நண்பர் ராசுவுக்கு அறிமுகப்படுத்தி வைக்கும் கட்டத்தை யாரம்பித்தேன். "இவரைத் தெரியுமா மிஸ்டர் ராசு?"

"தெரிய வில்...லை...யே!"

"இவர்தான், மிஸ்டர் அமுதன். ஒரு சிறந்த எழுத்தாளர். "கலையூர்—அமுதன்" என்ற புனைப் பெயரில் எழுதுகிறவர். சொந்தப் பெயர் அமிர்தநாதன்!"

"ம் ஹ்ம்! எனக்கு விளங்கவி...ல்...லை. இவர் எந்தப் பத்திரிகைக்கு எடிட்டராயிருக்கிருர்?"

"எந்தப் பத்திரிகைக்கும் எடிட்டரல்ல! இ...வ...ர்..."

"ஏதும் புஸ்தகங்கள் எழுதியிருக்கிருரா?"

"இல்லையில்லை. புஸ்தகங்கள் வெளியிடுவதற்குப் பேனவும் சிந்தனையுமிருந்தால் போதுமா? 'வைட்டமின்—ப' (பணம்) வும் வேண்டுமல்லவா?"

"அப்படியென்ருல் சிறுகதைத் தொகுப்புகளெதுவும்?"

"இல்லை"

"ப்ஜா! எனக்கு ஆளைத் தெரியவில்லை. "கலையூர்-அமுதன்!"— அப்படியானவொரு எழுத்தாளரிருக்கிருரென்று நான் கேள்விப்படவில்லை" ராசுவின் அதரங்கள் அலட்சியத்திற்கடையாளமாக நெளிந்து வளைந்து ஒரு அசட்டுச் சிரிப்பைக் கொட்டின. அந்தச் சிரிப்பில் கிண்டலும் கேலியும் கூட மறைந்திருந்ததைப் போலிருந்தது.

ஒரு எழுத்தாளனைப்பற்றி வெளி நாட்டவர்—வேற்று மொழியினரொருவர் கேட்கவேண்டிய கேள்விகளையெல்லாம், ஒரே மொழியினன்—சொந்த நாட்டவன் கேட்டது விசித்திரத்திலும் விசித்திரமாய்த்தானிருந்தது. என்ருலும்......நானும் விட்டுக் கொடுக்கவில்லை. தொடர்ந்தேன்......

"என்ன மிஸ்டர் தெரியாதென்கிறீர்! சமீப காலமாக "தமிழ்க் குரல்" வார இதழில் இவருடைய சிறுகதைகள் அதிக மதிகமாகப் பிரசுரமாகி யிருக்கின்றனவே?"

"இருக்கலாந்தான்! நா...ன்—தமிழ்க்குரல் படிப்பதில்லை மிஸ்டர் நாயகம்!"

"ஓகோ அதுவுமப்படியா? அதுவொரு கட்சிப் பத்திரிகை யென்ற ஊகத்தில் படிப்பதில்லைப் போலிருக்கிறது ஏன்?—அதில் மாத்திரமல்ல, நம் நாட்டில் வெளிவரும் எல்லாப் பத்திரிகைகளிலும் அநேகமாக எழுதியிருக்கிருர். "மனிதர் பண்பாடு" "வாழும் வழி", "உலகில் நாம்...", "கலைமலர்" போன்ற பிரபல இலக்கியப் பத்திரிகைகளிலெல்லாம் இவருடைய படைப்புகள் அதிகமதிகமாய் வந்துள்ளன......"

"பொதுவாக ...... நான்—தமிழ்ப் பத்திரிகைகள் எதுவுமே......பார்ப்பதில்லை மிஸ்டர் நாயகம்! நானிருக்கும் சூழ் நிலையில்......"

"வசதிக் குறைவாயிருக்கக் கூடும். அப்படியாளுல் என்னென்ன பத்திரிகைகள் வழமையாகப் படிக்கிறீர்?"

" 'பாஸ்ட் டைம்', 'றைஸிங்ஸன்' 'மூண்லைட்' இவைகள்தாம் பார்க்கிற வழக்கம்!"

"அப்படியா? என் மிஸ்டர் 'மூண்லைட்'டிலும் இவர் சில கட்டுரைகள் எழுதியிருக்கிருரே?"

"இருக்கலாம்... கட்டுரைகளை யார் மிஸ்டர் வாசிக்கிறது? நான் பார்க்கிறது நியூஸ் மட்டுந்தான்..."

"என்ன மிஸ்டர் நீர் சொல்லுகிறது? பெரிய பெரிய ஆங்கிலப்பட்டதாரிகளெல்லாம் சிறந்த தமிழ் எழுத்தாளர்களாயிருக்கும் இக் காலத்தில்—நீர், ஜே. எஸ். ஸி. படித்துவிட்டுத் தமிழ்ப் பத்திரிகைகளையே தொடுவதில்லையென்று சொல்லுகிறீர்?"—இந்தக் கேள்வியை நான் கேட்டிருக்கக் கூடாதுதான். எனது வகுப்பு மாணவன்—சிறந்த நண்பன் என்ற ஹோதாவிற்ருன் இதே கேள்வியை நான் ராசுவிடம் கேட்டேன். குற்றத்தைக் குற்றமென்று சுட்டிக் காட்டாவிட்டால், 'நட்புரிமை'யென்று ஒன்று இருந்தாலென்ன—இல்லாவிட்டாலென்ன? என்னுடைய கடைசிக் கேள்விக்கு ராசு எந்தவிதமான பதிலும் தரவில்லை...

"நான் சினிமாவுக்குப் போக வேண்டும் மிஸ்டர்! டைம் ஆகிறது." என்று விடை பெற்றுச் சென்றுவிட்டான்.

அமுதனை ராசுவுக்கு அறிமுகப்படுத்த வேண்டுமென்று நானெடுத்த முயற்சியில் பச்சைப் படுதோல்வி கண்டு விட்டேனென்பதை வேறு விவரிக்க வேண்டுமா?

நண்பனென்பது ஒரு புறமிருந்தாலும்; தமிழைத் தாய் மொழியாகக்கொண்ட படித்த இளைஞனெருவன்; ஒரு தமிழ் எழுத்தாளனைப் பற்றி—அதுவும் தன் சொந்த நாட்டு எழுத்தாளனைப் பற்றி—அறவே தெரியாதென்று அந்த எழுத்தாளர் முன்னிலையிலேயே சாதித்தது, வேடிக்கையாயல்ல—வேதனையாய்த்தானிருந்தது.

'ஹொலிவூட்' நடிகர்களைப் பற்றித் தெரிந்து வைத்திருக்குமளவுக்குத் தனது நாட்டுக் கலைஞர்களைப் பற்றித் தெரிந்து வைத்துக் கொள்ளாத—தெரிந்து வைத்துக் கொள்ள முயற்சிக்காத சில ரசிகப் பெருமக்களிலொருவனுன நண்பன் ராசுவைக் கடிந்து கொள்வதிற் பிரயோசனமில்லையென்று விட்டு விட்டேன். ராசு போன்ற நகல் நாகரிக வாதிகளைக் காலந்தான் திருத்தவேண்டும்.

எழுத்தாளர் அமுதனைத் தனக்குத் தெரியவராதென்று ராசு பிடிவாதம் பண்ணும் பொழுது, வெயிலிற் கிள்ளியெறிந்த மென்மலர் வாடுவது போல் அமுதனின் அறிவுச்சுடர் வீசும் வதனம் சுருங்கியதென்ருலும்—ஆழ்ந்த சிந்தனையோட்டத்தின் பிரதிபலிப்புகள் அவருடைய இளம்பிறை நுதலிற் கோடுகளாகப் பளிச்சிட்டன.

ராசு போன பிற்பாடும் அமுதன் சிந்தனை வசத்தனுகவே யுட்கார்ந்திருந்தார். அமுதனின் சிந்தனைச் சவுக்கு, என்னுடைய சிந்தனைக் குதிரையையும் தட்டியெழுப்பி விட்டது.

அமுதனுக்கும் எனக்கு மேற்பட்ட நட்பின் ஆரம்பத்திலிருந்து என்னுடைய சிந்தனையஸ்வம் ஓட்டம் பிடிக்கத் தொடங்கியது.

ஃ

எழுத்தாளர் அமுதன் உயர்தரக் கல்வி பயின்றவொரு பட்டதாரியுமல்லர்; பணக்காருமல்லர்; பட்டணவாசியுமல்லர். முத்தொழில்களில் காத்தற் தொழிலாகிய விவசாயத் தொழில் செய்யும் ஒரு கிராமவாசி. நடுத்தர வாழ்க்கை நடாத்துபவர்.

சுய முயற்சியினல் இடையருது வாசித்து முன்னுக்கு வந்த ஆற்றல் மிக்க எழுத்தாளர்.

ஒருதடவை 'தமிழ்க்குரல்' வார இதழில் வெளியாகிய 'சபதம்' என்ற சிறுகதை தான் என் உள்ளத்தை முழுக்க முழுக்க அவர் பால் ஈர்த்தது.

அந்தக் கதையைப் பாராட்டி அதே பத்திரிகையில் "ஆசிரியருக்கு கடிதம்" எழுதினேன்.

மற்றைய எழுத்தாளர்களைப் போலவே, சில நாட்களில் எழுத்தாளர் அமுதனும் எனக்கு நன்றிக் கடிதம் எழுதியிருந்தார். அந்த அஞ்சலில்—முடியுமானல் தன்னுடன் தொடர்பு வைத்துக் கொள்ளும்படி அமுதன் கேட்டிருந்தார்.

அவரின் அன்புக் கட்டளைக்கு என் ரசிக நெஞ்சம் அடிமையாகியது... அன்று தொடக்கமே இருவரும் பேனு நண்பர்களாகி விட்டோம்.

அமுதனை நேரிற் பார்க்க வேண்டுமென்ற ஆசை எழுந்தது. கின்னட்களில் நெய்யூற்றிய நெருப்பைப் போல்அது வளர்ந்து கொண்டேபோனது. ஒருநாள்: சந்தர்ப்பவசத்தினல் முன்னறிவித்தலின்றியே திடீரென்று அமுதனின் கிராமத்திற்குப் புறப்பட்டேன்.

அமுதனின் கிராமம், பட்டினத்திற்கும் கிராமத்திற்கும் இடைப்பட்டவொரு பாரிய கிராமம். பெயரும் அழகான பெயர். 'கலையூர்' என்ற அந்தக் கிராமத்துப் பிரமுகரொருவரைச் சந்தித்து, எழுத்தாளர் அமுதனின் வீடு எவ்விடத்திலிருக்கிறதென்று விசாரித்தேன். அவர், தமக்குத் தெரியாதென்று கையை விரித்துவிட்டார்.

இன்னுமொருவரிடம் விசாரித்தேன். அவர் "தம்பி! மங்களாபுரத்திலிருந்தா வருகிறீர்கள்?யார்-இவன் அமுக்கனையா தேடுகிறீர்கள்?" என்ற மாற்று வினவைப் போட்டார்.

அமுதனுக்கு 'அமுக்கன்' என்ற பட்டப் பெயரை அவர் போன்றவர்கள் சிலபோது சூட்டியிருக்கலாமோவென்று சந்தேகித்தேன். சந்தேகத்தை நிவிர்த்தி செய்யவெண்ணி "அமுக்கனையல்ல—அமுதனைத்தான் கேட்டேன்" என்று,மீண்டும் என் வினவை விவரித்து விடுத்தேன.

"அவன் தான் தம்பி—அவன் தான்! அமுதனே—அமுக்கனே? இந்தப் பேப்பர்களிலே யெழுதுகிறவன் தானே!"

"ஆமாம். அவர்தான் பெரியவர்!"

"ஏன் தம்பி! அவனிலே என்ன அலுவல்? (கீழ்ச்சுதியில்) ஏதும் காசு—கீசு தருமதியோ?"

"இல்லையில்லை, சும்மா ஆளைக் காண வேணும் பாருங்கோ!"

"இதே தெருவில் மேற்கே அரைமைல் தூரம் போனல் வலது புறமாகத் தெருவருகில் ஒரு நாவல் மரம் நிற்கிறது. அந்த நாவல் மரத்தடி வளவுதான் தம்பீ—அவனுடைய வளவு நாவல் மரத்தடியிற்ருன்ஆபடலை..." என்று, அமுதனுடைய வளவுக்குக் குறிப்பைச் சொன்னர் அவர்.

அவரிடம் விடைபெற்றுக் கொண்டு அவர் சொல்லிய குறிப்பின்படி அப்பால் நடந்தேன்...இன்னுமொருவர் கையில் கள்ளுப் போத்தல்,

(15-ம் பக்கம் பார்க்க)


# நாஷனல் றபர் பெலற்றிங்




கே. என். அப்துல்காதர்
ராவுத்தர் கம்பனி லிமிட்டெட்,
312, ஸ்கின்னேர்ஸ் ரோட் தெற்கு,
கொழும்பு—10.

டெலிபோன் : 2956. தந்தி : 'MEDAL'

வடமாகாண விநியோகஸ்தர்கள்:

ராஜா ஸ்டோர்ஸ்,

2/B ஸ்டான்லிரோட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற் சங்க இயக்கம்

## அத்தியாயம் 2 : ஆரம்பம்

சென்ற அத்தியாயத்தில் தொழிற்சங்கங்கள் சமூக அமைப்பில் வகிக்கும் ஸ்தானத்தையும், அவைகள் ஆற்றும் கைங்கரியத்தையும் சூக்குமமாகக் கண்காணித்தோம். எந்த ஒரு இயக்கத்தின் தன்மை, தராதரம், உபயோகம் முதலானவற்றைத் தீர்க்கமாக ஆராய்வதற்கும் அவ்வியக்கத்தின் வரலாற்றையும் வளர்ச்சியையும் கூர்ந்து நோக்க வேண்டும். வெவ்வேறு காலங்களிலும் நிலவும் வேற்றுமையான சூழ்நிலைகளால் ஒவ்வோர் இயக்கத்தின் நோக்கங்கள் குறிக்கோள்கள் சிறு அளவிற்கும், இலட்சியங்கள் தந்திரங்கள் கூடுதலான அளவிற்கும், அமைப்புகள் நடைமுறைகள் பெருமளவிற்கும் பாதிக்கப்பட்டு மாற்றமடையும்.

### சரித்திர ரீதியான கண்ணோட்டம்

சமூக இயக்கங்கள் யாவும் மக்களின் அபிலாஷைகளிலும் மனோபான்மையிலும் வேரூன்றி பொருளாதார, சமூக, அரசியலமைப்புகளில் கட்டுண்டு காட்சியளிக்கும். ஆகவே அவ்வியக்கங்கள் எய்திய வளர்ச்சியையும் மாற்றங்களையும் சரித்திர ரீதியாக அவதானிப்பது அவ்வியக்கங்களின் பலம், பலவீனம், ஆற்றல் குறைபாடு முதலானவற்றை உய்த்துணர்வதற்கு உதவியாக அமையும்.

தொழிற்சங்க இயக்கத்தின் வளர்ச்சி வரலாற்றை ஆராயும் பொழுது நாம் முதலாவதாகக் கண்ணுற வேண்டிய விடயம் அவ்வியக்கம் முதன் முதலாக நம் சமூகம் போன்ற சமூகங்களைக் கொண்ட ஆசிய நாடுகளில் உதித்த தொன்றல்ல என்பதேயாகும்.

### நமது சமூக நிலை

நம் சமூகத்தில் பொருளாதார அமைப்பும் தொழிற் கலைத் தேர்வும் வருணச்சிரம தருமம் என்ற கட்டுப்பாட்டினுல் நெடுங்காலமாக நிதானிக்கப்பட்டு வந்தன. வருணச்சிரம தரும அமைப்பின்படி இயங்கிய பொருளாதாரத்தில் பொருட்களின் விலைவாசிகளும் தொழிலாளர் சேவைகட்கு வேதனங்களும் பெரும்பான்மை வழமை என்ற அளவுகோலால் நிதானிக்கப்பட்டு வந்தன. மேலும் ஓரளவிற்கு கொடுப்பதும் வாங்குவதும் பண்டமாற்று என்ற வகையிலேயே நடைபெற்றுவந்தது.

### தேவை ஏற்படவில்லை

இது ஒருபுறமிருக்க அடிமை—ஆள்பவன் என்ற தொடர்பு தொழிலமைப்பை ஓரளவிற்குப் பிணித்திருந்தது. மேற்கத்திய நாட்டு சாம்ராச்சியசக்திகள் ஆசிய நாடுகளை ஆக்கிரமிப்புச் செய்த பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றுண்டுகள் வரை இந்நாடுகளில் மேற் கூறிய பொருளாதார அமைப்பே நிலவி வந்தது. இத்தகைய பொருளாதார அமைப்பில் தொழிலாளர் இயக்கங்கள் தோன்றுதற்கான தேவையோ அல்லது அதற்குச் சாதகமான சூழ்நிலையோ இல்லை.

### காலப் பிரிவு

தொழிலாளர் இயக்கங்கள் மேற்கத்திய நாடுகளில் தான் முதன் முதலாக உருவெடுத்தன. எனினும் அந்நாடுகளிலும் மிகச் சமீப காலங்களில்தான் தொழிலாளர் இயக்கங்கள் உதிப்பதற்குச் சாதகமான சூழ்நிலை தோன்றியது. சரித்திர வல்லுநர் ஐரோப்பிய சரித்திர காலத்தை புராதன காலம், மத்திய காலம், இன்றைய காலம் என மூன்று பிரிவுகளாகப் வகுப்பார்கள்.

புராதனகாலம், கிரேக்க ரோம சமூகங்கள் செழித்தோங்கிய பழைய காலத்தைக் குறிக்கும். அதற்குப் பிந்தியது மத்திய காலம். பதினைம் நூற்றுண்டின் தொடக்கத்தை மத்திய காலத்தையும் இன்றைய காலத்தையும் பிரிக்கும் எல்லையாக மதிப்பிடுவர். இவ்வாறு காலப்பிரிவுகளாக வகுப்பதற்கு ஆதாரமாக உதவியது அரசியல் விளைவுகள் அன்று; மக்களின் சிந்தனைகள், எண்ணங்கள், அபிப்பிராயங்களில் ஏற்பட்ட சில அடிப்படையான மாற்றங்களே இக்கால எல்லைகளைக் குறிப்பதற்கு காரணமாக இருந்தன.

சோ. வன்னியசிங்கம் B. Com., M. Sc. (Econ) (Lond).,
பொருளியல் விரிவுரையாளர்:
இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி,
அக்குவைனஸ் பல்கலைக் கழக கல்லூரி:

### கால எல்லை திட்டவட்டமானதல்ல

மத்தியகாலமக்களிடையே நிலவிவந்த சிந்தனைகள் எண்ணங்கட்கும் அதற்குப் பிந்திய இன்றைய காலமக்களிடையே காணப்படும் சிந்தனைகள் எண்ணங்கட்கும் அடிப்படையான சில அம்சங்களில் மிக முக்கிய முக்கிய வேற்றுமைகள் காணப்படுகின்றன என்பது சரித்திர ஆராய்ச்சியாளர் துணிபு. ஆயினும் ஒன்று மட்டும் நிச்சயம். வீட்டுக் கூரையைத் திட்டவட்டமாகப்பிரித்து வெவ்வேறு திசைகளிலும் சரிவுகளை ஏற்படுத்தி வானம் பொழியும் மழை நீரை ஆங்காங்கே வழிந்து ஓடச்செய்கிறதே முகடு, அதைப்போல இந்தக் கால எல்லையும் பன்நெடுங்காலத்தைத் திட்டவட்டமாகப் பிரிக்கிறது என்று கொள்ளமுடியாது.

### மாற்றம்

மக்களின் சிந்தனைகள் எண்ணங்களை நிதானிக்கும் சில அடிப்படையான அம்சங்கள் தான் மாற்றமெய்தின எனவே மத்திய காலத்தில் பொருளாதார அமைப்பைப் பொறுத்தவரையில் உதயமான பல சிந்தனைகள் அபிப்பிராயங்கள் பிந்திய இன்றைய காலத்திலும் பல வருடங்களாக—இல்லை, நூற்றுண்டுகளாக, மக்கள் மனதையும் பொருளாதார அமைப்பையும் பிணைத்திருந்தன தொழிலாளர் இயக்கங்களைப் பாதிக்கக் கூடிய சில சிந்தனைகள் அபிப்பிராயங்களையே நாம் இங்கு குறிப்பிடுகிறோம்.

### போட்டிப் பண்பின் தேவையை உணரவில்லை

இன்றைய பொருளாதார உற்பத்தி விநியோகத்தில், ஆக்கப்படும் பொருளின் தரத்தை குறைந்துவிடாது பாதுகாத்து நுகர்ச்சியாளனுக்குக் குறைந்த விலையில் அப்பொருள் கிடைக்கச் செய்வதற்கும் நாம் சந்தையில் போட்டிப் பண்பு நிலவுவதையே நம்பியிருக்கிறோம். 'நேரக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்' என்று பாமர மக்கள் கூறும் பழமொழி மேற்கூறிய சிந்தனையை அல்லது அபிப்பிராயத்தை பிரதிபலித்துக் காட்டுகின்றது. ஆனால் இத்தகைய அபிப்பிராயமோ சிந்தனையோ, அதாவது போட்டிப் பண்பு சந்தையில் நிலவவேண்டும் என்ற சிந்தனை, மத்தியகால ஐரோப்பிய சமூகத்தில் காணப்படவில்லை.

### கட்டுப்பாடுகள்

அதற்குப் பதிலாக தொழிலுற்பத்தி விநியோகம் ஆகிய துறையில் கட்டுப்பாடு அதாவது அரசாங்க அல்லது சமூகக் கட்டுப்பாடுதான் ஆக்கப்படு பொருளின் தராதரத்தையும் நிலைநாட்ட வேண்டும் என்ற அபிப்பிராயம் நிலவிவந்தது. எனவே அக்கால பொருளாதார அமைப்பு பல்வேறு வகையான கட்டுப்பாடுகளாலும் சட்டங்களாலும் பிணிக்கப்பட்டுக் காட்சியளித்தது. தொழிலாளர் இயக்கங்களைப்பாதிக்க கூடிய கட்டுப்பாடுகள் சிலவற்றை நாம் இங்கு காண்போம்.

### கட்டாயப் பயிற்சி

தொழிற் கலையின் தரத்தைப் பேணுவதற்காக விதிக்கப்பட்ட முறையை கட்டாயப் பயிற்சியென (Apprenticeship) விவரிக்கலாம். ஒரு தொழிலைப் பயில்வதற்கு எவருக்கும் உரிமையில்லை. அங்கீகரிக்கப்பெற்ற தொழிலாசிரியன் ஒருவனிடம் குறிக்கப்பட்டகால எல்லைக்கு பயிற்சிபெற்ற ஒருவனே அத்தொழிலில் அப்பியாசிக்கமுடியும். அவ்வாறு பயின்றவனும் மேலும் சில காலம் அத்தொழிலை பயின்ற பின்னரே தொழில் ஆசிரியனாக இயங்க அதாவது வேறு பயில்வோரைத் தன்கீழ் அமர்த்தித் தொழில் செய்ய இயலும்.

### பெறுபேறு

மேற்கூறிய அனுமதி கொடுப்பதன்முன் பயில்வோர் மிகவும் கடினமான பரீட்சைகளைத் தாண்டவேண்டும். இத்தகைய கட்டுக் கோப்பு ஆக்கப்படுபொருளின் தரத்தை குறைவுபடாது பேண உதவும் என்று மக்கள் நம்பினர். இத்தகைய கட்டாயப் பயிற்சிமுறை நிலவிய தன்பெறுபேருகத் தோன்றிய நிலைமை பின்வருமாறு:

அதிக வருவாய் கொடுக்கக்கூடிய உயர்தர அல்லது நுட்பமான தொழிற் கலையைப் பயில்வதற்கு தொழிலாசிரியனின் மக்கள் சுற்றத்

(12-ம் பக்கம் பார்க்க)

# விவாகச் சட்டம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இச் சட்டத்தை மீறிவிவாகம் செய்பவர்களின் விவாகம் சூனியமானதுமன்றி அவர்கள் ஒரு வருஷ மறியல் தண்டனைக்குமாளாவர். விவாகமில்லாமல் சோர நடவடிக்கைகளில் ஈடுபடும் இம்முறையிலுள்ள [illegible] களும் தண்டனைக்குள்ளாவர்.)

### சட்டம் அனுமதிக்கிறது சமுதாயம் ஏற்கவில்லை

ஒருவர் தமது காலஞ்சென்ற மனைவியின் சகோதரியை விவாகம் செய்யக்கூடாதென்னும் சட்டமும் ஆங்கிலச் சட்டத்தில் ஒரு காலத்திலிருந்தது. இலங்கையில் அவ்வித சட்டம் ஒருபோதுமிருக்கவில்லை. இப்போ ஆங்கிலச் சட்டத்திலும் அது தள்ளுபடியாகிவிட்டது. தேச வழமைச் சட்டப்படி இரு சகோதர சகோதரிகளின் பிள்ளைகள் (அதாவது மச்சான் மச்சாள் அல்லாத ஒன்றைவிட்ட சகோதரர் என்னும் முறையிலுள்ளவர்கள்) ஒருவரையொருவர் விவாகம் செய்யக் கூடாது. 1907-ம் ஆண்டிற்குப் பிறகு இவ்வகைத் தொடர்பு உள்ளவர்கள் ஒருவரையொருவர் விவாகம் செய்யலாம். சட்டம் அனுமதிக்கிறது. ஆனல் சமுதாயம் இன்னும் அதை வரவேற்கத் தொடங்கவில்லை.

### தம்பதிகளின் சம்மதம்

அடுத்தபடியாகத் தம்பதிகளின் சம்மதத்தைப் பற்றியாராய்வோம். பழையகாலத்தில் பாலிய விவாகமிருந்தபடியால் தம்பதிகளின் சம்மதம் தேவைப்படவில்லை. தற்காலத்தில் விவாகம் ஒரு ஒப்பந்தமாகையால் இரு சாராரின் சம்மதமும் தேவைப்படுகிறது. இக் காரணத்தால் வலுக் கட்டாயமாக அல்லது ஏமாற்றிச் செய்த விவாகத்தை அதனுல் பாதிக்கப்பட்ட தம்பதி ரத்துச் செய்ய முடியும். ஆனல் ஒருவரை யின்னெருவர் என எண்ணி செய்த விவாகம் முதலிலிருந்தே சூனியமானதாகும்.

### சித்தசுவாதீனம் அற்றவர்கள்

இதே காரணம் பற்றிசித்த சுவாதீனமற்றவர் செய்த விவாகமும் பெறுமதியற்றது. ஆனல் அச் சமயத்தில் அவர் தற்காலிக சுவாதீனம் பெற்றிருந்தால் அவ் விவாகம் சட்ட ரீதியானது. (இங்கு ஊமைகள், செவிடர்கள் செய்த விவாகங்கள் பெறுமதி யுள்ளனவென்பது கவனிக்கத்தக்கது.) தம்பதிகளின் சம்மதமிருந்த போதிலும் அவர்கள் பராயமற்றவர்களாயிருந்தால் (அதாவது 21 வயதுக்குட்பட்டவர்களாயிருந்தால்) அவர்களின் பெற்ருேரின் அல்லது பராமரிப்புக்காரரின் சம்மதம் தேவை. இதை இங்கு ஆராய்வோம்.

### பராயமற்றவர்கள் நிலைமை

இலங்கைப் பொது விவாகச் சட்டப்படி விவாகத் தம்பதிகளில் ஒருவர் 21 வயதுக்குட்பட்டவராயிருந்தால் அவருடைய தந்தையின் சம்மதம் தேவை. தந்தை யிறந்திருந்தால் அல்லது சித்த சுவாதனமற்றிருந்தால் அல்லது இலங்கைக்கு வெளியேயிருந்து தன் சம்மதத்தைத் தெரிவிக்க முடியாதிருந்தால் தாயினுடைய சம்மதம் தேவை. தாய் தந்தையரிருவரும் இறந்திருந்தால் அல்லது சித்த சுவாதீனமற்றிருந்தால் அல்லது வெளியூரிலிருந்தால் அத் தந்தை அல்லது தாயால் நியமிக்கப்பட்ட பராமரிப்புக்காரரின் சம்மதம் தேவை அல்லாவிடில் நீதி மன்றத்தினுல் நியமிக்கப்பட்ட பராமரிப்புக்காரரின் சம்மதம் பெற வேண்டும்.

### நீதிபதியின் சம்மதம்

இப்படிச் சம்மதம்கொடுப்பதற்குரிய ஆளில்லாத சந்தர்ப்பத்திலும் ஆள் இருந்து சம்மதம கொடுக்க மறுக்கும் சந்தர்ப்பத்திலும், அப்பாலிய வயதுடைய தம்பதி வசிக்கும் இடத்தை யடங்கிய டிஸ்திரிக்கின் நீதிபதிக்கு மனுச் செய்ய வேண்டும். அவர் மனுவை விசாரணை செய்து தகுந்த காரணம் கண்டால் தன் சம்மதத்தைக் கொடுத்து விவாகத்தை யனுமதிக்கலாம். தேச வழமை முறைப்படி சமயக் கிரியைகள் மூலம் நடக்கும் விவாகங்களுக்கும் மேலே சொல்லப்பட்ட சம்மதம் தேவை. ஆனல் மறுதார விவாகம் செய்யும் ஆணுக்காயினும் பெண்ணுக்காயினும் பெற்ருேர் சம்மதம் தேவையில்லை.

பெற்ருேர் அல்லது மற்றவர்களின் சம்மதம் தேவையான சந்தர்ப்பங்களில் அச் சம்மதமின்றிச்செய்யப்படும் விவாகங்களின் கதியென்ன என்பதும் விவாகச் சட்டம் [illegible] களும் அடுத்த கட்டுரையில் ஆராயப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலாஜி, சூர்யகலா, எஸ். எஸ். ஆர்

நாட்டிய விமர்சனம்:

# ராஜாமணி நடனம்

## தினப் பத்திரிகைகள் கொடுத்த முக்கியத்துவம்!

**வெளி நாட்டிலிருந்து கலைஞர் என்ற பெயரில் எந்தக் குப்பை கூளம் வந்தாலும் சரி, தகுதியைப் பாராது சர்ட்டிபிக்கேட் வழங்குவது போல, முன்பின் யோசிக்காமல் மனதில் தோன்றியதையெல்லாம் பத்திரிகையில் போட்டு விளாசி விடுவார்கள் நம் நாட்டுத் தினப்பத்திரிகை நண்பர்கள். எதற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கலாம் என்று அளந்து கொடுக்கும் பழக்கம் இன்னும் வரவில்லை.**

மேடையேறும் நடன மாதுக்கு கலைத் திறமையோடு உடல் வனப்பும் வாலிபமும் சேர்ந்து இருந்துவிட்டால் கச்சேரியின் சிறப்புக்குக் கேட்க வேண்டியதில்லை. அதில்லாமல் அழகையும் இளமையையும் மட்டும் மூலதனமாக வைத்துக்கொண்டு அரங்குக்கு வந்து பயனில்லை. நேரத்தை ஒதுக்கி, பணத்தை எண்ணிக் கொடுத்து கச்சேரிக்கென்று ஆர்வத்தோடு புறப்படுவார்கள் அங்கு காணத் துடிப்பது கலை அம்சத்தை. இது ஒன்று இல்லாது போகுமாறல் வேறு எது இருந்தும் ரஸிகர்களைத் திருப்திப்படுத்த முடியாது.

### விஷயம் புரிந்தது

கடந்த 6-ந்தேதி சனிக்கிழமை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் தோன்றிய குமாரி ராஜாமணியும் மற்றவர்களும் இதை உணர வேண்டும். குமாரி ராஜாமணியின் திரை உலகப்பிரவேசம் சில நாட்கள் எப்படியோ ஓடிவிட்டு டப்பாவுக்குள்புகுந்துஒளிந்துகொண்ட 'பாசவலை' படத்தோடு நின்றுவிட்டதற்கான காரணத்தை அவர் தெரிந்து கொண்டாரோ என்னவோ, நம்மைப் பொறுத்தவரையில் அவருடைய கச்சேரியை அன்று பார்த்தபொழுதே அது புரிந்துவிட்டது.

### வெறும் யந்திர நடனம்

மேடை அதிர, சலங்கை சலசலக்க, திடும் திடும் என்று மிதித்தும், இருந்தும், எழுந்தும், வளைந்தும்-நெளிந்தும கையைக்காலை ஆட்டி அசைத்தும் ஆடினார். யந்திர ஆட்டமாகவே இருந்தது. கனிவு இல்லை; குழைவு இல்லை; லாகவம் இல்லை; நளினம் இல்லை; இங்கிதம் சிறிதும் இல்லை. பாவத்திலாவது மனதை ஈடுபடுத்தலாமென்றால் அதற்கும் வழி இல்லாமல் போய்விட்டது.

### வயிறு எரிந்தது

மாயவரம் சகோதரிகளான இந்திரா கல்பகம் மற்றும் சாந்தி என்பவரும் குமாரி ராஜமணியோடு சேர்ந்து எல்லோருமாக மொத்தம் 13 நடன நிகழ்ச்சிகளில் பங்குகொண்டார்கள். குமாரிதான் ஏமாற்றிவிட்டார், சரி சகோதரிகளாவது கைகொடுத்தார்களா? கிடையாது. சாந்தி எல்லோரையும் மிஞ்சி வயிற்றெரிச்சலை வேறு கிளறி விட்டுவிட்டார். "வாங்க மச்சான்", "அழைக்காதே" என்ற புகழ்பெற்ற சினிமாப்பாடல்களுக்குஅவர் ஆடியதும் சிவனைத் தோன்றிச் செப்படி வித்தை காட்டியதும்போதும்போதுமென்றாகிவிட்டது.

### என்ன தைரியம்?

கல்பகம் இசைத் தட்டில் ஒரு பாட்டு ஒலிக்க அதற்கு ஆடினார். அப்படி நம் விட்டுக்குழந்தைகளுந்தான் தினமும் ஆடுகின்றன. இதற்குத்தான் இவர்கள் கடல்கடந்து வந்தார்களோ என்று எண்

பட விமர்சனம்:

# அன்பு எங்கே?

கணவனின் அன்பைப் பெறும் முயற்சியில் மனைவி அவனுடைய காலடியில் விழுந்து கண்ணீர் விட்டுக் கதறவில்லை. தப்பான வழியில் சென்றவனைத்திருத்தத் தன் அறிவைப் பயன்படுத்துகிறாள். புதுப்புது வழிகளைக் கையாளுகிறாள். ஈற்றில் வெற்றியும் பெற்று விடுகிறாள். இதுதான் அன்பு எங்கே படக் கதையின் கரு.

### திருப்பம்

இது தமிழ்த் திரை உலகுக்கு புதுமையான ஒன்று. திருப்பமாக அமைந்திருக்கிறது. அதற்குக் காரணமான அனைவரையும் வாயார வாழ்த்துகிறோம்.

### குடிகாரன் நடிப்பு

இந்தப் படத்தில் இன்னுமொரு சிறப்பான அம்சம் இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரனின் நடிப்பு. குடிகாரனாக அவர் பாதிக் கட்டத்தில் நடிப்பதைப் பார்க்கும்போது மொத்தமுள்ள மூன்று மணி நேரமும் அவர் அப்படி நடித்தாலோ என்று அங்கலாய்க்கத் தோன்றுகிறது. குடிகாரன் நடிப்பு அத்தனை சிறப்பாக இருக்கிறது.

### நகைச்சுவை நடிப்பு

ரங்காராவின் சீரியஸ் நடிப்பும் பண்டரிபாயின் சாந்த நடிப்பும், மைனாவதியின் துடுக்கு நடிப்பும், டி. ஆர். ராமச்சந்திரனின் நகைச்சுவை நடிப்பும் குறிப்பிடத்தக்கவை. மனைவி அல்லாத வேறு பெண்ணின் கை தம்மேல் பட்டு விட்டால்

"ஷொக்" அடித்து அவள் கைப்படும் கட்டங்களை டி. ஆர். ராமச்சந்திரன் வெகு ணத்தோன்றிற்று. எது எப்படி இருந்தபோதிலும் இந்த நிலையில் தமிழ் நாட்டிலிருந்து துணிந்து இங்கு வந்தார்களே, அவர்களின் தைரியத்தை நாம் பாராட்ட வேண்டும்.

### பாட்டும் தாளமும் படுமோசம்

வாத்தியக் கோஷ்டியினரைக் கலைஞர்கள் என்றே எண்ணத் தோன்றவில்லை. எஸ். துரைராஜ் என்பவரும் வி. ஆர். சரஸ்வதி என்ற பெண்ணும் பாடினார்கள். பரிதாபமாக இருந்தது. வேறு விதமாக அதைச் சொல்ல முடியவில்லை. தாளமும் சரஸ்வதி கையில்தான். அவர் ஏதோ பாடுவார். நடன மணிகள் ஏதோ ஆடுவார்கள். அவர் துரித கதியில் தாளம் முழக்குவார். அவர்கள் சாவதானமாக மிதிப்பார்கள். சலங்கை ஒலிக்கும் தாளச் சத்தத்துக்கும் மிருதங்க முழக்கத்துக்கும் பாட்டின் பதவெட்டுக்கும் எட்டாம் பொருத்தமாக இருக்கும். முதலிருந்து கடைசிவரை இதே நிலைமைதான்.

### இருட்டடிப்பு

ஒலி, ஒளி அமைப்பாளரை பற்றியும் ஒரு வார்த்தை. எந்த நடனத்தையும் இருட்டில் ஆரம்

(13-ம் பக்கம் பார்க்க)

அற்புதமாகச் செய்திருக்கிறார்.

### சூர்யகலாவின் தழுக்கு மினுக்கு

பாலாஜி, தேவிகா, சூர்யகலாவும் நன்றாக நடிக்க முயன்றிருக்கிறார்கள். ஆனால் முழு வெற்றி கண்டுவிடவில்லை. பாலாஜிக்கு "பாவம்" வர மறுக்கிறது. தேவிகாவுக்கு முகம் மலர மறுக்கிறது. சூர்யகலா விரித்த சடையோடு கருந்துணியில் காட்சி தந்து வெருள வைக்கிறார். ஒரேவித ஆட்டத்தை வைத்துக்கொண்டு தழுக்கு மினுக்கோடு சமாளிக்க முயற்சிக்கிறார்.



நடிகை சூர்யகலா

### அசம்பாவிதம்

மாமியோடு மருமகன் ஏறுக்குமாறாகப் பேசுவது; அண்ணன் முன்னிலையிலேயே தம்பி அதிகப்பிரசங்கியாக மாறிவிடுவது போன்ற அசம்பாவிதங்கள் படத்தில் இடம் பெற்று விட்டன. இன்னுமொன்று: கணவன் காதலி மீது வெறுப்புக்கொண்டு கைப்பிடித்தவளை நாடி ஆசையோடு ஓடிவந்துபார்த்தால் ஆளைக் காணவில்லை. கடிதம் கிடைக்கிறது. முக்கியமான இந்தக் கட்டத்தில் படத்தின் விறுவிறுப்புபாதிக்கப்படுகிறது. மனைவி அங்கு இருந்து தன் கட்சியை எடுத்துரைத்து கணவனுடைய குற்றத்தை வலியுறுத்தியிருந்தால் நன்றாகவும் பொருத்தமாகவுமிருந்திருக்கும். மற்றும் பண்டரிபாயை ஒரு நிமிஷத்துக்குத்தானும் மேல் நாட்டு நடனம் ஆடச் செய்திருக்க வேண்டியதில்லை.

### பாட்டும் வசனமும்

"மேலே பறக்கும் ராக்கட்டு மின்னிப் பூச்சி ஜாக்கட்டு", "அமிர்த யோகம் வெள்ளிக்கிழமை" "ஆனு ஆவன்னு" "டிங்கிரி டிங் காலே மீனாட்சி" ஆகிய பாடல்கள் ஜனரஞ்சகமானவை.

முரசொலி மாறனின் வசனம் கரடு முரடாக இல்லாமல் எளிதானதாக இருக்கிறது. ஒலிப்பதிவுக்கோளாறோ என்னவோ சில கட்டங்களில் பாத்திரங்கள் பேசுவது தெளிவாகக் காதில் விழவில்லை.

### டைரக்ஷன்

டைரக்டர் யோகானந்தத்துக்கு இது ஒரு வெற்றிப் படமே, சந்தேகமில்லை. இலட்சிய நடிகரையும் குடிகாரர் நடிப்புக்கு மிகவும் பொருத்தமானவர் என்பதை எடுத்துக்காட்டுகிறது. அனைவரும் பார்த்துத்தான் ஆக வேண்டும். கொழும்பு கிங்ஸ்லியில் காட்டுகிறார்கள்.

## தொழிற் சங்க...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

தவர் அல்லாத மற்றையோருக்குச் சந்தர்ப்பம் இடையாது. அத்தகைய தொழிற்கலைகள் பாரம்பரியச் சொத்தாகக் காட்சியளித்தன. வருவாய் குறைந்த எளிய தொழிற்கலைகளை விரும்பியவர் எவரும் மேற்கூறிய கட்டாயப் பயிற்சி மூலம் பயின்று அப்பியாசிக்க முடியும்.

இத்தகைய கட்டுப்பாடு நிறைந்த அமைப்பின் கீழேயே தொழிலாளர் தொழிலைப் பயிலவோ அப்பியாசிக்கவோ முடிந்தமையால் அவர்களுக்கு தங்கள் வேதனங்களையிட்டுக் கிளர்ச்சி செய்ய தக்க சுதந்திரம் இருக்கவில்லை. எனினும் தொழில் பயில்வதற்கும் அப்பியாசித்தற்கும் இத்தகைய கட்டுப்பாட்டைத் திணித்த சமூகம் அத் தொழிலாளரின் நயங்களை முற்றாகப் புறக்கணித்ததென்று கூற முடியாது.

கட்டாயப் பயிற்சியை நிறுவிய சட்டங்களிலேயே தொழிலாளர் பயில்வோரின் வேதனங்கட்கும் வகை செய்யப்பட்டிருந்தது. அத்தகைய சட்டங்கள் மூலமாக நேரடியாகவோ அன்றி அதன் பிரகாரம் நிறுவப்பட்ட நீதி மன்றங்கள் மூலமாகவோ ஒவ்வொரு தரத் தொழிலாளர்க்கும் உரிய வேதனங்கள், அவர்கள் ஆக்கும் பொருட்களின் விலைவாசிகள் ஆகியன நிதானிக்கப்பட்டன.

(தொடரும்)

சிக்கனமானது! பிரகாசமுள்ளது!
உங்கள் றேடியோவில் திறமையான முறையில் கேட்பதற்கு
நாஷனல் றேடியோ பாட்டறியைப் பாவியுங்கள்.



ஸ்டாக்கிஸ்ட்ஸ்:- எஸ். டீ. மொஹமெட் ஹாஜீயார்,
70, டாம் வீதி, கொழும்பு-12.
143, மெயின் வீதி, காலி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ராஜாமணி....

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பித்து இடையிடையேஇருட்டடிப்புச் செய்வதே இவரின் ஒரே கவலையாக இருந்தது. ஸ்பொட் லைட்டை வைத்து அவர் படுத்தியபாடுசொல்லி முடியாது இந்த லட்சணத்தில் நிற ஒளிவேறுகொடுத்து உள்ளத்தையும் கெடுத்தார். சாதாரண வெள்ளை வெளிச்சத்தோடு விட்டிருந்தால் எவ்வளவோ மேலாக இருந்திருக்கும். கீழே அடித்தள லைட் (Foot Light) அளவுக்கு அதிகமாக வேலை செய்தது. ஆனால் மேலே டொப்லைட் (Top Light)இல்லை. இதுஎன்ன முறையோ நாமறியோம்.

### ஒளி அமைப்பில் முறைகேடு

சாதாரணமாக மேடைக்கு 100 வீதம் லைட் தேவைப்படுமானால் கீழே 40 வீதம் அடித்தள லைட்டும் மேலே 60 வீதம் டொப லைட்டும் பொருத்தி ஒளி பெறுவது தான் வழக்கம். அப்படிச் செய்யாவிட்டால் மேடையில் தோன்றுபவர்களின் உருவத்தை உள்ளது உள்ளபடி பார்க்க முடியாது. சிறிது விகாரமாகத் தெரியும். அதற்காகத்தான் இவர் இப்படிச் செய்தாரோ என்னவோ!

### 'மைக்'கின் ஓலம்

இனி, அவர் மேற்பார்வையில் இருந்த ஒலி பெருக்கியும் ஒத்துழைக்கவில்லை. பாட்டுக்காரரின் கதறல் போதாதென்று அது வேறு இடையிடையே ஓலமிட்டது. இத்தனை குறைபாடுகளை நாம் சுட்டிக் காட்டியது அன்று கச்சேரிக்குப் போகாதிருக்கும் வாய்ப்புப் பெற்ற நேயர்களுக்கு வியப்பாக இருக்கலாம்.

### நேயர்கள் தலைவிதி

தினப் பத்திரிகைகளெல்லாம் முதல் பக்கங்களில் படங்களும் செய்திகளும் பேட்டிகளும் பாராட்டு விமர்சனங்களும் வெளியிட்டு ஏக அமர்க்களப்படுத்தியதைக் கொண்டு வாசகர்கள், சம்பந்தப்பட்ட நாட்டிய ரமணிகளைப்பற்றிப்பெரிதாக எண்ணியிருக்கவே செய்வார்கள். அது நேயர்கள் தலைவிதி. நாமென்ன செய்யலாம்!

### தினப் பத்திரிகைகள்

வெளி நாட்டிலிருந்து கலைஞர் என்ற பெயரில் எந்தக் குப்பை கூளம் வந்தாலும் சரி, தகுதியைப் பாராது சர்ட்டிபிக்கேட் வழங்குவது போல முன்பின் யோசிக்காமல் மனதில் தோன்றியதையெல்லாம் பத்திரிகையில்போட்டு விளாசி விடுவார்கள் நம் நாட்டுத் தினப்பத்திரிகை நண்பர்கள். எதற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கலாம் என்று அளந்து கொடுக்கும் பழக்கம் இன்னும் வரவில்லை.

### கேவலம்

உதாரணத்துக்குச் சொல்வதானால் இங்கு வந்துள்ள நால்வரும் இலங்கைப் பத்திரிகைகளில் தம்மைப் பற்றிப் படங்கள் சகிதம் எழுதப்பட்டதை யெல்லாம் கொண்டுபோய் தமிழ் நாட்டில் காட்டிப் பெருமையடிக்கும்போது அங்குள்ளவர்கள் நமது பத்திரிகைகளைப் பற்றி என்ன நினைப்பார்கள்? நம்மவர்களின் கலாரசனையைப் பற்றி என்ன நினைப்பார்கள். அங்கே இருந்த இடமே தெரியாமல் மறைந்து இருந்தவர்களை நாம் இங்கு பிரபல்யப் படுத்துகிறோம். அதற்குஅவர்களிடம் போதிய திறமை இருக்குமானால் நாம் செய்வது பெரிய தொண்டாக இருக்கும். அப்படி இல்லாத பட்சத்தில் நமது செயல் நம்மை நாமே தாழ்த்திக் கொள்வதாக ஆகாதா?

—கே. கே. ஆர்.

## கைலாசம்.....

(7-ம்பக்கத் தொடர்ச்சி)

திசையை அறியுமுன் மேலிருந்து உருண்டு வந்த சிறு கல் புஜத்தின்மேல் விழுந்தது. சிறு வலியை ஆக்கியது. நான்காவது முறையாக கல்லால் தாக்குண்டதை எண்ணிப் பார்த்தேன். வாழ்வில் ஏதோ 'கற்கண்டம்'போலும் என்று நினைத்துக்கொண்டே அப்பால் நடந்தேன்.

### நெஞ்சு நிடுக்கிடும் காட்சி

வழியில் நெஞ்சு திடுக்கிடும் காட்சியொன்றைக் கண்டு பயந்தேன்; வியந்தேன். முரட்டுத்தனமாகத் தலைவிரிகோலத்துடன் வரும் காளிகங்கைக்குக் குறுக்காக கனமான கயிறு ஒன்று கட்டப்பட்டுள்ளது. அதில் முக்கோணக் கழி ஒன்றைக் கோத்துள்ளனர். அக்கழியில் கால்களை மாட்டிக்கொண்டு கைகளால் மேல் கயிற்றைப் பற்றிக்கொண்டு தொங்கும் ஒரு ஆள் நட்டாற்றில் காணப்படுகின்றார். வேறொரு சிறிய ஆனால் நீளமான கயிற்றின் சரி மத்தியைக் கழியில் கட்டி ஒரு நுனிஅக்கரையில் உள்ள ஆளிடம் மறு நுனி இக்கரை ஆளிடமும் இருக்கின்றது. அக்கரையில் கழியில் மாட்டிக்கொண்ட ஆளை இக்கரைக்கு இழுத்து ஆறு தாண்ட வைக்கிறார்கள். அவர் உண்மையிலேயே ஆறு தாண்டுகிறாரா அல்லது மரணத்தைக் கடக்கிறாரா! மலைமக்கள் நெஞ்சமே உரம். மேலும் நடந்து தார்ச்சூலாவை யடைந்தோம்.

(தொடரும்)

## தமிழர் ஆசிரியர் சங்கத்தில்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

டிலும் 12வாக்குகளும் அதிகமாகப்பெற்று திரு தியாகராசா மீண்டும் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

### தலைவர் தேர்தல் அ. க. சு. வாபஸ்

அடுத்தபடியாக நடந்த தலைவர் தேர்தலுக்கு நின்ற திரு ஏ. கே. சுப்பிரமணியம் தமது பெயரை வாபஸ்பெற்றுக்கொண்டார். மகாலிங்கத்தின் தோல்வி அவரை வேறு வழியின்றி அப்படிச் செய்யத் தூண்டியது என்றார்கள் சிலர். இன்னும் சிலர் பிரஸ்தாப தேர்தலில் போட்டியிட்ட சந்திரசேகரிக்கு இருந்த ஆதரவைக்கண்டு வெற்றிகரமாகப் பின் வாங்கிவிட்டார் என்று கேலியாகப் பேசிக்கொண்டார்கள். இவரைத் தொடர்ந்து இன்னும் சிலரும் தமது பெயர்களை வாபஸ்பெற்றுக்கொண்டார்கள். ஈற்றில் திரு சந்திரசேகரிக்கும் திரு டேவிட் ஐயாத்துரைக்குமிடையே போட்டி நடைபெற்றது. திரு சந்திரசேகரி 46 வாக்குகள் அதிகப்படியாகப் பெற்றுத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

### காரண கர்த்தர்

இவர்தான் அகில இலங்கை அரசினர் தமிழர் ஆசிரியர்சங்கம் தோன்றுவதற்கே காரணமாயிருந்தவர் என்பதும் கடந்த காலத்தில் பொதுச் செயலாளராக இருந்து பணி செய்துள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கனவாகும். இரண்டு தேர்தல்களும் முடிந்ததும் திரு தியாகராஜாவின் கோஷ்டியினர் என்று சொல்லப்பட்டவர்கள் வெற்றி வெற்றி என்று சொல்லிக்கொண்டே அங்குமிங்குமாக வீறு நடை போட்டுக்கொண்டிருந்தார்கள்.

### இறுதி முடிவுகள்

ஏனைய உத்தியோகத்தர் தேர்தல்களில் யாரும் அவ்வளவாக அக்கறை காட்டவில்லை. சாதாரணமாக அவை நடைபெற்றன. சங்க உத்தியோகஸ்தர்கள் விவரம் வருமாறு:-

தலைவர் திரு. பொ. சந்திரசேகரி; உபதலைவர்கள்: திருவாளர்கள் டி. கிருஷ்ண பிள்ளை, பி. ஈ. டேவிட் ஐயாதுரை, ஏ. கே. சுப்பிரமணியம்; பொதுச்செயலாளர்: திரு. சு. தியாகராசா; உபசெயலாளர்கள்: திருவாளர்கள் ஏ. தர்மலிங்கம், வி. கே. சகரபாதம்; பொருளாளர்: திரு. எஸ். குருகுலசிங்கம்; உபபொருளாளர்கள்: திருவாளர்கள் எம். கந்தசாமி, எம். வேலுப்பிள்ளை. மற்றும் 20பேர் நிர்வாகசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

[உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. ஏ. கே. சுப்பிரமணியம் தேர்தல் முடிவுகளைச் சுதந்திரனுக்கு அனுப்பியுள்ளார். —ஆசிரியர்]

கூட்டம் மாலையில் முடிவடைந்ததும் பிரதிநிதிகளுக்கு உணவு அளிக்கப்பட்டது.


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!




எல்பின்ஸ்டன்

றெக்ஸி

அசோகமாலா (நீர்கொழும்பு)

வேல்ஸ் (கண்டி)

கிங்ஸ் (பதுளை)

வின்ட்சர் (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன் பத்மினி நடித்த

தங்கப் பதுமை (1958-ம் வருடச் சிறந்த தமிழ் படம் என பரிசுபெற்றது)

செல்லமஹால்

ஜூன் 17-ம் திகதி புதன் முதல் எம். ஜி. இராமச்சந்திரன் நடிக்கும்

மதுரை வீரன்

விடுதலை வேட்கை கொண்ட தமிழ் உள்ளங்களுக்கு அரிய விருந்து!

| | | | | |
|---|---|---|---|---|
| சென்ட்ரல் | ராணி | ஒடியன் | ஜோதி | லிபர்ட்டி |
| (மருதானை) | (யாழ்ப்பாணம்) | (கல்கிசை) | (திருகோணமலை) | (பதுளை) |

ஹஜ்ஜி பெருநாளை முன்னிட்டு மகத்தான வெளியீடு!

17-ம் திகதி புதன் முதல் குதூகல ஆரம்பம்

சிவகெங்கைச் சீமை

நடிகர்கள்: எஸ். எஸ். ராஜேந்திரன், எம். என். ராஜம், வரலக்ஷ்மி, கமலா லக்ஷ்மணன்.
கதை - வசனம் - பாடல்கள் - தயாரிப்பு கண்ணதாஸன்.

கடைசி வாரம்!

சென்ட்ரல் (மருதானை)

தினசரி பிற்பகல் 3, மாலை 6-15, இரவு 9-30.
ஞாயிற்றுக் கிழமை பகல் 10-15 மணிக்கும் காண்பிக்கப்படுகிறது.

சால்டி-கா-நாம் காடி

அசோக் குமார், மதுபாலா, ... குமார்,
கிஷோர் குமார், ஹெலன், ... நடிக்கும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டது கற்க.....

இந்தப் பகுதிக்கு நேயர்கள்கூட வினாக்களும் விடைகளும் எழுதி அனுப்பலாம். ஏற்றவை அவரவர் பெயர்களுடன் வெளியிடப்படும்.

ஆசிரியர்: சுதந்திரன

1. தாவரங்களுக்கும் உணர்ச்சி உண்டு என்பதை முதன் முதலில் நிரூபித்துக் காட்டிய விஞ்ஞானி யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

2. பொதுவாகப் பறவைகளுக்குப் பல் இல்லை. ஆனால் நாம் அறிந்த சாதாரண பறவை ஒன்றுக்கு உண்டு. அது எந்தப் பறவை?

3. கண்ணாடி செய்வதற்குத் தேவையான மிக முக்கிய மூலப் பொருள் எது?

—ஆ. சிவசோதி, பருத்தித்துறை

4. சோழ மன்னர் ஒருவர் தாம் போர்க்களத்தில் இறக்கும் தறுவாயில் தம்முடைய மகனிடம் பின்வருமாறு சொல்லிவிட்டு ஆவிதுறந்தார்:-"நீ வீரம், மானம், மரியாதையோடு வாழ வேண்டும், பிறரையும் அப்படி வாழவைக்க முயல வேண்டும்" இப்படிச் சொல்லிச் செத்த மன்னரின் பெயர் என்ன?

—க. நல்லதம்பி, சந்திவெளி

5. உலகில் முதன் முதலில் இளம் விவசாயிகள் கழகம் எங்கே ஆரம்பிக்கப்பட்டது?

—க. சொக்கலிங்கம், ஆரயம்பதி

# ..............பண்டிதனுவான்

## புலவரின் நகைச் சுவை

சிறந்த புலவர்கள் சோகம், வீரம், காதல், நகை போன்ற பல் சுவைகளும் ததும்பப் பாடும் தன்மையுடையவர்கள். சில புலவர்கள் சில சுவைகளிலே தான் நன்கு பாடுந்திறம் பெற்றவராய் இருப்பார்கள். வசை பாடுவதில் திறமை வாய்ந்த காளமேகம் என்ற புலவர் நகைச்சுவை மிக்க பல பாடல்கள் பாடியுள்ளார். அவற்றைப் படிக்கையில் அகம் மகிழும்.

திருநாகை என்ற ஒரு ஊரில் நடனமாது ஒருத்தி இருந்தாள். அவளுடைய குரல் மிகவுந் தடிப்பானது. அலறுவது போற் கேட்கும்.

இத்தகைய குரல் உடையவள் ஒரு நாள் ஒரு பாட்டொன்றைப் பாடலானாள். பக்கத்தே ஒரு வண்ணான் குடியிருந்தான். அவனிடம் ஒரு கழுதை இருந்தது. அது முதல் நாள் காணமற் போய் விட்டது. இவள் பாடியது அவனுக்குக் கேட்டது. 'என் கழுதையைக் கண்டு விட்டேன்' என்று சத்தமிட்டுக் கொண்டு கொஞ்சம் வைக்கோலுடன் பாட்டுக் கேட்ட இடத்திற்கு ஓடி வந்தானும். அங்கு அவன் எதைக் கண்டிருப்பான் என்பதைச் சொல்லத் தேவையில்லையே!

இந்த நிகழ்ச்சியை நகைச் சுவைப் பாகிலே குழைத்து நற்றமிழ் வெண்பா உருவில் தருகிறார் புலவர்:

"வாழ்த்து திருநாகை
வாகனதேவடியாள்
பாழ்த்த குரலெடுத்துப்
பாடினாள் — நேற்றுக்
கழுதை கெட்ட வண்ணான்
கண்டேன் கண்டேன்
என்று
பழுதையெடுத்தோடி
வந்தான் பார்."

இதை நினைக்க நினைக்கச் சிரிப்புச் சிரிப்பாகவே வருகிறதல்லவா? புலவர் வாழ்க!

—"தாமரைத்திவான்"

வ. ம. இ. 105.
கந்தகெதரை.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 4.

பெயர்.......................................................

பாடசாலை.......................................................

விலாசம்.......................................................

.......................................................

.................................... ....................................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்




நாலாம் தம்பி:

## பிரிவின் உணர்ச்சி (5)

"நிசாரி"

சூரியன் மறைந்தான் இராமனும் சீதையும் தருப்பைப் புல்லையே படுக்கையாக அமைத்துச் சயனித்திருந்தனர். அவர்கள் அருகில் வில்லை ஏந்திய படி சற்றும் இமையைக் கொட்டாமல் இலக்குவன் காவல் புரிந்து நின்றான்.

தன் படைகள் யானைக் கூட்டங்கள் போன்று சற்றே விலகி நிற்க, குகன் வில்லில் அம்பைப் பூட்டிக் கொண்டு நின்றான். அவன் நெஞ்சு வெம்பி இரங்கியது. அவனும் இலக்குவனைப் போலவே இமைக்காது நின்றான். அவன் தன் தலைவனை இராமனுடைய நிலையையும் நினைந்து நினைந்து மனம் வெதும்பினான்.

இராமன் குணத்தை மட்டுமே நினைத்துப் பார்த்த குகன், இராமன்மேல் மாறு அன்புகொண்ட இலக்குவனையும் நினைக்கிறான். தன் அண்ணன்மேல் வைத்த அன்பினால் அவனைக் கண் கொட்டாமல் கவனித்துப் பார்த்துக்கொண்டும், கண்கள் அருவி சோர கலங்கி நிற்கும் இரக்கமே உருவான இலக்குவனைக் காண்கிறான் குகன்.

விடிந்தது. காலைக் கடனை முடித்தான் இராமன். பின் குகனை நோக்கி, "நாங்கள் அக்கரை சேர்வதற்கேற்ற நாவாயைக் கொண்டுவா" என்றான். இராமன் அக்கரை சென்று விடப் புகப்போகிறான் என்பது குகனுக்குத் தெளிவாக விளங்கியது. அப்போது அவனையறியாது ஒரு உணர்ச்சி அவனுள் நெகிழ்வதை உணர்ந்தான். அதுதான் 'பிரிவு.' இராமனைப் பிரியவேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டதை உணர்கிறான். இராமனைப் பிரிந்து வாழ்வது இயலாத காரியம் என்று அவனுக்குத் தோன்றி விட்டது. ஆகவே தன் அன்பின் பிரார்த்தனையாக இராமனுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறான். அவ்வேண்டுகோளை அவனால் வாயால் சொல்லமுடியவில்லை. அவனுடைய பேச்சிற்கு முன் உணர்ச்சி புகுந்து கொண்டது. அதன் பயனாக மெய்ப்பாடு ஏற்படுகிறது. குகனுடைய கண்களிலிருந்து நீர் கொப்புளித்துவழிகிறது.

தன் பக்திக்கு உரியவன் இராமன். குணக்குன்று அவன். அவனைச் சந்தித்து ஒருநாள்கூட ஆகவில்லை. 'அதற்குள் பிரிந்துவிடப் போகிறானே' என்ற துக்கம் குகனின் மனதைக் கவ்வி கவலையை உண்டாக்கியது. இராமனுடைய அடியினைப் பிரியும் ஆற்றல் இல்லாதவனாகிவிட்டான் குகன். தன்னுடைய வேண்டுகோளைக் கூறிமுடிக்குமுன் இராமனின் காலடியில்விழுந்தான் குகன். பின் தன் வேண்டுகோளை விடுக்க ஆரம்பிக்கிறான்.

## நாட்டுப் பணி செய்ய வாட்டங் கொள்ளாதே

(க. நா. சண்முகநாதன்)

இனியேனுங் கண்விழிப் பாயே—எங்கள்
ஈழத்த மிழன்னை யீன்றநற் சேயே
(இனி)

நாளைத் தவறவி டாதே—எங்கள்
நல்லவுரிமை பெறமற வாதே
பேழை வயிறிதன் மீதே—மனம்
பேணி வளர்க்கத் தினம் விரும் பாதே
(இனி)

கோழை மனத்தைக்கொள் ளாதே—சுகம்
குன்றினும் வீரத் திறத்தையெள் ளாதே
நாளை வருமென் றிராதே - சொந்த
நாட்டுப் பணிசெய்ய வாட்டங்கொள் ளாதே
(இனி)

வீரர் கிளைவழி வந்தோம்—இன்று
வெந்து நொந்தவெறுங் கட்டைக ளானோம்
காரணங் கேட்டா லறியோம் – கட
தாசிதின் பூச்சிகள் போலவே வாழ்ந்தோம்
(இனி)

ஆராய்ந்து படிப்பது மில்லை—அதை
அறிவென்னுந் துடுப்புக்கொண் டலசுவதில்லை
விராய்ந்து தேயுதெம் மூளை—அதால்
வெற்றிக்கு நல்ல வழிகாண வில்லை
(இனி)

ஊக்க முடையவன் வீரன்—தினம்
உண்மைகள் பேசு பவன்நல்லு தாரன்
ஆக்கம் வகுப்பவன் தீரன் மக்கள்
அடிமை விலங்கை யறுப்பவன் சூரன்
(இனி)

குட்டிக்கதை:

## பூசணிக்காய்த் திருடன்

ஓர் ஊரிலே ஒரு குடியானவன் இருந்தான். அவன் பூசணித் தோட்டம் போட்டிருந்தான். நிறைய சாம்பல் பூசணிக்காய்கள் காய்த்திருந்தன அதன் மேல் கண் வைத்திருந்த ஒரு திருடன் ஒரு நாள் இரவு அந்தத் தோட்டத்திற்குள் புகுந்து காய்களைத் திருட ஆரம்பித்தான். சத்தம் கேட்டு குடியானவன் வந்து தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தான். அதைக் கண்ட திருடன் பூசணிக்காய் மேலிருந்த வெள்ளைச் சாம்பலை தன் மேலெல்லாம் பூசிக் கொண்டு கண்களை மூடி உட்கார்ந்து "சிவ சிவா...சிவ சிவா" என முணுமுணுத்துக் கொண்டிருந்தான். குடியானவன் "யாரைய்யா நீ? என் தோட்டத்தில்என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என வினவ, திருடன் "ஆ! இது கைலாசமா, பூலோகமா! கைலாயத்தில் தபசு செய்து கொண்டிருந்தேன். இது வேறு இடமாய் இருக்கிறதே!" என்று சொன்னான். குடியானவன் பயந்து, "சுவாமி நீங்கள் ஒரு வேளை கைலாசத்தில் கண்ணை மூடிக் கொண்டு தபசு செய்கையில் தவறி விழுந்திருப்பீர்கள். எழுந்திருங்கள்" என வேண்டி அவனுக்கு னுக்கு வேண்டியன கொடுத்து அனுப்பிவைத்தான்.

—ஆ. மகாதேவா;
குரும்பசிட்டி.

### வளரும் வளர்மதி கண்டு!

மாணவர் உள்ளத்திலே மதி என்னும் அறிவு விளக்கை காட்டி தரணி புகழும் தமிழ் வளர வழி செய்யும் வளர்மதியே வண்டமிழ் பாலகர்களின் உள்ளத்தில் தமிழார்வத்தை ஊட்டிய வளர்மதியே உனக்கு என் நற்றமிழ் நன்றி.

— செ. அ மணிமாறன்
கிரிலப்பனை

## கண்டது கற்கப் பண்டிதனுவான்

(விடைகள்)

1. விஞ்ஞானி சந்திரபோஸ். இவர் இந்தியாவைச் சேர்ந்தவர்.

2. வௌவால். வௌவாலைச் சிலர் மிருகம் என்றும் கூறுவர். ஆனால் உண்மையில் பறவை இனத்திலேயே இது சேர்க்கப்பட்டுள்ளது.

3. மண். இலங்கையைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணம் குடத்தனைப் பகுதியில் உள்ள மணல் கண்ணாடி செய்ய உபயோகிக்கும் மண்ணைச் 'சிலிக்கா' என்பர்.

4. பார்த்திப சோழர். இவர் சேர நாட்டு நரசிம்ம சக்கரவர்த்தியால் போர்க்களத்தில் கொல்லப்பட்டார்.

5. அமெரிக்காவிலே 1914-ம் ஆண்டில் முதன் முதலாக இளம் விவசாயிகள் கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாளர்...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கறியுமல் சகிதமாக எதிர்நோக்கி வந்தார்...

நான் அவரிடம் கேட்காமலே அவர் என்னைப் பற்றியும் நான் அந்தக் கிராமத்திற்குப் போன காரணத்தைப் பற்றியும் விசாரித்தார். நான் விவரத்தைக் கூறினேன். தெருவருகிலுள்ளவொரு மாமர நிழலில் என்னை உட்காரச் சொல்லித் தானும் உட்கார்ந்து கொண்டார், அந்த மனிதர்.

மூக்கு முட்டக் கள்ளுப் போட்டிருந்த அவருக்கு—அந்த வேளையில், என்னுடன் உரையாடுவது 'டேஸ்ற்' சாப்பிடுவதைப் போலிருந்திருக்கலாமோ—என்னவோ, யார் கண்டார்கள்?

அமுதனைப்பற்றி கதையளக்க ஆரம்பித்து விட்டார்.

"தம்பி! அமுதன் என்னுடைய அண்ணரின் மகன்தான்...ஆள்...ஒரு...சோம்பேறி! இந்த ஊரில் இவன் வயதொத்த பொடியன்களெல்லாம் ஆயிரக் கணக்கில் சம்பாதித்துக் கல்வீடு கட்டி, கார்—லொரி வைத்து எவ்வளவு நல்லாயிருக்கிருர்கள். இ...வ...ன்—சும்மாய் கலை கலையென்று பிதற்றுவதற்குத்தான் ஆள்!

''எந்த நேரமும் இரவு, பகலாக எழுதுவதிலும் கூட்டங்கள் கூட்டுவதிலுந்தான் வீண் காலம் போக்குவானேயொழிய நாலு சல்லி சம்பாதித்து நாலுபேரைப்போலே முன்னுக்கு வருகிற எண்ணங் கிடையாது தம்பீ! தின்னச் சோற்றுக்கு வழியில்லாதவனுக்குக் கலையென்ன—கலை யென்று கேட்கிறேன்!

"நாலு பிள்ளைகளுக்குத் தகப்பனுய்ப் போயும் நல்ல புத்தி வரவில்லை யென்ருல் இனி யெங்கே தம்பீ—இவனுக்கு அது வரப் போகிறது, சொல்லும் பார்ப்பம்?"

"நாளென்று சொல்லப் போகிறேன். கோபிக்க மாட்டீர்களே?"

"ஐயோ...என்ரை கடவுளே! நானேன் கோவிக்கிறேன்! நீ சொல்லுராசா சொல்லு!'' என்ருர்.

நான் ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து விட்டேன் அதற்கு அவர் எனக்கு அளித்தபாராட்டு இதுதான்:

"ஓகோ! நீயும் அவனைப் போல மினக் கெட்ட ஆள்த்தானென்று சொல்லு! இல்லாவிட்டால் இவ்வளவு தூரம் அவனைத் தேடி வருவியா? சரி, நீ போய்வா ராசா—போய்வா...'' என்று எனக்கு விடை தந்தனுப்பினுர், அந்தப் பெரியவர்!

இன்னும் கொஞ்சத் தூரம் சென்றேன். சில இளைஞர்கள் வந்தனர். அவர்களிடமும் அமுதனைப் பற்றி விசாரித்தேன். அவர்கள் அமுதனை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டிப் பேசினுர்கள்.

"நீங்கள் எழுத்தாளர் அமுதனைப் பாராட்டிப் பேசுகிறீர்கள்! உங்கள் கிராமத்தில் பிறந்து வளர்ந்து ஆற்றல் மிக்க எழுத்தாளனுய்த் திகழும் மிஸ்டர் அமுதன் கலைத் துறையில் முன்னேறுவதற்கு இதுவரையில் எந்த வகையில் நீங்கள் உதவி புரிந்திருக்கிறீர்கள்?''

"வெறுங்கை முழம் போடுமா அன்பரே! அவரின் அபிமானிகளாகிய நாங்களெல்லோரும் அன்ருடு உழைத்துச் சீவியம்பண்ணும் ஏழைகள். கலைத்துறையில் பண உதவி புரிந்து அவரை முன்னேற்றுவதென்பது எங்களால் முடியாத காரியம்......''

ஏன் முடியாதென்று கேட்கிறேன்? தனியொரு பணக்காரனுற் செய்துமுடிக்கவியலாதவொரு பெரிய காரியத்தை பல ஏழைகளின்-தொழிலாளர்களின் கூட்டுறவினுற் செய்து முடித்து விட முடியும். உங்கள் மத்தியில் கலை வளர்க்கும் பொது ஸ்தாபனங்களெதுவுமில்லை?''

"இருக்கிறதன்பரே! "கலையூர்—முத்தமிழ்க் கலா நிலையம்'' என்றொரு ஸ்தாபனத்தை அண்மையிற்ருன் தொடங்கியிருக்கிருேம். அமுதனவர்களுட்பட முற்போக்குச் சிந்தையுடையபல இளைஞர்கள் அதில் அங்கத்துவம் வகிக்கிருர்கள்!''

"சரி, சரி! மிகவும் மகிழ்ச்சி உங்கள் ஸ்தாபனத்தின் மூலம் ஒரு நிதி திரட்டி அமுதனின் எழுத்தோவியங்களை நூல்களாக வெளியிடலாமல்லவா?''

"வெளியிடலாந்தான். அது ப...ற்...றி...''

"நீங்கள் இதுவரையில் துணிந்து முயற்சிக்கவில்லை, அப்படித்தானே? இனிமேல் முயற்சிக்க வேண்டும்... முயற்சி திருவினையாக்கும். நாளை மறுநாள் ஒரு பொதுக் கூட்டம் கூடி இதைப்பற்றிப் பேசி முயற்சித்தாலென்ன?''

"அதற்கென்ன—முயற்சிப்போம்...இதுதான் மிஸ்டர் அமுதனின் வீடு...'' என்று அந்த இளைஞர்கள் அமுதனின் வீடு வரையிலும் என்னைக் கொண்டுபோய் விட்டுச் சென்றனர்.

நான் போன சமயம் அமுதன் வீட்டிற்தானிருந்தார். திடீர் விருந்தினனுகச் சென்ற என்னை அகமும் முகமும் மலர அமுதன் வரவேற்ருர். சித்திரப் பொற்சிலைகளென்ன அவருடைய மழலைச் செல்வங்கள் பலகாலம் பரிச்சயப் பட்டவர்கள் போல் 'மாமா' 'மாமா' என்று, என்னைச் சுற்றி வலம் வரத் தொடங்கி விட்டனர்.

இரண்டு நாட்கள் அமுதனின் அதிதியாகத் தங்கினேன். நான் அவரின் அபிமான வாசக நேயனுமாறுவதற்கு முன்பு பத்திரிகைகளில் வெளிவந்த அவருடைய சிருஷ்டிகளையும் மற்றும் அச்சுவாகனமேருத கலைப்படைப்புகளையும் அந்த இரண்டு நாட்களும் படித்துப் படித்து மகிழ்ந்தேன். மூன்ரும் நாள்: கலையூர்—முத்தமிழ்க் கலா நிலையத்தினர் ஒரு பொதுக் கூட்டம் கூடினுர்கள். கூட்டத்திற்கு அமுதனும் நானும் சென்றிருந்தோம். கிராமியக் கலைகளை வளர்ப்பது பற்றிக் கூட்டத்தில் பலரும் சொற்பொழிவாற்றினுர்கள்.

கடைசியாகப் பேசிய ஒரு ஆசிரியரின் சொற்பொழிவிற் சில பகுதிகள் என் நெஞ்சத்திற் கல்லின் அட்சரங்களாகப் பதிந்து விட்டன...

"எழுத்தாற்றல், விடாமுயற்சி, சந்தர்ப்ப வசதி, பண வசதியுள்ள ஒரு சிலர்தான் நம் நாட்டில் எழுத்துத்துறையில் முன்னேறியிருக்கிருர்கள். ஆனுல்...... எழுத்தாற்றலும் விடாமுயற்சியுமுள்ள பல நல்ல எழுத்தாளர்கள் சந்தர்ப்ப வசதியும், பண வசதியுமில்லாத காரணத்தால் குடத்து விளக்குகளாகவே மறைந்து வாழ்கிருர்கள்.

"வல்லிருளைப் போக்க நல்லொளி பரப்பும் சக்தி வாய்ந்த தீபம் போன்றவன் தான் கலைஞன். தீபம் ஒளி பரப்பும்பொழுது, 'நல்ல வெளிச்சம்' என்று பாராட்டிப் பயனடைவார்கள் பிறர். ஆனுல், தீபத்திற்குத் திரி போட்டு எண்ணெய் யூற்றி துடைத்துத் தனக்கும் பிறர்க்கும் அதைப் பயன்படுத்த வேண்டிய கடமை விளக்குச் சொந்தக்காரனைச் சார்ந்தது. அஃதே போல நம் நாட்டுக் கலைஞனிடமுள்ள ஆற்றலையும் நல்ல முறையில் வளர்த்து நமது நாட்டுக்கும் உலகத்துக்கும் அவனைப் பயன்படுத்த வேண்டியது நமது கடமை.

"நமது நாட்டில்தலைசிறந்த கலைஞர்கள் தோன்றவில்லை யென்ருல்—அது, முழுக்க முழுக்க நமது தவறுதான்; நமது ரசிகத் தன்மையின் தவறுதான். காலப் போக்கிற்கேற்றவாறு நமது ரசிகத் தன்மையின் போக்கிற் புதுமை காணவில்லை யென்ருல்—எதிர் காலத்தில், "நம் நாட்டிலும் கலைஞர்கள் இருந்தார்கள் — இருக்கிருர்கள்'' என்று கூறுவதற்கே அருகதை யற்றவர்களாகி விடுவோம்...'' அந்த ஆசிரியருடைய பேச்சிலிருந்த இப்படியான பகுதிகள் என் நெஞ்சிலிடம் பெற்றன.

நான் அமுதனின் வீட்டுக்குப் போய்த் திரும்பியபின் அமுதன் என் வீட்டுக்கு வந்தது வரையுமுள்ள மூன்று மாத காலத்துக்கும் எனக்குமவருக்குமிடையில் கடிதப் போக்கு வரத்தும் நடைபெற முடியாமல் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்கள் தடை செய்து விட்டன.

ஃ

"இதோ எனது கன்னி நூல் நண்பரே!'' என்று, ஒரு புத்தகத்தைத்தந்து, என் சிந்தனைப் பரியின் ஓட்டத்தை அமுதன் தடுத்து நிறுத்தினுர்.

ஒரு எழுத்தாளரின் பெயரைத் தாங்கி எத்தனையோ நூல்கள் வெளிவரும் இக்காலத்தில், அமுதனின் பெயரைத் தாங்கி ஒரேயொரு 'சிறுகதைத் தொகுப்பு நூல்' வெளிவந்தது அப்படியொன்றும் பிரமாதமான காரியமில்லைத்தான்.

''காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு'' என்பதையும், "ஒரு கலைஞனின் வளர்ச்சி அவனுடைய தாய் நாட்டு மக்களிடம்தான் தங்கியுள்ளது!'' என்பதையும் அமுதனின் வெற்றிப் புன்னகை எடுத்துக்காட்டியது. மற்ற நண்பர் அருகில் இல்லையே என்று அப்போது சிறிது கவலைப்பட்டேன்.

# கழகச் செய்திகள்

## அருள் நெறித் திருக் கூட்டம்

மட்டக்களப்பு, அருள் நெறித் திருக் கூட்டத்தினரால் வள்ளுவர் தினத்தை முன்னிட்டு மாணவர்கட்கிடையில் பலவித போட்டிகள் நடாத்தப்பெற்றன.

கல்லடி உப்போடை இ. கி. ச. பெண்கள் பாடசாலை மண்டபத்தில் நடந்த இப் போட்டிகளில் மட்டக்களப்புப் பகுதியிலுள்ள பல பாடசாலைகள் கலந்து கொண்டன. பேச்சுப் போட்டிக்கு முதற் பரிசு தங்கப் பதக்கமும், எழுத்துப் போட்டிக்கு முதற் பரிசு வெண்பட்டாடையும், ஏனைய பரிசுகளாகப் புத்தகங்களும் கொடுக்கப்பட்டன.

பேச்சுப்போட்டி (1) செல்வன். வீ. மகாலிங்கசிவம், (2) செல்வி. க. மகேஸ்வரி, (3) செல்வி. ந. உமாதேவி.

எழுத்துப் போட்டி (1) செல்வி. பொ. அருளம்மா, (2) செல்வி. ந. உமாதேவி.

திருக்குறள் மனனப் போட்டி 1 செல்வி இ. சாந்தினிதேவி, (2) செல்வன். ந. கணேசன், (3) த. புஷ்பராணி.

திருக்குறள் இசைப் போட்டி மேல் பிரிவு (1) செல்வன். வீ. பாலச்சந்திரன், (2) செல்வன். தி. சோதி, கீழ்பிரிவு (1) செல்வி. வீ. வாலாம்பிகை, (2) செல்வி. சி. தர்மதேவி.

## ஆலயப் புனருத்தாரண சபை

மட்டக்களப்பு கல்லடி-உப்போடை நொச்சிமுனை ஸ்ரீ சித்திவிஞயகராலய புனருத்தாரண சபைக் கூட்டம் 18-5-59-ல் திரு. க. நடராஜன் தலைமையில் நடைபெற்றது.

ஆலய புனருத்தாரணம் சம்பந்தமான பல ஆரம்ப நடவடிக்கைகள் பற்றி ஆலோசிக்கப்பட்ட பின், பின் வருவோரைக் கொண்ட ஒரு செயற்குழு தெரிவு செய்யப்பட்டது.

தலைவர்: திரு. க. நடராஜன் (தலைமை ஆசிரியர்), உபதலைவர்: திரு. க. உ. வே. கதிர்காமத்தம்பி, காரியதரிசி: திரு. க. சி. சிவலிங்கம், தனுதிகாரி: திரு. கா. நல்லரெத்தினம். இவர்களுடன் 7 பேர் கொண்ட திருவாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

—

## தனியந்துரை தோட்டம்

பூண்டுலோயாவைச் சேர்ந்த தனியந்துரை தோட்ட கீழ்ப்பகுதியிலுள்ள பாரதி இராப்பாடசாலை மாணவ, மாணவிகளாலும், பாட்டாளித் தோழர்களாலும் வள்ளுவர் விழா தோழர் எஸ். இராசன் தலைமையில் 22-5-59ல் சிறப்புற கொண்டாடப்பட்டது. மாலை 6 மணிதுவக்கம் மாணவர்கள் வள்ளுவர் படத்தை நன்கு அலங்காரம் செய்து ஊர்வலமாகஎடுத்துவந்தார்கள்.

தமிழ் தாய் வாழ்த்துடன் விழா ஆரம்பமாகியது. கீழ்க்காணும் தோழர்கள் சொற்பெருக்காற்றினர்: திருவாளர்கள் அம்பிகாபதி, அய்யாதுரை, குழந்தைவேலு, ஆறுமுகம், பெரி. சுந்தரம், மு. சுந்தர், பெரி. பாண்டியன், மா. இராமசாமி, டி. எஸ். துரை, செல்வராசன், கே. வி. எஸ். மணி தங்கவேலு, மு. கருப்பையா, ஆசிரியர் வல்லிபுரம்.

—

## அபிவிருத்திச் சங்கம்

அட்டன் இராமகிருஷ்ண அபிவிருத்திச் சங்க கூட்டம் கடந்த 17-5-59ல் கூடிய போது கீழ்க்கண்ட பிரமுகர்களைக் கொண்ட குழுவொன்றை அமைத்து கலாசாலை அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. அபிவிருத்திக் குழுவில் திருவாளர்கள் ஏ. எஸ். ஜோன், எஸ். எஸ். நாதன், பி. சதாசிவம், டி. பி. ராமசாமி ஆகியோர் பணியாற்றுவார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

## சிவியா தெரு சன சமூக நிலையம்

"வள்ளுவன் குறளினை வையகம் எங்கும் வாரியிறையடா தமிழா'' என்ற பாரதியின் வேண்டுகோளை நாம் நிறைவேற்ற வேண்டுமாயின் ஆண்டுதோறும் வள்ளுவருக்குவிழா எடுக்கவேண்டும். ஒவ்வொரு வீடுகளையும் வள்ளுவரின் அறிவுக்களஞ்சிய சாலைகளாகமாற்றவேண்டும். வள்ளுவர் குறளின் மூலம் உலகமெல்லாம் பரந்து செறிந்திருக்கும் தமிழ் மக்கள் ஒன்று சேர வேண்டும்'' இவ்வாறு கடந்த 24-5-59ல் காந்தி நிலையம் சிவியா தெரு மேற்கு சன சமூக நிலையத்தின் சார்பில் நடத்தப்பட்ட வள்ளுவர் விழாவுக்குத் தலைமை தாங்கிய நிலையத் தலைவர் திரு செ. ப. ஜீவானந்தம் தமது முன்னுரையில் குறிப்பிட்டார்.

புவனேஸ்வரி அம்பாள் ஆலய நிர்வாகக் காரியதரிசி திரு ஐ. வாரித்தம்பி பேசுகையில் வள்ளுவர் விழா வையகம் எல்லாம் கொண்டாட வேண்டும் என்றும் நாம் குறளின் உட்பொருளை அறியவேண்டுமானுல் குறளைக்கட்டாயம் படிக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.

வள்ளுவர் விழாவை முன்னிட்டு நடத்திய கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்ற 1. த. தேவராசா 2. ஐ. சண்முகலிங்கம் 3. கி.க. குழந்தை விநாயகம், பேச்சுப்போட்டியில் வெற்றிபெற்ற 1. டா. தேவமதுரம் 2. ஐ. சண்முகலிங்கம் திருக்குறள் மனனப் போட்டியில் வெற்றிபெற்ற 1. ஆ. தனபாலசிங்கம் 2. டா. தேவமதுரம் ஆகியோர்களுக்கு திரு ஐ. வாரித்தம்பி பரிசுகள் வழங்கினுர். நிலைய உபதலைவர் திரு ச. இரத்தினம் நன்றியுரை கூறினுர்.

—

## இந்திய வழக்கறிஞருக்கு கொழும்பில் வரவேற்பு

கொழும்பு உவரி அருணேதய தாரகை சங்கத்தாரால் கடந்த 24-5-59-ல் பிரபல தென்னக வழக்கறிஞரும் ஞானதூதன் பத்திரிகை உப ஆசிரியருமான திரு. பெப்பின் பி. ஏ. பி. எல். க்கு ஜிந்துப்பிட்டித் தெரு முத்தமிழ் மன்றத்தில் ஒரு வரவேற்புக் கொடுக்கப்பட்டது. சங்கத் தலைவர் திரு. கா. லிகோரி பர்னுண்டோ, திரு. பெப்பினுக்கு மாலையிட்டு வரவேற்று பேசுகையில் அன்னுர் தென்னக கிராமங்களுக்கு செய்து வரும் அரிய பெரிய சேவைகளைப் பாராட்டிப் பேசினுர்.


உங்கள் நீடித்த எழிலுக்கு

'எலைட்'

சுப்பர்லோன் ஜோர்ஜட்

என்னும் அழகின் அணிகலனை அணியுங்கள்.

பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.

இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது

'எலைட்'

சுப்பர்லோன் ஜோர்ஜட்

அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.

குண்டன்மால்ஸ்,

லிமிட்டெட்,

கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அன்பர்கள் ஹஜ்ஜி பெருநாளை கொண்டாடுவதற்கு

# சினிமாஸ் தாபனத்தார்

ஜூன் மாதம் 17-ம் திகதி புதன்கிழமை வெளியிடுகிறார்கள்.

## கிங்ஸ்லி ◆ பிளாஸா ◆ நவா

வெம்பிளி (கண்டி) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) விஜிதா (மஸ்கேலியா) சரசாவி (அக்கரப்பட்டனு)



நடிகர்கள்: எஸ். எஸ். ராஜேந்திரன், பாலாஜி, எஸ். வி. ரங்கராவ், டி. ஆர். ராமச்சந்திரன் எம். கிருஷ்ணமூர்த்தி, ராகவன்.

நடிகைகள்: பண்டரிபாய், மைனுவதி, சூர்யகலா, தேவிகா, லட்சுமி பிரபா ராதாபாய்.

ஆகியோர் நடித்த

ஜூபிலி பிலிம்ஸ்

---

# அன்பு எங்கே?

---

நட்சத்திர நடிகர்கள்

ஜொலிக்கும் தீந்தமிழ் திரை விருந்து

சிறந்த நகைச்சுவைகாட்சிகள்

கண்கவர் "ராக்கென்ரோல்"

நடனம்

களிப்பூட்டும் இன்னிசை கீதங்கள்



பின்னணி பாடியவர்கள்:

டி. எம். சௌந்தரராஜன், ஏ. எம். ராஜா, சுசீலா, லீலா, ஜமுனுராணி, ராதா ஜெயலட்சுமி, பால சரஸ்வதி.

வசனம்: முரசொலி மாறன் டைரக்ஷன்: யோகானந்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு தட்டாதெரு, 196-ம் [illegible] நாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டா தெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 ஜூன் மாதம் 14-ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.